மார்ச் 2022

Vol.4, Issue 10 | Annual Subscription ₹ 420

@NewsRotary /RotaryNewsIndia

# ரோட்டரி நியூஸ்

INDIA
www.rotarynewsonline.org

Rotary



## ஓராண்டிற்கு மேல்
## போலியோ இல்லா பாகிஸ்தான்

# 11 ஆண்டுகளுக்குப்பிறகு ஒரு விலையேற்றம்

*அன்புள்ள வாசகர்களுக்கு*

*ரோட்டரி நியூஸ் இதழ்* 2011*லிருந்து விலை ஏறாமல் வெளியாகி வருகிறது. உண்மையில்,* 2014*ல் ஆண்டுச் சந்தா ரூ.*480*லிருந்து ரூ.*420 *ஆகக் குறைக்கப் பட்டது.*

*தாளின் விலை, பிற உள்ளீட்டு மற்றும் நிர்வாகச் செலவுகள் தொடர்ந்து உயர்ந்து வருவதால்,* RNT *வாரியம் சந்தா விலையை மாதத்துக்கு வெறும் ரூ.*5 *மட்டும் உயர்த்தத் தீர்மானித்துள்ளது. அதாவது, ரூ.*35*லிருந்து ரூ.*40.

*இதனால், வரும்* **ஜூலை 2022***லிருந்து ரோட்டரி நியூஸ் (ஆங்கிலம், ஹிந்தி மற்றும் தமிழ்) ஆண்டுச் சந்தாத் தொகை ஒவ்வோர் உறுப்பினருக்கும் ரூ.*420 *இலிருந்து (பல ரோட்டரியன்களுக்குப் பிடிக்காத தொகை இது!) ரூ.***480** *ஆக உயரும்.*

*மின் பதிப்புக்கான ஆண்டுச் சந்தா* **ஜூலை 2022** *முதல் ரூ.*360*லிருந்து ரூ.***420***க்கு உயரும்.*

*உங்கள் ஒத்துழைப்பு மற்றும் ஆதரவை நாங்கள் நாடுகிறோம்.*

*ஆசிரியர்*




*சந்தாத் தொகையை இணையத்தில் செலுத்தலாம்:*

Scan here to pay

**பெயர்:** Rotary News Trust

**வங்கி:** HDFC *வங்கி, மாண்டீயத் ரோடு, எழும்பூர், சென்னை*

SB **கணக்கு எண்:** 50100213133460

IFSC: HDFC0003820

*தொகையை அனுப்பிய பிறகு,* UTR *எண், சங்கத்துடைய பெயர், தலைவர்/ செயலாளருடைய பெயர், தொகை மற்றும் பரிமாற்ற நாளை மின்னஞ்சல் அல்லது வாட்ஸாப்மூலம் தயவுசெய்து பகிர்ந்து கொள்ளுங்கள்.*

*எங்கள் மின்னஞ்சல் முகவரி:* rotarynews@rosaonline.org
*வாட்ஸாப்:* 9840078074

சந்தாப் படிவத்தை இங்கிருந்து தரவிறக்கம் செய்யலாம். *https://rotarynewsonline.org/wp-content/uploads/2022/01/Subscription-Form-22–23.pdf*

# உள்ளே


**12 தீவிர போலியோ பாதிப்பு இல்லாத ஓராண்டை கடந்த பாகிஸ்தான்!**
*தாலிபன், பிற சவால்களை எதிர்த்துப் போராடியபடி ஜனவரி 2022ல் ஒருவருக்குக்கூட வைல்ட் போலியோ வைரஸ் வராத ஒரு முழு ஆண்டை நிறைவுசெய்தது பாகிஸ்தான்.*

**24 ஜல்னா ரோட்டேரியன்கள் நடத்திய மருத்துவ முகாம்**
*ஜல்னா-வில் நடைபெற்ற இந்த 7-நாள் மிகப் பெரிய மருத்துவ முகாமில் சுமார் 673 பேர் அறுவைச் சிகிச்சை பெற்றனர்.*

**32 பெங்களூருவில் RCCக்களின் சேவை**
*எல்லைகளைக் கடந்து சேவைத் திட்டங்களுடன் உதவுகிறது ரோட்டரி சமூகப் படை.*

**40 சிறப்பான முறையில் 50 ஆண்டுகளைத் தொடும் RC மெட்ராஸ் மிட்-டவுன்**
*இந்தச் சங்கத்தின் குறிப்பிடக்கூடிய திட்டங்கள், வருங்காலத் திட்டங்கள்: ஒரு பதிவு.*

**44 மௌனமானது இசைக்குயில்!**
*என்றும் நம் நினைவில் தங்கும் இசைப் பாடகி லதா மங்கேஷ்கருக்கு ஓர் அன்பான விடைகொடுத்தல்.*

**54 கர்தார்பூர் சாஹிப் குருத்வாராவிற்கு சென்ற ரோட்டரி உறுப்பினர்கள்**
*RC மன்சா ராயலைச் சேர்ந்த குழுவினர் பாகிஸ்தானிலுள்ள குருத்வாரா-வுக்குச் சென்றபோது, பாகிஸ்தான் ரோட்டரியன்களுடன் கலந்து பழகி மகிழ்ந்தார்கள்.*

**60 எழுத்தறிவுக்காக முசாபர்நகர் ரோட்டரி உறுப்பினர்களின் விடாமுயற்சி**
*தொடங்கி 24 ஆண்டுகளாகும் RC முசாபர்நகர் மிட்-டவுன் பள்ளிகள், குழந்தைகளுக்குப் பயன்படும் எழுத்தறிவுத் திட்டங்களில் கவனம் செலுத்திவருகிறது.*

**62 கிராமப்புற பெண்களுக்காக சோயா பால் தொழிற்கல்வி பயிற்சி**
*ஊட்டச்சத்துக் குறைபாடு உள்ள குழந்தைகளுக்கு ஒரு வரமாகிய, புரதம் நிறைந்த சோயா பாலைச் செய்ய 11 கிராமங்களைச் சேர்ந்த பெண்களுக்குக் கற்றுத்தந்துள்ளது இந்தச் சங்கம்.*




















Scan our QR code & visit our Website

**அட்டை படம்:**
பாகிஸ்தான் போலியோப்ளஸ் அலுவலக சேகரிப்புகளிலிருந்து.

Scan our QR code & read our Magazine

*புதையல்போல் அமையும் இதழின் விலை ஏற்றத்தை வரவேற்கிறோம்*




*11 ஆண்டுகளுக்குப் பிறகு ரோட்டரி நியூஸ் சந்தா இதழொன்றுக்கு ரூ.5 மட்டும் உயர்ந்துள்ளது என்று பிப்ரவரி இதழில் படித்தோம். இந்தச் சிறு விலை உயர்வை வரவேற்கிறோம். இது ரோட்டரியன்களுக்கு ஒரு சுமையாக அமையாது. ஏனெனில், சேவைத் திட்டங்களைப் பரவலாகப் பதிவு செய்து நேர்விதமான ரோட்டரி மதிப்பீடுகளைப் பிரதிபலிக்கிறது, தனித்துவமான ஆளுமையைக் கொண்டுள்ளது, ரோட்டரியன்கள் இதை விரும்பிப் படிக்கிறார்கள். இந்த இதழ் யோசனைகள், ஊக்கங்கள், கருத்துகளின் புதையல் பெட்டி ஆகும். ரோட்டரியன்கள் ஒவ்வொரு மாதமும் RI தலைவர்களுடைய செய்திகளைப் படித்து ஊக்கம் பெறுகிறார்கள். அத்துடன், நம் நாட்டில் நடைபெறும் பல சங்கச் செயல்பாடுகளைப்பற்றித் தெரிந்து கொள்கிறார்கள். மிக முக்கியமாக, நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் இருந்து சேவைத் திட்டங்களைப் பதிவுசெய்வது குறிப்பிடவேண்டியது.*

*இந்த இதழுக்குச் சந்தா செலுத்தி ஒவ்வொரு மாதமும் மிகச் சிறந்த ரோட்டரி தகவல்களைப் பெறுவது ரோட்டரியன்களுக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. எடுத்துக் காட்டாக, RIPE ஜெனிஃபர் ஜோன்ஸ் அவர்களுடைய தலைமைக் கருப்பொருளான ரோட்டரியைக் கற்பனை செய்யுங்கள் என்பதை நாங்கள் நம் இதழ் வழியாகதான் தெரிந்துகொண்டோம். உலகை மாற்றுவதற்காகத் தாங்கள் கொண்டு வரக்கூடிய மாற்றங்களின் சாத்தியங்களைக் கற்பனை செய்யும்படி அவர் அனைத்து ரோட்டரியன்களையும் கேட்டுக்கொண்டிருப்பது ஊக்கமளிக்கிறது.*

*R ஸ்ரீனிவாசன், RC மதுரை மிட்-டவுன் — D 3000*

நியூயார்க்கில் நடை பெற்ற புத்தாண்டுப் அணிவகுப்பின் போது ஒரு ரோஜா மிதவையின் வழியாகப் பரப்பப்பட்ட ரோட்டரி செய்தி, கண்டிப்பாக ரோட்டரி மற்றும் அதன் கருப் பொருளைப்பற்றிய விழிப்புணர்வைக் கட்டமைக்க உதவும். அட்டைப் படம் RC ரூர்கேலா-வின் நல்ல பணியைக் காண்பிக்கிறது.

உலக இதய நாளில் நடை பெற்ற நாடுதழுவிய நீரிழிவு நோய் பரிசோதனை முகாம் வெற்றியடைந்ததை அறிந்து மகிழ்கிறோம். ஆசிரியர் விளக்கியுள்ளபடி, நீர்ச் சக்கரங்கள் என்பது வருங்காலத் தலைமுறைகளுக்கு ஒரு புதுமையான யோசனையாக அமையும்.

LN-4 செயற்கைக்கைகள் மற்றும் தேவையுள்ளவர்களுக்கு அவற்றை வழங்குவதில் ரூர்கேலா ரோட்டரியன்களுடைய பங்கேற்புபற்றிய ஆர்வமூட்டும் கட்டுரையில் தகவல்கள் நிரம்பியிருந்தன. RC கல்கத்தா டார்ஜிலிங்கில் ஒரு பள்ளியைக் கட்டியுள்ளதை அறிந்து மகிழ்கிறோம். பின்னணிப் பாடகர் T M சௌந்தரராஜன் அவர்களைப் பற்றிய கட்டுரை, திரை இசையை அனைவரும் ரசித்த பழைய பொன்னாட்களுக்கு எங்களை அழைத்துச் சென்றது.

ரோட்டரி இன்னொரு குழந்தையைக் காப்பாற்றியது, TRF நல்கைகள்: வரமா தொல்லையா, திட்டங்களைப் பற்றிய சிறு குறிப்புகள், ரோட்டரி பரிசுகளால் மீண்டும் இயங்கும் உத்தரகாண்ட் பள்ளி போன்ற கட்டுரைகள் அனைத்தும் தகவல்களால் நிறைந்திருந்தன.

ஃபிலிப் முலப்போன் M T
RC திருவனந்தபுரம்
சப்அர்பன் — D 3211

எங்களுடைய திட்டமாகிய 'அறிவு' பற்றி ரோட்டரி நியூஸ்-ல் எழுதியதற்கு நன்றி. இந்தக் கட்டுரை எங்கள் பொறுப்பை மிகுதியாக்கியுள்ளது.

வெளிப்படையாகச் சொல்ல வேண்டுமென்றால், நீங்கள் அழைத்து உங்கள் ஆர்வத்தை வெளிப்படுத்திய வரையில், உங்கள் கவனத்தை ஈர்க்கக்கூடிய அளவுக்கு இது ஒரு நல்ல திட்டம் என்பதை நாங்கள் அறிந்திருக்கவில்லை. கிராமப்புற மாணவர்களை ஆதரிக்கவேண்டும் என்ற இயல்பான உள்ளுணர்வுடன் நாங்கள் இதைத் தொடங்கினோம்.

B சனத் ராய்
RC புத்தூர் சென்ட்ரல் — D 3181

ரோட்டரியின் சேவை நாட்களைப் பற்றி RI தலைவர் மேத்தா பகிர்ந்துகொண்ட யோசனை நம் திட்டங்களை உலகுக்குக் காண்பிக்கும் மிகச் சிறந்த PR செயல்பாடு ஆகும். பல சங்கங்கள் ஒரு பொதுவான கருப்பொருளை வெளிச்சம் போட்டுக் காண்பிக்கும் ஆற்றல், மக்களிடையில் நம்பிக்கையைக் கட்டமைக்கிறது.

பெண்களுக்கு ஆற்றல் அளிக்கவேண்டும் என்று RID மகேஷ் கோட்பாகி நம்மைக் கேட்டுக் கொண்டுள்ளார், எங்கள் சங்கம் இந்த ஆண்டு அதைத் தான் செய்கிறது. எங்கள் சிவப்புத் திட்டம் MHM நிகழ்ச்சிகளின் வழியாகப் பெண்களுக்கு ஆற்றல் அளிக்கிறது. இந்த ஆண்டு, குறைந்தது 4,000 பெண்களுடைய வாழ்க்கைகளில் நல்ல தாக்கத்தை உண்டாக்க நாங்கள் திட்டமிட்டுள்ளோம்.

RC பருச்-சின் சைக்ளத்தான் திட்டம் ஊக்கம் அளிக்கிறது. மஹாப்ஸ் சந்திப்பு விரிவாகப் பதிவுசெய்யப்பட்ட முறையையும் நான் ரசித்தேன். RIPE ஜெனிஃபர் ஜோன்ஸ் தன்னுடைய தலைமைக் கருப்பொருளாகிய ரோட்டரியைக் கற்பனை செய்யுங்கள் என்பதை அறிவித்துள்ளார். இந்தச் சில

சொற்கள் மிக ஆழமான பொருளைக் கொண்டுள்ளன.

விவேக் கன்டேல்வால்
RC தியோனர் — D 3141

பாடகர் T M சௌந்தரராஜன் அவர்களைப் பற்றி நாம் சிந்திக்கும் போது, பாடலாசிரியர்கள் கண்ணதாசன், வாலி, இசையமைப் பாளர்களாக இணைந்து பணிபுரிந்த M S விஸ்வநாதன்-ராமமூர்த்தி மற்றும் இசையமைப்பாளர் K V மகாதேவன் ஆகியோருடைய படங்களும் நம் மனத்தில் தோன்றுகின்றன. ஏனெனில், இவர்கள் அனைவரும் தமிழ்த் திரையுலகில் தங்களுக்கென்று ஒரு தனி இடத்தை உருவாக்கிக் கொண்டவர்கள். நன்கு எழுதப்பட்ட, ஆர்வத்தைத் தூண்டிய அந்த கட்டுரையில் நீங்கள் அவர்களுடைய படங்களையும் வெளியிட்டிருக்க வேண்டும்.

டாக்டர் சுப்ரமணியன்
RC புளியங்குடி — D 3212

ஜனவரி இதழ் சிறப்பான ஒன்றாக அமைந்தது. RI தலைவர் மேத்தா, வாழ்க்கைகளை மாற்ற உங்கள் தொழிலைப் பயன்படுத்துங்கள் என்ற தலைப்பில் ஒரு சிறந்த கட்டுரையை எழுதியுள்ளார். இந்தியாவில் ரோட்டரியின் பணியை அவர் விவரித்திருப்பது மிகவும் பாராட்ட வேண்டியது. முதன்முறையாக, இந்தியாவில் உள்ள ரோட்டரியன் களாகிய நாம் செய்கிற நல்ல பணியின் ஒரு பக்கச் சுருக்கம் நம் முன்னால் உள்ளது. நான் என்னுடைய மேசைப் பலகையில் இதன் பிரதியை ஒட்டியுள்ளேன், அனைவரும் இதைப் படித்துப் பெருமையாக உணரலாம்.

விபன் பாஹ்ல்
RC ஜெய்பூர் பாபு நகர் — D 3054

ஜனவரி இதழில் CoL பற்றிய கட்டுரை நன்கு பதிவு செய்யப் பட்டிருந்தது, ரோட்டரி தலைவர்கள் வழங்கிய அவையின் அனைத்து அம்சங்களையும் சிறப்பாக விவரித்தது. ரோட்டரியன்கள் CoLக்கு நிதியளிக்கவும் அதில் பங்கேற்கவும் 1 ஆண்டுக் கட்டணம் செலுத்துகிறார்கள். ஒரு CoL நிகழ்வில், மாவட்டச் செயலாளர்களுடைய பதவி மற்றும் பொறுப்புகளை அங்கீகரிக்கும் ஒரு தீர்மானத்தை RC ராசிபுரம் முன்வைத்தது, அது 70% வாக்கு களுடன் நிறைவேறியது. RI வாரியம் மாவட்டச் செயலாளர்களுடைய பதவிகள் மற்றும் பொறுப்புகளுக்கான பாடத் திட்டத்தை வகுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன், இதன்மூலம் அவர்களுக்கு உரிய பயிற்சியை அளிக்கலாம்.

ராமசுவமி NP
RC ராசிபுரம் — D 2982

ரோட்டரியன்கள் வாழ்க்கைகளை மாற்றுவதற்குத் தங்கள் தொழிலைப் பயன்படுத்தவேண்டும் என்று RI தலைவர் மேத்தா கேட்டுக் கொண்டுள்ளது சிறந்த யோசனை.

கோவிட் நோய்ப் பரவலுடைய உச்சத்தின் போது கூட ஓர் இதழைக் கூட விடாமல் எல்லா இதழ்களையும் சரியான நேரத்தில் கொண்டுவரும் ஆசிரியர் ரஷீதா பகத், அவருடைய குழுவினருக்குப் பாராட்டுகள்.

S முனியாண்டி, RC திண்டுக்கல்
ஃபோர்ட் — D 3000

**துர்காபூரில் சஞ்சீவனி மருத்துவமனை அமைக்கலாம்**

சிறு இதயங்களைச் சரி செய்தல்: சஞ்சீவனி வழி என்ற உங்கள் கட்டுரை (அக்டோபர் இதழ்) எனக்குப் புதிய வெளிச்சத்தை அளித்தது, இன்னும் உழைத்துச் சமூகத்துக்கு மேலும் நன்மை களைச் செய்யவேண்டும் என்று ஊக்குவித்தது. நிறைவுப் பத்தி, அறங்காவலர்கள் கிழக்கு UP அல்லது வங்காளம், பிகார் மற்றும் ஜார்கண்டில் ஒரு நகரத்தைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள் என்கிறது. இப்படி ஒரு மையத்தைத் துர்காபூரில் அமைக்கலாம் என்று நான் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த ஊர் தன்னுடைய இணைப்பின் காரணமாகக் கிழக்குப் பகுதியின் கல்வி மற்றும் மருத்துவ மையமாக வளர்ந்துள்ளது. இங்கு உள்ள அனைத்து மருத்துவமனைகளும் பிகார், ஜார்கண்ட், வட கிழக்கு மற்றும் UPன் சில பகுதிகளைச் சேர்ந்த நோயாளிகளுக்குச் சேவை வழங்குகின்றன.

இதற்கான நிலத்தை இலவசமாக அல்லது ஒரு நியாயமான விலையில் பெறுவதற்கும் சஞ்சீவனி மருத்துவ மனையை அமைப்பதற்கும் அவர்களுக்கு உதவ நான் தயாராக இருக்கிறேன். எங்கள் மாவட்டம் சில ஆண்டுகளுக்கு முன் இதயத்திலிருந்து இதயத்துக்கு என்ற பன்னாட்டு நல்கைத் திட்டத்தின் வழியாக 300 பிறவி இதய அறுவைச் சிகிச்சைகளை (CHD) நிறைவு செய்துள்ளது.

அமித் குமார் சர்மா, RC துர்காபூர்
ஸ்மார்ட் சிட்டி — D 3240

We welcome your feedback.Write to the Editor:
**rotarynews@rosaonline.org; rushbhagat@gmail.com.**
Mail your project details,along with hi-res photos,
to **rotarynewsmagazine@gmail.com.**

Messages on your club/district projects, information and links on zoom meetings/webinar should be sent only by e-mail to the Editor at **rushbhagat@gmail.com** or **rotarynewsmagazine@gmail.com.**
WHATSAPP MESSAGES WILL NOT BE ENTERTAINED.

Click on **Rotary News Plus** on our website **www.rotarynewsonline.org** to read about more Rotary projects.

# பெண்களுக்கு ஆற்றல் அளிக்கும் புதுமை சிந்தனைகளை வரவேற்போம்

SERVE TO CHANGE LIVES

இந்த ஆண்டு, ஒவ்வொருவரும் ஒவ்வொருவரை அழைத்து வாருங்கள் முன்னெடுப்பின் வழியாக ரோட்டரியை வளர்ப்பதற்காக நாம் கடினமாகப் பணியாற்றியுள்ளோம். இதன் பலனாக, உறுப்பினர் எண்ணிக்கை மிக நன்றாக வளர்ந்துள்ளது. இந்த வேகத்தை நாம் தொடர்வோம்.

ஆபத்துக்கு மிகவும் ஆளாகிறவர்களுக்கு உதவுவதற்காக நம்முடைய வளங்களைப் பயன்படுத்தி நாம் தொடர்ந்து நம்பிக்கையைக் கட்டமைக்கலாம், குறிப்பாக, பெண்கள் மீது இந்த நோய்ப்பரவல் மோசமான தாக்கத்தைச் செலுத்தியுள்ளது; அதன் முதல் ஆண்டு முடிவில் UNICEF செயல் இயக்குநர் ஹென்ரியெட்டா ஃபோரெ இதுபற்றிப் பேசுகையில், பெண்கள், அவர்களுடைய குடும்பங்கள் மீதான தாக்கத்தைச் சரி செய்ய நாம் உடனடியாகச் செயல்படவேண்டும்'' என்றார். ஓர் ஆண்டுக்குப் பின் இந்தத் தேவை இன்னும் அதே அளவு வலுவாக உள்ளது. நோய்ப்பரவல் பெண்களைத் தனித்துவமான வகைகளில் பாதித்துள்ளது: அவர்கள் கல்வி பெறுதலைக் குறைத்தல், அவர்களுடைய பணி வாய்ப்புகளை வலுவிழக்கச் செய்தல், குழந்தைத் திருமணங்கள், கூடுதல் மனிதக் கடத்தல் போன்ற பிற கொடுமையான செயல்களுக்குப் பங்களித்தல்.

நம்முடைய செயல் ஏன் மிக அவசியமானது என்பதை UNICEFன் தரவுகள் வெளிப்படுத்துகின்றன. 2010களில் குழந்தைத் திருமணப் பழக்கத்தை நீக்குவது தொடர்பாக முக்கியமான முன்னேற்றம் சாத்தியமானது, உலக அளவில் இப்படிப் பட்ட 25 மில்லியன் திருமணங்கள் தடுக்கப் பட்டதாக UNICEF மதிப்பிடுகிறது. துரதிருஷ்டவசமாக, அந்த நேர்விதப் போக்குகளை நோய்ப்பரவல் திருப்பி விட்டுவிட்டது. இதனால், இந்த பத்தாண்டின் நிறைவுக்குள் இன்னும் 10 மில்லியன் பெண்கள் குழந்தை மணப்பெண்களாக ஆகும் ஆபத்தில் இருக்கிறார்கள்.

அதனால் தான், பெண்களுக்கு ஆற்றல் அளிப்பதில் நாம் கவனம் செலுத்துவது இந்த அளவு முக்கியப் பணியாகிறது. சங்கங்கள் தங்களுடைய நல்கைத் திட்டங்களை வடிவமைக்கும்போது, பெண்களுக்கு ஆற்றல் அளிக்கும் புதுமைச் சிந்தனைகளை கோவிட்-19 வைரஸ் இன்னும் எவ்வளவு நாள் இருக்கும் என்று யாருக்கும் தெரியாது, இளம்பிள்ளை வாதத்தை அகற்றுவதற்காகச் சில பத்தாண்டுகள் ஓய்வின்றி உழைத்த அமைப்பு நம்முடையது, அதனால், நமக்கு முன்னால் உள்ள கடினமான பணியைப் பெரும்பாலானவர்களை விட நாம் நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறோம். அதனால் தான், எது சாத்தியம் என்பதில் நாம் தொடர்ந்து கவனமாக இருக்க வேண்டும். நம்முடைய வாழ்க்கைகள் முன்பு எப்படி இருந்தன என்று எண்ணி ஏங்குவதைவிட, வாழ்க்கைகளை மாற்றுவதற்காகச் சேவை புரியும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தும் ஓர் எதிர்காலத்தை நம்பிக்கை யுடன் எதிர்நோக்கவேண்டும். உங்களுடன் இந்த நல்ல பணியைத் தொடர்வதில் நான் ஆர்வமாக உள்ளேன்.

Shekhar Mehta

சேகர் மேத்தா
RI தலைவர்





# ஈடுசெய்யமுடியாத இழப்பு

இந்தியாவும், இந்தியர்களும் இதுவரை கேட்டு ரசித்துவந்த இனிமையான குரல் ஓய்ந்துவிட்டது. இசைக்குயில் லதா மங்கேஷ்கரின் மறைவு தேசத்தையே துயரத்தில் ஆழ்த்திவிட்டது. இந்த செய்தி நம் அனைவரையும் நமக்குப் பிடித்த பழைய இசை ஆல்பங்களின் நினைவுக்கு நம்மை வேகமாக கொண்டு சென்றது. அவரது இனிமையான குரல் எப்போது நமது கைப்பேசி செயலியில் சேமித்து வைக்கப்பட்டி ருக்கும். தமது அஞ்சலி கட்டுரையில் S R மது குறிப்பிட்டுள்ளது போல, தேசிய நெடுஞ்சாலைகளில் தொலைத்தூரம் லாரிகளை ஓட்டிச் செல்லும் டிரைவர்களாக இருக்கட்டும், தில்லியில் சாலையோரக் கடைகளில் தங்கள் பொருள்களை விற்பனை செய்யும் வியாபாரி ஆகட்டும், எல்லையில் நாட்டை பாதுகாக்க பதுங்கு குழியில் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ள ராணுவ ஜவான்களாகட்டும் லதாவின் இனிமையான குரலுக்கு மயங்காதவர்களே இல்லை என்று கூறிவிடலாம். இந்தப் பட்டியலில் ஆயிரக்கணக்கான இதர குழுவினரையும் நாம் சேர்த்துக் கொள்ளலாம்.

எல்லா மனிதர்களையும் போலவே லதாவிடம் குறைகள் இருக்கத்தான் செய்தன. ஆனால், அவரது ஆறுதல் தரும், உற்சாகமான, அமைதி தரும் இனிமையான குரல்களுக்கு முன்னால் அவை கரைந்து போய்விடும். அவரது மறைவால் ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை பலதலைமுறைகளானாலும் நிரப்பமுடியாது. இரண்டு அல்லது மூன்று தலைமுறைகளைச் சேர்ந்தவர்கள் அவரது இனிமையான குரலைக் கேட்டு வளர்ந்தவர்கள். தாய்மார்கள் தங்கள் குழந்தைகளைத் தூங்கவைப்பதற்காக இரவில் லதாவின் பாடல்களை முணுமுணுப்பார்கள். சிலர் தங்கள் காதலிகளின் மனதைக் கவர லதாவின் டூயட் பாடல்களைப் பாடுவார்கள். காதலை இழந்தவர்கள் சிலர் லதாவின் சோகப் பாடல்களை பாடுவார்கள். அவரது திடீர் மறைவு நமக்கெல்லாம் பெரிய இழப்புதான்! ஒரே ஒரு ஆறுதல், அவர், தனது இனிமையான குரல் மூலம் லட்ச க்கணக்கான ரசிகர்களின் நெஞ்சத்தில் நிறைந்திருந்தார். கோவிட் தொற்றுக்காலத்தில் பிரதமர் நரேந்திர மோடி முதல் ஷாரூக்கான் வரை பல முக்கியப் பிரமுகர்கள் லதாவுக்கு நேரில் இறுதி அஞ்சலி செலுத்தினர்.

கடவுளின் கருணையால் தற்போது கோவிட் தொற்றுப் பரவல் அபாயம் கணிசமாகக் குறைந்துள்ளது. எல்லைகள் திறக்கப்பட்டுள்ளன. விமானப் பயணமும் அதிகரித்து வருகிறது. ஆனால், லதா உள்பட கோவிட் தொற்று தொடர்பான சிக்கல்களால் உயிரிழந்தவர்கள் ஏராளம். மேலும் கொரோனா வைரஸால் ஏற்பட்ட பாதிப்புகளும் அதிகம். கோவிட் தொற்று இதுவரை இல்லாத அளவுக்கு பொருளாதார பாதிப்பை ஏற்படுத்திவிட்டது. கோவிட் தொற்று கோரத் தாண்டவம் ஆடிய காலத்தில் நாம் வீட்டிலேயே அடைபட்டுக்கிடந்தோம். நல்ல வேளையாக ஆன்லைன் மூலம் நமக்குத் தேவையான உணவு மற்றும் மளிகைப் பொருள்களைப் பெற முடிந்தது. ஆன்லைன் வகுப்புகள் நடைபெற்றதால் குழந்தைகள் வகுப்புகளைத் தவறவிடவில்லை. நெட்ப்ளிக்ஸ், பிரைம்விடியோ போன்ற வசதிகள் இருந்ததால் நாம் சவாலான காலத்தை தைரியமாக எதிர்கொண்டோம். ஒருவிதத்தில் நாம் கொரோனா வைரஸுக்கு நன்றி சொல்ல வேண்டும்.

உலகெங்கிலும் உள்ள ரோட்டரி சங்கங்கள் மற்றும் ரோட்டேரியன்கள் தொற்றுநோயின் தாக்கத்தில் தத்தளித்த மக்களுக்கு ஆற்றிய சேவையை மக்கள் மறக்கமாட்டார்கள். நீங்கள் பலருக்கு வாழ்வளித்து, பலரின் குழந்தைகளுக்கு உணவளித்து கண்ணீர் துடைத்ததை மக்கள் என்றென்றும் நினைவில் கொள்ள தவறமாட்டார்கள். “ரோட்டரி” சேவை செய்வதையே பணியாகக் கொண்டுள்ளது என்பதை  கோவிட் தொற்று காலத்தில் உங்களின் சமூக சேவைத் திட்டங்கள் மூலம் நிரூபித்துள்ளீர்கள். தொற்று மூலம் மூலம் பாதிக்கப்பட்ட  ஆயிரக்கணக்கானவர்கள் இதன் மூலம் பலனடைந்துள்ளனர். மக்களுக்கு உதவும்போது எங்களை நம்புங்கள், நாங்கள் உங்களை கைவிடமாட்டோம் என்ற உங்கள் ஆறுதல் வார்த்தைகள் உங்களின் சேவை சிறியதாக இருந்தாலும் அவர்களின் நெஞ்சத்தை நீங்கள் தொட்டு விட்டீர்கள். அவர்களின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தினீர்கள். லதாவின் இனிமையான குரலுக்கு இவை எந்தவிதத்திலும் குறைந்தது அல்ல.

ரோட்டேரியன்களே! நீங்கள் வணக்கத்துக்குரியவர்கள். உங்கள் பணி, உங்கள் சேவை தொடரட்டும்!!



ரஷீதா பகத்

## Governors Council

RID 2981 S Balaji
RID 2982 K Sundharalingam
RID 3000 R Jeyakkan
RID 3011 Anup Mittal
RID 3012 Ashok Aggarwal
RID 3020 Rama Rao M
RID 3030 Ramesh Vishwanath Meher
RID 3040 Col Mahendra Mishra
RID 3053 Sanjay Malviya
RID 3054 Ashok K Mangal
RID 3060 Santosh Pradhan
RID 3070 Dr Upinder Singh Ghai
RID 3080 Ajay Madan
RID 3090 Parveen Jindal
RID 3100 Rajiv Singhal
RID 3110 Mukesh Singhal
RID 3120 Samar Raj Garg
RID 3131 Pankaj Arun Shah
RID 3132 Dr Omprakash B Motipawale
RID 3141 Rajendra Agarwal
RID 3142 Dr Mayuresh Warke
RID 3150 K Prabhakar
RID 3160 Thirupathi Naidu V
RID 3170 Gaurishkumar Manohar Dhond
RID 3181 A R Ravindra Bhat
RID 3182 Ramachandra Murthy M G
RID 3190 Fazal Mahmood
RID 3201 Rajasekhar Srinivasan
RID 3203 Shanmugasundaram K
RID 3204 Dr Rajesh Subash
RID 3211 Srinivasan K
RID 3212 Jacintha Dharma
RID 3231 Nirmal Raghavan W M
RID 3232 Sridhar J
RID 3240 Dr Mohan Shyam Konwar
RID 3250 Pratim Banerjee
RID 3261 Sunil Phatak
RID 3262 Santanu Kumar Pani
RID 3291 Prabir Chatterjee



Printed by PT Prabhakar at Rasi Graphics Pvt Ltd, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014, India, and published by PT Prabhakar on behalf of Rotary News Trust from Dugar Towers, 3rd Flr, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008. Editor: Rasheeda Bhagat.



The views expressed by contributors are not necessarily those of the Editor or Trustees of Rotary News Trust (RNT) or Rotary International (RI). No liability can be accepted for any loss arising from editorial or advertisement content. Contributions — original content — is welcome but the Editor reserves the right to edit for clarity or length. Content can be reproduced with permission and attributed to RNT.




# ரோட்டரியில் டிஜிட்டல்மயமாதல்

சில ஆண்டுகளுக்கு முன், ரோட்டரியன்கள் மெய்நிகர் கூட்டங்களைப்பற்றிக் கனவுகூட கண்டிருக்கமாட்டார்கள். நோய்ப்பரவலுக்குப் பிந்தைய வாழ்க்கையால், நாம் டிஜிட்டல் தொழில்நுட்பத்துக்கு ஏற்ப நம்மைத் தகவமைத்துக் கொண்டுள்ளோம், பன்னாட்டு மாநாடோ கூட்டமோ மற்ற கருத்தரங்குகளோ... நம் தொலைபேசிகள் அல்லது மடிக் கணினிகளைப் பயன்படுத்தி மெய்நிகர் முறையில் இவற்றில் கலந்துகொள்ள நாம் கற்றுக்கொண்டுள்ளோம். இந்த நோய்ப் பரவல், ரோட்டரியில் ஒரு டிஜிட்டல் புரட்சியை உருவாக்க உதவியுள்ளது.

www.rotaryindia.org செயலியும் இணையத் தளமும் இந்தியாவில் இன்னொரு பெரிய மனநிலை மாற்றத்தைக் கொண்டுவந்தன.

இந்திய ரோட்டரியன்களும் சங்கங்களும் ரோட்டரி நியூஸ் ட்ரஸ்ட் நமக்கென உருவாக்கியுள்ள ரோட்டரி இந்தியா என்ற இந்த அழகான மொபைல் செயலியை விரும்பிப் பயன்படுத்துகிறார்கள்; இதனால், நெடுநாட்களாக நம் அனைவரிடமும் இந்த மாற்றத்தைக் கொண்டுவர விரும்பிய RI தலைவர் சேகர் மேத்தாவின் ஒரு கனவு நனவானது.

இந்தியச் சங்கங்கள் அனைத்துக்குமான ஒரு மைய இணையத் தளமாகிய Rotaryindia.org இந்தத் துணைக்கண்டம் முழுவதும் உள்ள சங்கங்கள் செய்துள்ள அனைத்துத் திட்டங்களுடைய உடனடித் தகவல்களையும் கொண்டுள்ளது. நாடு முழுவதும் உள்ள ரோட்டரி சங்கங்கள் பல கவனப் பகுதிகளில் செய்கிற அழகான பணியை இந்த இணையத் தளம் உலகின் மற்ற பகுதிகளுக்குக் காண்பிக்கிறது.

பெருநிறுவனங்கள் தங்களுடைய CSR நிதிகளுக்குச் சரியான சங்கங்கள் மற்றும் திட்டங்களைக் கண்டறியவும் இது உதவுகிறது. நம்முடைய செயல்பாடுகளைப் பற்றிய விழிப்புணர்வை மிகுதியாக்க இது உதவியுள்ளது.

இந்த டிஜிட்டல்மயமாக்கல், சங்கங்களும் மாவட்டங்களும் உறுப்பினர்களுடன் இன்னும் செயல்திறனுடன் உரையாடுவதற்கு உதவியுள்ளது, பல திட்டங்கள் மற்றும் கூட்டங்களில் அதிகபட்சப் பங்கேற்பை உறுதி செய்துள்ளது, உறுப்பினர்கள் எதிர்வரும் சங்க நிகழ்ச்சிகளைப்பற்றித் தெரிந்து கொள்வதை உறுதிசெய்துள்ளது. உறுப்பினர்கள் ஒவ்வொருவருடைய பிறந்த நாள் அல்லது திருமண நாளின் போதும் இது தானியங்கி நினைவூட்டல்களையும் அனுப்புகிறது. ஆளுநருடைய அலுவல் வருகைக்காகத் தயார்செய்துகொள்ளவேண்டிய சங்கத் தலைவர்களுக்கு டிஜிட்டல் OCV/GOV போன்ற வசதிகள் மிகவும் உதவுகின்றன. சங்கங்களின் டிஜிட்டல் செய்திமடல்கள், ஆளுநருடைய மாதாந்திரக் கடிதம் (GML) மற்றும் ரோட்டரி நியூஸ் இதழைப் பெறலாம்.

டிஜிட்டல் கருவிகள் செயலுக்கு வந்துள்ளதால், சங்கங்களும் மாவட்டங்களும் தாள்களைப் பயன்படுத்தவேண்டியதில்லை. ஒலி - ஒளி டிஜிட்டல் மாவட்டக் கருத்தரங்குகள் மற்றும் மெய்நிகர் மெய்ம்மைக் காட்சிப்படுத்தல்கள் நம்மைப் பன்னாட்டு மாநாடுகளுக்கு இணையாகும். இந்தியாவில் ரோட்டரியின் டிஜிட்டல் மயமாதல் உறுப்பினர்களுக்கு மட்டுமில்லை, சுற்றுச் சூழலுக்கும் உதவியுள்ளது!



**Dr மகேஷ் கோட்பாகி**
RI இயக்குனர், 2021–23

# களின் செய்திகள்

## தொழில்நுட்பத்தை பயன்படுத்தி முன்னேறுங்கள்!



நமது பிராந்தியத்திலுள்ள பல்வேறு சங்கங்கள், மாவட்டங்கள் இயல்புநிலைக்கு திரும்பிவருகின்றன. அவற்றிடம் உற்சாகமும் ஆர்வமும் குறையாமல் இருப்பதைப் பார்க்கும்போது மனதிற்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. கடந்த இரண்டு ஆண்டு களாக நடந்தவற்றை நினைத்துக் கொண்டிராமல் முன்னேறுவது நல்லது. அதேசமயத்தில் நாம் கற்றுக்கொண்ட பாடங்களை நினைத்துப் பார்த்து, நல்லவற்றை தக்கவைத்துக் கொள்வதும் அவசியம். ஒவ்வொரு அளவிலும் வேகமாக தொழில்நுட்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டது ஆச்சரியம் அளிக்கிறது.

மெய்நிகர் கூட்டங்களில் அதிக அளவில் உறுப்பினர்கள் பங்கேற்றனர். இல்லையெனில் கூட்டத்திற்கு அவர்கள் பயணிப்பது கடினமாக இருந்திருக்கும். இது அவர்களுக்கு மிகவும் வசதியாக இருந்தது. இதன் மூலம் உறுப்பினர்கள் நேரடியாக கலந்துகொள்ள முடியாவிட்டாலும், சங்கத்தின் நடவடிக்கைகளில் அவர்களை ஈடுபட வைக்கமுடியும்.

சங்கங்கள் உயர்தர பேச்சாளர் களைப் பெறுவதற்கு தொழில் நுட்ப வசதி அனுமதித்தது. இவர்களில் பலர் வெளிநாட்டவர்கள். இது உறுப்பினர்களிடையே ஈடுபாட்டை அதிகரித்தது. இந்த நடைமுறையை நாம் நிறுத்தி விடக்கூடாது. தற்போதைய சூழலில் இது தேவைப் படாவிட்டாலும் எதிர்காலத்தில் இத்தகைய கூட்டங்களை நடத்த நவீன தொழில் நுட்பங்களை நாம் தொடர்ந்து பயன்படுத்த முடியும்.

தொற்றுக்காலத்தில் உலகம் முழுவதும் பல சங்கங்கள் கூட்டுக் கூட்டத்தை நடத்திவந்தன. தொழில்நுட்பம் அந்த வசதியை நமக்கு ஏற்படுத்தித் தந்தது. தேசிய மற்றும் பிராந்திய எல்லைகளைத் தாண்டி நாம் நட்புறவை வலுப்படுத்த தொழில்நுட்பம் உதவியது. இதன் காரணமாக பல சேவைத் திட்டங்கள் இறுதி செய்யப்பட்டன. இந்த வழக்கத்தை நாம் வரும் காலங்களில் விரிவுபடுத்த வேண்டும்.

தொற்று நெருக்கடியால் நமது சங்கங்கள், சந்தா செலுத்தும் உறுப்பினர்கள் பயனடையும் வகையில் செலவுகளை குறைத்துக் கொண்டன. கடந்த இரண்டு ஆண்டுகளில் பல சங்கங்கள், தங்கள் சந்தா தொகையைக்கூட குறைத்துக் கொண்டது எனக்குத் தெரியும்.

நாம் கற்றுக்கொண்ட பாடங் களைப் பயன்படுத்தி, நமது சங்கங்கள் செயல்படும் விதத்தில் சில மாற்றங்களை மேற்கொள்வோம். அப்போதுதான் தொற்றுக்காலம் ஒரு நோக்கத்தை நிறைவேற்ற உதவியது என்று நாம் கூறமுடியும். எல்லோரும் சொல்லுவதுபோல், கடினமான காலங்கள் நீடிக்காது. ஆனால், கடினமானவர்கள் நீடிப்பார்கள்.

A S வெங்கடேஷ்
RI இயக்குனர், 2021–23


## Board of Trustees

Shekhar Mehta RID 3291
**RI President**

Dr Mahesh Kotbagi RID 3131
**RI Director & Chairman, Rotary News Trust**

A S Venkatesh RID 3232
**RI Director**

Gulam A Vahanvaty RID 3141
**TRF Trustee**

Rajendra K Saboo RID 3080
Kalyan Banerjee RID 3060
Panduranga Setty RID 3190
Ashok Mahajan RID 3141
P T Prabhakar RID 3232
Dr Manoj D Desai RID 3060
C Basker RID 3000
Dr Bharat Pandya RID 3141
Kamal Sanghvi RID 3250

### Executive Committee Members (2021–22)

Gaurish Dhond RID 3170
**Chairman Governors Council**

Anup Mittal RID 3011
**Secretary Governors Council**

Ramesh Meher RID 3030
**Secretary Executive Committee**

V Thirupathi Naidu RID 3160
**Treasurer Executive Committee**

Jacintha Dharma RID 3212
**Member Advisory Committee**

**Editor**
Rasheeda Bhagat

**Deputy Editor**
Jaishree Padmanabhan

**Administration and Advertisement Manager**
Vishwanathan K

**Rotary News Trust**
3rd Floor, Dugar Towers,
34 Marshalls Road, Egmore
Chennai 600 008, India.
Phone: 044 42145666
*rotarynews@rosaonline.org*
*www.rotarynewsonline.org*

Now share articles from *rotarynewsonline.org* on WhatsApp.

# உலகெங்கும் தூய நீரை ஓடச்செய்வோம்



18ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பெஞ்சமின் ஃப்ராங்க்ளின் எழுதினார்: கிணறு வற்றும்போதுதான் நாம் நீரின் மதிப்பை அறிவோம். இப்போது, 21ம் நூற்றாண்டில், பலர் நீர் வசதியைப் பெரிதாகப் பொருட்படுத்துவதில்லை, ஏனெனில், அவர்கள் தூய நீர் ஏராளமாகக் கிடைக்கும் இடங்களில் வாழும் அதிர்ஷ்டத்தைப் பெற்றுள்ளவர்கள். ஆனால், உலகெங்கும் உள்ள பல மில்லியன் பேருக்கு அந்த அதிர்ஷ்டம் இல்லை. 2 பில்லியன் மக்களுக்கு (உலக மக்கள் தொகையில் சுமார் 4ல் ஒருவருக்கு) தூய குடி நீர் கிடைப்பதில்லை என்று ஐக்கிய நாடுகள் அமைப்பு மதிப்பிடுகிறது. உலக மக்கள் தொகையில் சுமார் பாதிப்பேர் கழிப்பறைகள் இல்லாமல் வாழ்கிறார்கள், கிட்டத்தட்ட மூன்றில் ஒருவருக்குச் சோப் மற்றும் அடிப்படைக் கை கழுவல் நிலையங்கள் இல்லை.

உடனடித் தகவல்களும் விண்வெளிச் சுற்றுலாத்துறையும் இருக்கிற இந்தக் காலகட்டத்தில் இத்தனைப் பேருக்குத் தண்ணீர், தூய்மை மற்றும் சுகாதார அடிப்படை வசதிகளை நம்மால் உறுதியாக்க இயலவில்லை என்பது வியப்பளிக்கவில்லையா?

இதைச் சரி செய்ய ரோட்டரி பணியாற்றுகிறது; நம்முடைய கவனப் பகுதிகளில் மிகக் கூடுதலான நிதி பெற்ற திட்டங்கள் பலவும் WASH தொடர்பானவை: 2014 முதல் ரோட்டரி சங்கங்கள் அறக்கட்டளை நிதியாக $154 மில்லியனைப் பயன்படுத்தி WASH உடன் தொடர்புடைய 2,100க்கும் மேற்பட்ட பன்னாட்டு நல்கைகளை நடத்தியிருக்கின்றன, எண்ணற்ற மக்களுடைய வாழ்க்கையை மாற்றியிருக்கின்றன.

இத்துடன், ரோட்டரி USAID உடன் WASH கூட்டுப்பணியில் இறங்கியுள்ளது, பத்தாண்டுகளுக்கு மேலாக வலுவாக இயங்கி வரும் இந்தக் கூட்டுப்பணி, போலியோப்ளஸ் அல்லாத ரோட்டரியின் மிகப் பெரிய கூட்டுப்பணியாகக் கருதப்படுகிறது. ரோட்டரியும் USAIDம் கானா மற்றும் உகாண்டா போன்ற நாடுகளில் தேசிய அளவிலான பெரிய அளவு வியூக முயற்சி களுக்கு WASH நிதியாக $18 மில்லியனை உறுதியளித்துள்ளன.

22 மார்ச் உலகத் தண்ணீர் நாளாகும், WASH பிரச்சனைகளைப் பற்றிச் சங்கங்கள் மேலும் தெரிந்துகொள்வதற்கு, உலகளாவிய WASH சேவைகளுக்கான அணுகலை விரிவுபடுத்துவதற்கான வேகத்தை உருவாக்கவும் நீடிக்கச்செய்யவும் சேர்ந்து நடவடிக்கை எடுப்பதற்கு இது ஒரு நல்ல வாய்ப்பு, நல்ல நேரம்.

இந்த மாதம், உலங்கெங்கும் வறண்ட கிணறுகளைக் கொண்ட அல்லது கழிப்பறைகள் அல்லது சோப் இல்லாத நம்முடைய அக்கம்பக்கத்து மக்களை நாம் கவனிப்போம். உலகெங்கும் தேவை உள்ள பல மில்லியன் பேருக்கு WASH சேவைகளை மேம்படுத்துகிற வளங்கள், கூட்டணிகள், பேரார்வம் ரோட்டரியிடம் உள்ளது. மிக முக்கியமாக, அதைச் செயல்படுத்தக் கூடிய மக்கள் நம்மிடம் உள்ளார்கள்.

ஜான் F. ஜெர்ம்
அறக்கட்டளை அறங்காவலர் தலைவர்



# களப் பயணங்கள்

ஜான் M கன்னிங்காம்



ஹூஸ்டனைச் சுற்றிப் பார்த்தால் எங்கும் கண்ணாடி, இரும்புதான் தெரியும். எனினும், அங்கு 40,000 ஏக்கர் அளவில் 300க்கும் மேற்பட்ட பூங்காக்களும் பசுமைப் பகுதிகளும் உள்ளன. ஜூன் 4 முதல் 8 வரை ரோட்டரி பன்னாட்டு மாநாட்டில் நீங்கள் கலந்துகொள்ளும்போது, இந்த நகரத்தின் வெளிப் பொழுதுபோக்கு அம்சங்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம், நீங்கள் உடற்பயிற்சியை விரும்பினாலும் சரி, நல்ல காற்றை விரும்பினாலும் சரி.

Downtownக்கு 4 மைல் மேற்கில் உள்ள Memorial Park தான் ஹூஸ்டனின் மிகப் பெரிய பூங்கா, நியூயார்க் நகரத்தில் உள்ள Central Parkஐப் போல் கிட்டத்தட்ட இருமடங்கு கொண்டது. முதல் உலகப் போர்ப்பயிற்சி முகாம் இடமொன்றில் அமைக்கப்பட்டுள்ள இந்தப் பூங்காவில் உள்ள Houston Arboretum and Nature Centerல் நீங்கள் சுயவழிகாட்டி முறையில் உள்ளூர்த் தாவரங்கள், விலங்குகளைக் காணலாம்.

மாநாட்டு மையத்துக்கு அருகில் Buffalo Bayou Park உள்ளது. ஹூஸ்டன் நிறுவப்பட்டதை நினைவு கூறும் Allen's Landing, Waugh Bridgeக்குக் கீழுள்ள வெளவால் குடியிருப்பு போன்ற முக்கிய இடங்களுக்கிடையில் விரைவாகச் செல்ல ஒரு மிதிவண்டியை வாடகைக்கு எடுத்துக் கொள்ளுங்கள்.

விளையாட்டுப் போட்டிகளை ரசிக்க விரும்பினால், 3 ஜூன் அன்று நடைபெறும் ஹூஸ்டன் டைனமோ (சாக்கர்), ஹூஸ்டன் சேபர்கேட்ஸ் (ரக்பி) போட்டிகளைப் பார்க்கலாம். இதற்கான நுழைவுச் சீட்டுகளை வாங்க: houstonri2022.org/events.

மேலும் தெரிந்துகொள்ள, பதிவு செய்ய: convention.rotary.org.

ADVT

# INSIGHT VACATIONS

## *Travel Again*
## TRAVEL IN STYLE

DISCOVER PREMIUM GUIDED TOURS

### *Ready to plan your next dream vacation?*

Now more than ever, a guided tour is the ideal choice. Simply relax and enjoy your vacation as your Travel Director brings the destination to life and new Well-Being Director takes care of all health protocols.

**BEST OF BRITAIN**
*9 Days*



Get the Royal Treatment During a 9-Day Guided Tour of England, Scotland & Wales

**HIGHLIGHTS OF SPAIN**
*9 Days*



Experience the Art and Architecture of Spain During a 9-Day Guided Tour

**WONDERS OF TURKEY**
*11 Days*



Travel from Istanbul to Golden Cappadocia on an 11-Day Guided Tour

***AS A ROTARY CLUB MEMBER, SAVE 10%* ON ALL WORLDWIDE PREMIUM TOURS***

To learn more, contact us at +91 9967552744 | harshali.darpel@ttc.com
or visit insightvacations.com

*T&Cs apply.

# தீவிர போலியோ பாதிப்பு இல்லாத ஓராண்டை கடந்த பாகிஸ்தான்!

ரஷீதா பகத்

நீண்டகாலமாக இரண்டு நாடுகள் மீது போலியோ ஒழிப்பில் கவனம் செலுத்தி வரும் ரோட்டேரியன்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி. கடந்த 2021 ஆம் ஆண்டு ஜனவரியிலிருந்து 365 நாள், ஓராண்டுக்கு தீவிர போலியோ பாதிப்பு எதுவும் பதிவாகவில்லை என்று பாகிஸ்தான் தெரிவித்துள்ளது. உலகம் முழுவதையும் போலியோ தாக்குதலிலிருந்து விடுபட வேண்டும் என்று கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக கடினமாக போராடி வரும் ரோட்டேரியன்களுக்கு இது மகிழ்ச்சி தரும் செய்தி. TRF அறங்காவலரும், பாகிஸ்தான் போலியோ பிளஸ் கமிட்டி தலைவருமான அஜீஸ் மேமனுக்கு ரோட்டரி தலைமை யகத்திலிருந்து ரோட்டரி தலைவர் சேகர் மேத்தா மற்றும் TRF அறங்காவலர் தலைவர் ஜான் ஜெர்ம் இருவரும் கையெழுத்திட்டு அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தி யிலிருந்து இதைத் தெரிந்து கொள்ளலாம். இது ஒரு மைல் கல்லாகும் என்று பாகிஸ்தான் ரோட்டேரியன்களுக்கு அனுப்பி யுள்ள செய்தியில் அவர்கள் குறிப் பிட்டுள்ளனர். போலியோவுக்கு எதிரான நீண்டகால போராட்டத்தில் முதன் முறையாக தீவிர போலியோ இல்லாத ஓராண்டை பாகிஸ்தான் கடந்துள்ளது. போலியோ பாதிப்பு உள்ள இரண்டு நாடுகளில் ஒன்றான பாகிஸ்தானில் இந்த நிலையை எட்டியுள்ளது முன்னேற்றத்தை காட்டுகிறது. மேலும் போலியோ இல்லாத உலகம் சாத்தியமே என்பதையும் அது நம் கையில்தான் இருக்கிறது என்பதையும் குறிப்பிடுகிறது.

தீவிர போலியோ சூழல் இருக்கும் வரை சவால்கள் குறித்து




*ஜப்பானிய ரொட்டேரியன் ஒருவர் கராச்சியில் ஒரு போலியோ சொட்டு மருந்து முகாமில் பங்கேற்கிறார்.*

நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றும் அதில் குறிப் பிடப்பட்டிருந்தது. விழிப்புணர்வு ஏற்படுத்துதல், அரசு அதிகாரிகளுடன் இணைந்து செயல்படுதல், மதம் மற்றும் சமூகத் தலைவர்களை ஈடுபடுத்துதல், நிதி திரட்டுதல் மற்றும் நமது மானிய உதவிகள் மூலம் ஆதரவு அளித்தல், ஆயிரக்கணக்கான சுகாதாரப் பணியாளர்களை ஈடுபடுத்துதல் உள்ளிட்டவற்றை குறித்து பாராட்டு தெரிவிக்கப்பட்டிருந்தது. போலியோ ஒழிப்பு திட்ட நடவடிக் கைகளுக்காக பாகிஸ்தானுக்கு இதுவரை 347 மில்லியன் டாலர் நிதியுதவி வழங்கப்பட்டுள்ள தாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

**கல்யாண் காட்டிய ஆர்வம்**

மேமன், இது விஷயத்தில் PRIP கல்யாண் பானர்ஜி காட்டிய ஆர்வம், ஆதரவு மற்றும் உதவிகளைப் பதிவு செய்ததுடன் அவரையும் பாராட்டினார். அவர் ரோட்டரி தலைவராக இருந்தபோது உதவி செய்வது, ஆதரவு அளிப்பது மற்றும் வழிகாட்டுதலில் பின்னணியில் இருந்து செயல்பட்டதை மேமன் சுட்டிக்காட்டினார். போலியோ இல்லாத நிலையை இந்தியா எட்டிய நிலையில் அடுத்து பாகிஸ்தானும் இத்தகைய சாதனையை எட்ட வேண்டும் என்றார். தமக்கு முன்னர் பாகிஸ்தானில் போலியோ பிளஸ் குழுவின் முதல் தலைவராக இருந்த PDG காசிம் தாதா (1980–88) மற்றும் PDG அப்துல் ஹைகான் (1988–2009) ஆகியோர் அர்ப்பணிப்பு உணர்வுடன் செயலாற்றியதை அவர் நினைவுகூர்ந்தார். அவர்களின் கடின உழைப்பையும் அங்கீகரித்தார்.

ஆனால், பாகிஸ்தான் ரோட்டரித் தலைவர்கள் இதைக் கொண்டாடுவதில் இன்னும் எச்சரிக்கையாக உள்ளனர். உலகம் முழுவதிலிருந்து வரும் வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்கிறார் அறங்காவலர் மேமன். தீவிர போலியோ பாதிப்பு இல்லாத ஓராண்டு ஒரு மறக்கமுடியாத நாள் என்றாலும் நாங்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்பதை அறிவோம். இது முடிவல்ல, தொடக்கம்தான். நாங்கள் மனநிறைவுடன் இருக்க முடியாது. எங்கள் பணி தொடரும். நைஜீரியாவில் 21 மாதங்களுக்குப் பின் பழைய நிலை திரும்பியதைப் போல நடக்கக்கூடாது என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். எனவே கொண்டாட்டங்கள் எதுவும் இல்லை. இந்த வைரஸை நம்பமுடியாது. அது எந்த நேரத்திலும் எங்கும் வரலாம். எனவே நாங்கள்



*RI போலியோப்ளஸ் கமிட்டி தலைவர் மைக்கல் மெக்கவர்ன் லாஹூர் அருகில் ஒரு முகாமில். TRF அறங்காவலர் மற்றும் பாகிஸ்தான் போலியோப்ளஸ் கமிட்டி தலைவர் அஜீஸ் மேமன் (இடதிலிருந்து இரண்டாவது) உடன் உள்ளார்.*

*சிந்துவின் தலைமை ஒருங்கிணைப்பாளர் மசூத்பாலி (வலது) ஒரு போலியோ முகாமில்.*





TRF *அறங்காவலர் தலைவர் அஜீஸ் மேமன் வீடு வீடாக சென்று குழந்தைகளுக்கு சொட்டு மருந்து அளிக்கிறார்.*

விழிப்புடன் இருக்க விரும்புகிறோம் என்றார்.

ஆனால், இந்த எச்சரிக்கை உணர்வு இருந்தபோதிலும், இப்பகுதியிலிருந்து போலியோ பற்றிய மகிழ்ச்சியான செய்திகள் உள்ளன. கடந்த ஆண்டு ஆப்கானிஸ்தானில் 4 பேர் போலியோவால் பாதிக்கப் பட்டதாக தெரிவிக்கப்பட்டது. ஆப்கானிஸ்தான்-பாகிஸ்தான் பொதுவான எல்லையைப் பகிர்ந்து கொள்வதால் இது மிகப் பெரிய சவாலாக இருக்காது. பாகிஸ்தானின் போலியோ பிளஸ் கமிட்டி தலைவரிடம் மெய்நிகர் சந்திப்பின்போது நான் கேள்விகளை எழுப்பினேன். குழந்தைகளுக்கு போலியோ தடுப்பு மருந்து கொடுப்பதை கடுமையாக எதிர்க்கும் தலிபான்களிடம் ஏதாவது பேச்சு நடத்தினீர்களா? என்று கேட்டேன்.

### புதிய ஆட்சியில் மாற்றம்

பஞ்சாப் போலியோ மண்டல ஒருங்கிணைப்பாளர் PDG முஹமது சய்யீத் ஷம்சி பதிலளிக்கையில், உண்மையில், ஆப்கானிஸ்தானில் புதிய அரசு (தலிபான் ஆட்சி) ஆட்சிக்கு வந்துள்ள நிலையில் மாற்றத்தை நாங்கள் காண்கிறோம். அவர்கள் வீடுவீடாகச் சென்று போலியோ சொட்டு மருந்து கொடுப்பதற்கும் அனுமதித்துள்ளனர் என்றார்.

எப்படி இந்த மாற்றம் ஏற்பட்டது என்பதை மேமன் விளக்கினார். கடந்த நான்கு மாதங்களாக இந்த மாற்றம் உருவாகியுள்ளது. முன்பு அந்த பிராந்தியத்தில் தடுப்பூசி போடுவதற்கு ஒரு குறிப்பிட்ட இடம் தேர்ந்தெடுக்கப்படும். அங்கு போலியோ சொட்டு மருந்து கொடுப்பவர்கள் வருவார்கள். மக்களும் ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளை அழைத்து வருவார்கள். ஆனால், இப்போது தலிபான் ஆட்சியில் வீடு வீடாகச் சென்று குழந்தைகளுக்கு சொட்டு மருந்து வழங்க அனுமதிக்கின்றனர். இதைத்தான் ரோட்டரி முன்பு கோரிக்கையாக வைத்திருந்தது. ஆனால், இதற்கு முன்பு அனுமதிக்கப்படவில்லை. அது இயலாத காரியமாகவும் இருந்தது.

ஷம்சி மேலும் கூறுகையில், நீங்கள் குறிப்பட்டதுபோல நாங்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். ஏனெனில் ஆப்கானிஸ்தானுடன் நாங்கள் எல்லையைப் பகிர்ந்து கொள்கிறோம். ஹுஜ்ரா, அதாவது பொது இடத்தில் குழந்தைகளுக்கு சொட்டு மருந்து கொடுக்கும்போது சிலர் விடுபட்டு போக வாய்ப்புள்ளது. ஆனால், வீடு வீடாகச் சென்று சொட்டு மருந்து கொடுக்கும் போது அதற்கு வாய்ப்பில்லை. எனவே ஆப்கானிஸ்தானில் இதுவரை எங்களால் செய்ய முடிந்ததைவிட இனி சிறப்பாகச் செய்ய முடியும் என்ற நம்பிக்கை உள்ளது என்றார்.

பாகிஸ்தானில் போலியோ ஒழிப்பு நடவடிக்கை உண்மையில் எப்போது தொடங்கியது மற்றும் போலியோ குழுவினர் விரக்தியின் உச்சிக்கு சென்றது எப்போது என்பதை உங்களால் நினைவுகூர முடியுமா என்று மேமனிடம் கேட்கப்பட்டது. அதற்கு அவர், நம்பிக்கை மற்றும் விரக்தி ஆகிய இரண்டு தருணங்களும் இருந்தன. ஒரு சமயத்தில் நாங்கள் போலியோ ஒழிப்பை நெருங்கிவிட்டதாகவே உணர்ந்தோம். உதாரணமாக 2018ஆம் ஆண்டு போலியோ பாதிப்பு ஒற்றை இலக்கத்திலேயே இருந்தது. எனவே

போலியோ ஒழிப்பில் இறுதிக் கட்டத்தை எட்டிவிட்டதாகவே நாங்கள் நினைத்தோம். ஆனால், பெஷாவரில் உள்ள ஒரு மதவாத கட்சியால் இதில் சதி இருப்பதாக பிரச்னை எழுப்பபப்பட்டது.

போலியோ சொட்டு மருந்தால் 50 குழந்தைகள் இறந்துவிட்டதாக ஒரு வதந்தி பரவியது. உண்மை என்னவென்றால் ஒருவரும் இறக்கவில்லை. எனவே நாங்கள் உள்நாட்டு கலகத்தை மட்டுமல்ல, மத அவநம்பிக்கைகளையும் எதிர்த்துப் போராட வேண்டியிருந்தது. மதத்தின் பெயரால் வதந்திகளைப் பரப்புகிறார்கள். இந்தியாவில் பிகார் மற்றும் உத்தரப்பிரதேசத்திலும் இதுபோன்ற நிலையை நாங்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

பாகிஸ்தானில் போலியோ நோய் தடுப்பு இயக்கம் வலுப்பெற்ற நிலையில், 2009ம் ஆண்டு தேசிய போலியோ பிளஸ் தலைவராக பொறுப்பேற்றுக் கொண்டார் மேமன், போலியோ ஒழிப்பு நடவடிக்கையின் போது, அப்போது பிரதமராக இருந்த பேனசீர் புட்டோ, போலியோ பிரசாரத்தின் ஒரு பகுதியாக 1994ம் ஆண்டு தனது மகள் அஸிஃபாவுக்கு போலியோ சொட்டு மருந்து கொடுத்தார். அந்த நேரத்தில்தான் இந்த திட்டம் தேசிய அளவில் முக்கியத்துவம் பெற்றது.

ஒரு கட்டத்தில் பாகிஸ்தானில் போலியோ பாதிப்பு எண்ணிக்கை இந்தியாவைவிட குறைவாக இருந்தது. பின்னர் பாகிஸ்தானில் தலிபான்கள் கிளர்ச்சி தொடங்கிய சமயத்தில், ஆப்கானிலிருந்து அதிக அளவில் அகதிகள் பாகிஸ்தானுக்கு வந்த நிலையில், தலிபான் கை ஓங்கியிருந்த நிலையில் பாதிப்பு எண்ணிக்கை 380 ஆக உயர்ந்தது.

2011ம் ஆண்டில் ஒஸாமா பின்லாடன் கொல்லப்பட்டார். அப்போது தலிபான்கள், கைபர் பக்டூன் மாகாணத்தில் உள்ள வடக்கு மற்றும் தெற்கு வாஜிரிஸ்தானை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தனர். அப்போது அப்துல் ரவூப் ரோஹாலியா மண்டல ஒருங்கிணைப்பாளராக இருந்தார். போலியோ சொட்டு மருந்துக்கு அப்போது தடைவிதிக்கப்பட்டது. நான், அந்த இடத்துக்குச் சென்று தலிபான்களிடம் பேச்சு நடத்தி போலியோ சொட்டு மருந்து கொடுக்க அனுமதிக்க வேண்டும் என்று



RID 3272 DG *சைஃபுல்லா எஜாஸ் (இடது).*

## *பாலினப் பிரச்னை*

*தீவிர போலியோ பாதிப்பு இல்லாத ஓராண்டை பாகிஸ்தான் கடந்து விட்டதை அடுத்து பாகிஸ்தான் போலியோ பிளஸ் குழு தலைவரும் அறங்காவலருமான அஜீஸ் மேமனை நேர்காணல் செய்தபோது, போலியோ சொட்டு மருந்து ஆண்மைக் குறைவை ஏற்படுத்துகிறது என்கிற தவறான பிரசாரத்தால் ஆண்களைவிட பெண் குழந்தைகள் அதிக அளவில் தடுப்பூசி செலுத்திக் கொண்டார்களாக என்று கேட்டதற்கு, நீங்கள் எழுப்பிய கேள்வி சுவாரஸ்மானது. சுமார் நான்கு ஆண்டு களுக்கு முன்பு பெஷாவர் மற்றும் கே.பி. பிராந்தியத்தில் போலியோ தடுப்பூசி போட்டுக் கொண்டவர்களில் சிறுவர்கள் அதிக எண்ணிக்கையில் இருப்பது தெரியவந்தது. முன்பு போலியோ சொட்டு மருந்து முகாம் நடைபெற்றபோது தாய்மார்கள் தங்களின் பெண் குழந்தைகளை மட்டுமே சொட்டு மருந்து போட்டுக்கொள்ள அழைத்து வந்திருந்தனர். ஆண்களுக்கு சொட்டு மருந்து போட்டால் ஆண்மைக்குறைவு ஏற்படும் என்பதால் ஆண் குழைந்தை களை அவர்கள் மறைத்து வைத்திருந்தது தெரியவந்தது.*

*இதில் சில சிறுவர்கள் போலியோ தாக்குதலால் பாதிக்கப்பட்டிருந்தது தெரியவந்தது. ஆனால், போலியோ சொட்டு மருந்து போட்டுக் கொண்ட சிறுவர்களில் சிலர் தந்தையானபோது ஆண்மைக்குறைவு ஏற்படும் என்பது தவறான பிரசாரம் என்பதை அந்த சமூகத்தினர் உணர்ந்து கொண்டனர். இதுவே எங்களுக்கு ஆதாரமாக இருந்தது.*

*ஒவ்வொரு முறையும் பிரசாரத் திற்கு செல்லும் முன்பு ஒரு வீட்டில் எத்தனை குழந்தைகளுக்குத் சொட்டு மருந்து போடவேண்டும் என்பதை கணக் கிடுவோம். எனவே சிறுமிகளைவிட சிறுவர்கள் அதிக அளவில் பாதிக்கப் பட்டது தெரிய வந்தபோது, சிறுவர் களை, பெற்றோர்களே மறைத்து விட்டது எங்களுக்குத் தெரியவந்தது. பல இடங்களில் ஒருவீட்டில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட குழந்தைகள் இருக்கிறார்கள் என்பது தெரியவந்ததும் அனைவரும் சொட்டு மருந்து போட்டுக் கொள்வதை உறுதி செய்தோம். எனினும் சில இடங்களில் எங்களால் பெற்றோர்களை சமாதானப்படுத்த முடியாத நிலையும் இருந்தது என்றார் பஞ்சாப் மாகாண ஒருங்கிணைப்பாளர் ஷம்சி.*




கேட்டுக் கொண்டேன். அவர்கள் ட்ரோன்கள் மூலமான தாக்குதலை நிறுத்தினால்தான் இது சாத்தியம் என்று கூறிவிட்டனர். போலியோ ஒழிப்பு நடவடிக்கையில் பாகிஸ்தான் மேற்கொண்ட மிக மோசமான காலகட்டம் அது.

ஆனால், வடமேற்கு பிராந்தியத்தில் ராணுவத்தின் நடவடிக்கை அதிகரித்ததை அடுத்து நிலைமையில் சிறிது முன்னேற்றம் ஏற்பட்டது. குறிப்பாக 2014 ஆம் ஆண்டு டிசம்பரில் தெஹ்ரிக்-இ-தலிபான் என்ற தீவிரவாத அமைப்பைச் சேர்ந்த துப்பாக்கி ஏந்திய 6 பேர் ராணுவப் பள்ளி மீது தாக்குதல் நடத்தியது. இதில் 132 குழந்தைகள் உயிரிழந்தனர். இதையடுத்து பாகிஸ்தான் ராணுவம் தீவிர தேடுதல் வேட்டை நடத்தியது. இந்த நேரத்தில் போலியோ சொட்டு மருந்து கொடுக்க அனுமதிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து பாதிப்பு எண்ணிக்கை குறையத் தொடங்கியது.

ரோஹைலா மேலும் கூறுகையில், கே.பி. மாகாணம் எப்போதுமே பிரச்னைக்குரிய இடமாகும். சட்டம்-ஒழுங்கை நிலைநாட்டுவது அங்கு பெரிய பிரச்னை. அடிக்கடி அங்கு தாக்குதல்களும், கொலைச் சம்பவங்களும் நிகழ்ந்தன. அதைச் சமாளிப்பதே அவர்களுக்கு பெரும் பிரச்னையாக இருந்தது. ரோட்டேரியன்கள் உள்நாட்டு கலகம் மற்றும் பாதுகாப்பு பிரச்னைகளை சமாளிக்க வேண்டியிருந்தது. மூன்று நாட்களுக்கு முன்னதாக கே.பி. மாகாணம், காரக் மாவட்டத்தில், போலியோ ஒழிப்பு நடவடிக்கை குழுவினருக்கு பாதுகாப்பாகச் சென்ற போலீஸ்காரர் ஒருவர் கொல்லப்பட்டார். கே.பி. மாகாணத்தில்தான் போலியோ தொடர்புடைய கொலைகள் அதிகம் நடந்துள்ளன என குறிப்பிட்டார்.

## இன்னும் சான்றிதழ் இல்லை

*தீவிர போலியோ இல்லாத ஓராண்டை பாகிஸ்தான் கடந்து விட்ட போதிலும் ரோட்டரி தலைமையகத்திலிருந்து எந்த சான்றிதழும் பெறமுடியாது. ஏனெனில் ரோட்டரி பிராந்திய வாரியாகச் செயல்படுகிறது. உதாரணமாக இலங்கை 18 ஆண்டுகளுக்கு முன்பும், வங்தேசம் 12 ஆண்டுகளுக்கு முன்பும் போலியோ இல்லாத நாடாக உருவானது. ஆனால், இந்தியா போலியோ இல்லாத நாடாக உருவாகும் வரை அவை இரண்டும் சான்றிதழ் பெற காத்திருக்க வேண்டியதாயிற்று. நாங்கள் EMRO அல்லது கிழக்கு மத்திய தரைக்கடல் பிராந்தியத்தின் கீழ் வருகிறோம். எனவே ஆப்கானிஸ்தான் போலியோ இல்லாத நாடாக உருவாகும் வரை பாகிஸ்தான் காத்திருக்க வேண்டும். அதன் பின்புதான் EMRO பிராந்தியத்துக்கு போலியோ இல்லாத பிரதேசம் என்ற சான்றிதழ் வழங்கப்படும்.*

*அதுவரை போலியோ இல்லாத பகுதி என்ற சான்றிதழை அடைவதை உறுதிசெய்ய வரும் நாட்களிலும், மாதங்களிலும் எங்கள் போராட்டத்தை தொடர வேண்டியிருக்கும் என்றார் அஜீஸ் மேமன்.*

### ஆபத்தை பொருட்படுத்தாமல்

கே.பி. மாகாணத்துக்கு நீங்கள் சென்ற போது நடந்த கொடூரச் சம்பவங்களைக் கூறமுடியுமா என்று கேட்டதற்கு மேமன் பதிலளித்தார். எங்களது போலியோ ஒழிப்பு நடவடிக்கையின்போது 200 போலியோ தொழிலாளர்கள் மற்றும் பாதுகாப்புப் பணியாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். ஸ்வாட், பன்னோ மற்றும் சில இடங்களுக்குச் சென்றபோது எங்கள் விருந்தினர்களை, குறிப்பாக NIDக்காக வந்திருந்த வெளிநாட்டு விருந்தினர்களை நாங்கள் அனுமதிக்கவில்லை. ஆனால், நாங்கள் அங்கு செல்லாவிட்டால் வேறு யார்தான் அங்கு செல்வார்கள்? எனவே ரோட்டேரியன்களாகிய நாங்கள் ஆபத்தையும் பொருள்படுத்தாமல் அங்கு சென்றோம். கே.பி. மாகாணத்தில் பாதுகாப்பு இல்லாத இடங்களுக்கும் நாங்கள் தொடர்ந்து செல்வோம் என்றார்.

2007–2008ம் ஆண்டு நடந்த ஒரு சம்பவத்தை ரோஹைலா நினைவு கூர்ந்தார். தலிபான் ஆட்சிக் காலத்தில் ராணுவம் அனுமதிக்காத நிலையில். உள்ளூர் நிர்வாகத்தினர் தயக்கம் காட்டிய நிலையில், நாங்கள் வடக்கு வாஜிரிஸ்தானுக்குச் சென்றோம். எங்களுடன் அஜீஸ் மேமனும் வந்திருந்தார். நீங்கள் எதிலும் ஈடுபட வேண்டாம் என்று கூறியிருந்த நிலையிலும், நாங்கள் உள்ளூர் மக்கள் மொழியில் பேசினோம். அப்போது அவர்கள் இதுவரை யாரும் இது



PDG *சயீத் ஷம்சி லாஹூரில் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து அளிக்கிறார்.*

பற்றி எங்களுக்கு விளக்கவில்லை என்றனர். நாங்கள் போலியோ ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டோம் என்றார்.

ரோட்டேரியன்கள் மீது மெல்ல மெல்ல நம்பிக்கை பிறந்ததை அடுத்து சுகாதார முகாம்கள் நடத்த கோரிக்கைகள் வந்தன. கே.பி. மாகாண முதல்வரே ஒரு முறை ரோட்டேரியன்களிடம் முகாம் ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக் கொண்டார். இது நடந்தது எட்டு ஆண்டுகளுக்கு முன்பு. அப்போது தலிபான்கள் அங்கு இருந்தனர். ஆனால், போலியோ முகாம்கள் நடத்த அனுமதித்தனர்.

போலியோ சொட்டு மருந்து கொடுக்கும் முகாம் நடைபெற்றபோது கொல்லப்பட்ட போலியோ ஊழியர்கள் மற்றும் பாதுகாப்பு ஊழியர்களின் குடும்பத்தினருக்கு உதவ RI முடிவு செய்தபோது, அப்போது ரோட்டரி தலைவராக இருந்த K R ரவீந்திரன், உதவித் தொகை நிதியை ஏற்படுத்தி, குழந்தைகளின் படிப்புச் செலவுக்கு கட்டணம் செலுத்த உதவினார்.

சிந்து மண்டல போலியோ ஒருங்கிணைப்பாளர் குழு தலைவர் மசூத் பாலி மேலும் கூறுகையில், பாகிஸ்தானின் ராணுவம் மற்றும் தேசிய மற்றும் மாகாண அரசுகளும் ரோட்டரியின் போலியோ நோய்த் தடுப்பு முகாம்கள் மற்றும் பிரசாரங் களுக்கு தொடர்ந்து ஆதரவுக்கரம் நீட்டி வந்தனர் என்றார்.

### தவறான பிரசாரம்

தலிபான்களும், சில மதத் தலைவர் களும் போலியோ சொட்டு மருந்து அல்லது தடுப்பூசி போட்டுக் கொண்டால் ஆண்மைக்குறைவு ஏற்படும் என்று தவறாகப் பிரசாரம் செய்தனர். இந்த தவறான பிரசாரத்தை முறியடிப்பதே எங்கள் குழுவுக்கு சவாலாக இருந்தது. உலேமா குழுக்கள் பாகிஸ்தான் முழுவதும் நிறுவப்பட்டு அவர்கள் நடத்திய பட்டறைகள் மூலம் போலியோ சொட்டு மருந்தின் பயன்பாடு எடுத்துரைக்கப்பட்டது, இதற்காக மெக்கா, மதீனாவிலிருந்து உலே மாக்கள் வரவழைக்கப்பட்டனர்.

இதற்கு பாகிஸ்தான் அரசு எங்களுக்கு உதவியாக இருந்தது. குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து கொடுப்பதன் மூலம் எந்தப் பிரச்னையும் வராது. ஆண்மைக் குறைவு ஏற்படும் என்பது தவறான தகவல் என்று பிரசாரம் செய்யப் பட்டது. இதன் மூலம் மத ரீதியில் அவர்களின் தவறான எண்ணம் தணிக்கப்பட்டது என்றார் மேமன்.

### சொட்டு மருந்து போடத் தடை

பாகிஸ்தான் ரோட்டேரியன்கள் பல்வேறு வகையான தவறான தகவல்களை எதிர்த்துப் போராட வேண்டியிருந்தது. அறங்காவலர் மேமன் சுட்டிக்காட்டியபடி, ஒஸாமா பின்லாடன் கொல்லப்பட்ட பிறகு வடக்கு மற்றும் தெற்கு வாஜிரிஸ்தானில் போலியோ சொட்டு மருந்து கொடுப்பதற்கு தடைவிதிக்கப்பட்டது. தலிபான்கள் அல்லது கிளர்ச்சியாளர்கள் மறைவிடங்கள் குறித்து தடுப்பூசி போடுபவர்கள் சிஐஏ-க்கு தகவல் தருவதாக பேசப்பட்டது. இப்படி




கிடைத்த தகவல்கள் வைத்துக் கொண்டு தலிபான்கள் மீது ட்ரோன் தாக்குதல் நடத்தப்படுவதாகவும் சொல்லப்பட்டது. இதன் காரணமாக போலியோ சொட்டு மருந்து போடுவதற்கு தடை விதிக்கப் பட்டது. இதையடுத்து நாங்கள் செல்லிடப்பேசிகள் எடுத்துச் செல்வதில்லை என்றும் படங்கள் எடுக்கமாட்டோம் என்றும் சொன்னோம். ட்ரோன் தாக்குதல்களும் போலியோவுக்கு எதிரான போராட்டத்தை நீட்டிக்க வைத்தது. ஏனெனில் போலியோ ஊழியர் ஒருவர் பின்லேடன் மறைவிடம் பற்றி கொடுத்த தகவலின் பேரில்தான் அவர் கொல்லப்பட்டதாக தவறான தகவல் பரவியதுதான் இதற்கு காரணம்.

பலுச்சிஸ்தான் ஒருங்கிணைப் பாளர் சலீம் ராஜா கூறுகையில் கில்லா அப்துல்லா என்ற இடத்தில் ஒருவருக்கு மட்டுமே போலியோ நோய் ஏற்பட்டது என்றார். அஃப்கானிஸ்தான் அருகில் உள்ளதால் இங்கு இந்த நோய் பரவலை தடுப்பது கடினமாக உள்ளது என்றும் இங்கு வருவோரை பரிசோதனை செய்து மற்றும் சொட்டு மருந்து அளித்தும் பாதுகாக்கிறோம் என்றார்.

ஆனால், எங்கள் மீது நம்பிக்கை ஏற்பட்டதும், சமூகத்தினர் சாலை வசதி, குடிநீர் வசதிக்காக எங்களை அணுகினர். இப்போது சாலை அமைப்பது அரசாங்கத்தால் மட்டுமே செய்யக்கூடிய மிகப் பெரிய பணியாகும். எனவே உள்ளூர் மக்களுக்கு எங்களால் முடிந்தவரை பல வழிகளில் உதவினோம். தண்ணீர் சுத்திகரிப்பு ஆலைகளை ஏற்படுத்தினோம் போலியோ நோய்த்தடுப்பு முகாம்களை நடத்தினோம் நாங்கள் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து கொடுக்க மட்டும் வரவில்லை. குடும்பத்தில் உள்ள அனைவரின் ஆரோக்கியத்திலும் கவனம் செலுத்துவோம் என்று தெரிவித்தோம். இது அவர்களுக்கு எங்கள் மீது இருந்த நம்பிக்கையை அதிகரித்தது.

ரோட்டேரியன்கள் போலியோவை சரிப்படுத்தும் அறுவைச்சிகிச்சை களையும் மேற்கொண்டு வருகின்றனர். இதற்காக கராச்சி மற்றும் லாகூர் ரோட்டரி சங்கங்கள் போலியோவால் பாதிக்கப்பட்ட வர்களின் மறுவாழ்வுக்காக நிரந்தர சிகிச்சை மையங்களை ஏற்படுத்தியுள்ளன. அறுவைச் சிகிச்சைக்கும் மேலாக பாதிக்கப்பட்ட வர்களுக்கு ஜெய்ப்பூர் செயற்கை கால்களையும் நாங்கள் வழங்கி வருகிறோம். எங்களின் மறு வாழ்வு நடவடிக்கைகளுக்கு நன்கொடையாளர்கள் பெருமளவில் உதவி வருகின்றனர் என்றார் மேமன். ஷம்சி மேலும் கூறுகையில், லாகூரில் 1964 ஆம் ஆண்டு முதலே பாதிப்பை சரிப்படுத்துவதற்கான அறுவைச்சி கிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றார்.

### விழிப்புடன் இருக்க வேண்டும்

அடுத்து விழிப்புடன் இருக்க வேண்டியதன் அவசியத்தை மேமன் சுட்டிக்காட்டினார். அதிக மக்கள் நடமாட்டம் மிகப்பெரிய பிரச்னையாகும். போலியோ திட்டத்தின் மூலம் அமைக்கப் பட்டுள்ள நிரந்தர போக்குவரத்து முனையங்கள் இருப்பது புலம் பெயர்ந்தோர் ஒரு மாகாணத்திலிருந்து மற்றொரு மாகாணத்துக்குச் செல்லும் போது முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுப்பதை உறுதிசெய்கிறது. சிந்துவில் மட்டும் இதுபோன்ற 29 போக்குவரத்து முனையங்கள் (PTP) உள்ளன என்றார். பஞ்சாப் மாகாணம் மற்ற மாநிலங்களைவிட பொருளாதார ரீதியாக சிறந்து விளங்குவதால் இங்கு பணி நிமித்தமாக வருபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இந்த முனையங்களை நாங்கள் 24 மணி நேரமும் கண்காணித்து வருகிறோம். தொழிலாளர்கள் யாராவது குழந்தைகளை அழைத்துவந்தால் அவர்களுக்கு போலியோ சொட்டு மருந்து போடுகிறோம் என்று ஷம்சி விளக்கினார்.

பாகிஸ்தான்-ஆப்கான் எல்லையில் ரோட்டரி அனைத்து வயதினருக்கும் போலியோ தடுப்பூசி போடும் நோய்த்தடுப்பு மையங்களை ஏற்படுத்தியுள்ளது. பெரியவர்களுக்கு சொட்டு மருந்து வழங்கப்படுகிறது என்று மேமன் தெரிவித்தார். ஹஜ் யாத்திரை செல்லும்போது அனைத்து வயதினரும் போலியோ சொட்டு மருந்து வழங்கப்படுவதை சவூதி அரசு உறுதி செய்வது போல இங்கும் செய்யப்படுகிறது என்றார் மேமன்.

படங்கள்: பாகிஸ்தான் போலியோப்ளஸ் அலுவலக சேகரிப்புகளிலிருந்து

வடிவமைப்பு: N கிருஷ்ணமூர்த்தி

ADVT.


FIRST OF IT'S KIND IN THE WORLD !!!
GUINNESS WORLD RECORDS
LIMCA BOOK of RECORDS
GUINNESS WORLD RECORD BREAKING
WHEELCHAIR DANCE PERFORMANCES
BY DIFFERENTLY ABLED ARTISTS!
MIND-BLOWING DANCE SHOWS
WHICH INSTANTLY MOTIVATES
AND TRANSFORMS YOUR LIFE.
Ability Unlimited shows have captivated audiences and won accolades across the Nation and in USA, UK, Canada, Italy, Muscat, UAE, Kuwait, Paris, Johannesburg, Moscow, Malaysia, Nepal, etc.
Live Stage Shows !!!
ABILITY UNLIMITED
Virtual Shows !!!
ANY OCCASION IS GOOD FOR OUR SHOWS
Founders Day, National and international conferences, Award Ceremonies, Motivational program for employees, Concerts, Ceremonies, Entertainment Spectaculars, Traders and dealers Meet, Silver and Golden Jubilee Celebrations, Product Launches, Fashion Shows, Inaugural/Launch of Company (National and International), Product Promotions, Campaigns, weddings, family occasions and Tailor made shows for all your needs and every occasion.
CONTACT FOR THE SHOWS
+91 9811340308, 9597167987 abilityunlimited@gmail.com http://abilityunlimited.com

# நேரடித் தொடர்பில் இருப்பேன்
# RIPE ஜென்னிஃபர் ஜோன்ஸ்

*ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஜென்னிஃபர் ஜோன்ஸ், ரோட்டரியை துடிப்பான, மாறுபட்ட எதிர்காலத்திற்கு அழைத்துச் செல்ல உள்ளார்.*

RIPE ஜென்னிஃபர் ஜோன்ஸ், தனது பார்வை யாளர்களான ரோட்டரி இதழின் மூத்த எழுத்தாளர் டயான ஸ்கோபெர்க் மற்றும் மூத்த ஆசிரியர் ஜெஃப்ரி ஜான்சன் இருவரையும் எவன்ஸ்டனில் உள்ள ரோட்டரி மைய அலுவலகத்தில் வரவேற்றார். வந்திருந்த இருவரும் ஜென்னிஃபரின் எதிர்கால கண்ணோட்டம் குறித்து விவாதித்தனர். “ரோட்டரி எவ்வளவு அதிவேகமாக உலகை தொட்டு விடும் என்பது குறித்து நீங்கள் சிந்திக்கத் தொடங்கினால், நாங்கள் ஒரு சங்கத்தை விட அதிகம் என்றார் ஜென்னிஃபர். அதாவது, ரோட்டரி சங்கம் என்பதைவிட அது ஒரு இயக்கம்” என்று விளக்கினார்.

ஜென்னிஃபர், ஒன்டோரியோவின் விண்ட்ஸரில் உள்ள மீடியா ஸ்ட்ரீட் புரொடக்ஷன்ஸ் இன்கார்ப்பொரேஷன் (Media Street Productions Inc) நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி. மேலும் விண்ட்ஸர்-ரோஸ்லாண்ட் ரோட்டரி சங்கத்தின் உறுப்பினர். (அவரது கணவர், நிக் கிரயாசிச், லா சால்லி சென்டினியல் ரோட்டரி சங்கத்தின் முன்னாள் தலைவர். அண்மையில் ரோட்டரி மாவட்டம் 6400ன் ஆளுநர் வேட்பாளராகத் தேர்வு செய்யப் பட்டவர்.) அவரது நிறுவனத்தின் சிறப்பு அம்சம் என்னவெனில் வானொலி மற்றும் தொலைக்காட்சி களுக்கு நிகழ்ச்சிகளை தயாரித் தளிப்பது மற்றும் கார்ப்பொரேட் நிறுவனங்களுக்கு லாபநோக்கு இல்லாத அடிப்படையில் நிகழ்ச்சி களை நடத்திக் கொடுப்பதாகும்.

ஊடகப் பின்னணியைப் பயன் படுத்தி, ரோட்டரியை உலகளாவிய உயரத்துக்கு கொண்டு செல்வதை தமது பதவிக்காலத்தின் முக்கிய இலக்காக கொண்டுள்ளார். மேலும் Imagine Impact Tour என்ற பெயரில் நிலையான, பெரிய அளவிலான திட்டங்களைச் செயல்படுத்தி உலகின் கவனத்தை ரோட்டரியின் பக்கம் ஈர்க்க திட்டமிட்டுள்ளார். இதை உறுப்பினர்கள் சேர்க்கையை அதிகரிக்கும் ஒரு வழியாக அவர் பார்க்கிறார். நாங்கள் மற்றவர்களுக்கு எங்கள் கதைகளைக் கூறும்போது ஒத்த கருத்துடைய மக்கள் எங்களுடன் இணைந்து கொள்ள முடியும் என்பது அவரது கருத்து.



1996ம் ஆண்டு முதல் ரோட்டரி உறுப்பினராக இருக்கும் ஜென்னிஃபர், ரோட்டரி ஆலோசனைக் குழுவின் தலைவர் என்ற முறையில் ரோட்டரியை வலுப்படும் பல்வேறு நடவடிக்கை களில் முக்கியப் பங்கு வகித்துள்ளார். போலியோ ஒழிப்பு நடவடிக்கை களுக்காக 150 மில்லியன் டாலர் நிதி திரட்டுவதை இலக்காகக் கொண்ட End Polio Now Countdown to History Campaign Committeeயின் இணை

தலைவராகவும் உள்ளார். 2020ம் ஆண்டு Rotary Responds என்ற டெலித்தான் நிகழ்ச்சிகளை அவர் வெற்றிகரமாக தலைமையேற்று நடத்தினார். இதன் மூலம் கோவிட் தொற்றுக்கு நிதி திரட்டப்பட்டது. இந்நிகழ்ச்சி 65,000த்துக்கும் மேலான பார்வையாளர்களைக் கவர்ந்தது.

ரோட்டரியின் நன்மதிப்பை உயர்த்துவது, மேலும் பன்முகத் தன்மை, சமநிலை மற்றும் உள்ளடக்கத்தை நோக்கிய முயற்சிகள் போன்ற தீவிரமான தலைப்புகளுக்கு இடையில், 1980களின் தொலைக்காட்சி நிகழ்ச்சி களான தி கோல்டன் கேர்ள்ஸ் (The Golden Girls அதன் சமூக வர்னனை இன்றும் பொருத்தமானது என்று ஜென்னிஃபர் கருதுகிறார்.) மற்றும் நடன நிகழ்ச்சிகள் (ஒரு நல்ல பாடல் வரும்போதெல்லாம், அதில் சிறிய தொய்வு இருக்கத் தானே செய்யும் என்கிறார் அவர்.) உரையாடலின் முடிவில் அவரது தந்தை தொலைபேசியில் அழைத்து சூப்பர், நீ பாஸாகிவிட்டாய் என்று மகிழ்ச்சியுடன் கூறினார். 80 வயது ஆனபோதிலும் இன்னும் சுறுசுறுப் பாக உழைத்துக் கொண்டிருக்கும் அவர், தமது பணிக்காக வருடாந்திர தேர்வில் வெற்றிபெற்றதை தெரிவிக்க விரும்பினார்.

எனது தந்தை பழகுவதற்கு மிகவும் இனிமையானவர் என்று புன்னகை தவழ அவர் தெரிவித்தார். சில நாள்களுக்கு முன்பு ஜென்னிஃபருக்கு அனுப்பிய செய்தியில் இதய பூர்வ வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார். உலகம் எப்படி வருகிறது? ரோட்டரியின் குடும்பம் அவருக்குப் பின்னால் இருப்பதால் அவர், சரியான பாதையிலேயே செல்கிறார் என்று தெரிவித்துள்ளார்.

**அவருடன் ஒரு உரையாடல் இதோ:**

**நீங்கள் ரோட்டரியின் முதல் பெண் தலைவராக இருக்கப் போகிறீர்கள். உங்கள் கருத்து?**

நான் மெய்நிகர் முறையில்தான் தேர்ந்தெடுக்கப்பட்டேன் என்றாலும் நேர்காணலின்போது சொல்லப்பட்ட ஒன்றை பிரதிபலிக்கும் வகையில் ஒவ்வொருவரும் அறையைச் சுற்றி வந்தனர். நான் எனது தகுதிக்காக தேர்ந்தெடுக்கப்பட்டேன், பாலின அடிப்படையில் அல்ல என்பதை பலமுறை வலியுறுத்தி வந்துள்ளேன். பாலின சிந்தனையுடன் நான் இந்த நேர்காணலில் நுழையவில்லை. எனினும் எங்கள் அமைப்புக்கு இது ஒரு நம்பமுடியாத முக்கியமான தருணமாகும். பன்முகத்தன்மை, சமநிலை மற்றும் உள்ளடக்கம் ரோட்டரிக்கு மட்டும் முக்கியமல்ல, உலகிற்கே முக்கியத்துவம் வாய்ந்தது. ஒருவேளை எனது நியமனம் சரியான நேரத்தில் நடந்திருக்கலாம்.

2021ம் ஆண்டு மெய்நிகர் மாநாட்டின் போது நான் ஏற்புரை வழங்கிய போது எனது 10 வயது மருமகளை பற்றி தொடக்கத்தில் குறிப்பிட்டேன். வித்தியாசமானது எப்போதுமே சிறந்தது என்ற எண்ணத்தை குறிப்பிடும் வகையில் ஒரு ஓவியத்தை அவள் என்னிடம் கொடுத்தாள். நான் அவளை நேசித்தேன். அவளது அறிக்கைக்காக நான் பெருமைப்பட்டேன். அதனால், அவள் சொன்ன வார்த்தைகளைக் கூறி எனது உரையை முடித்துக் கொண்டேன். வித்தியாசமாக இருப்பதற்காக மன்னிப்புக் கேட்க வேண்டிய அவசியமில்லை. எங்களது முக்கிய கொள்கைகளில் ஒன்று பன்முகத்தன்மை. இது பன்முகத்தன்மையை வெளிப்படுத்து வதற்கான மற்றொரு வழியாகும். அது நடக்க 117 வருடங்கள் ஆனது.

**நமது அமைப்பில் பன்முகத்தன்மை என்றால் என்ன?**

ரோட்டரி உலகில் பன்முகத்தன்மை உள்ளது. நாங்கள் பன்முகத் தன்மையை கொண்டு வந்துள்ளோம். அதை அவர்கள் பின்பற்றலாம் அல்லது பின்பற்றாமலும் இருக்கலாம். ஆனால், இதுபோன்ற உரையாடல்களில் வரலாற்றில் நேர்மையான தரகர்களாக தனித்துவமான அமைப்பாக இருக்கவே நாங்கள் விரும்புகிறோம் என்று நினைக்கிறேன். எங்களிடம் அரசியலும் இல்லை, மதச்சாயமும் இல்லை. இதுபோன்ற உரையாடல் களை நடத்துவதற்கும், ஒருவரை ஒருவர் மதிக்கும் பாதுகாப்பான இடத்தில் நாங்கள் இருப்பதால் அதைச் செய்வதற்கான திறன் எங்களிடம் உள்ளது.

**ரோட்டரி தலைவர் பதவியை எப்படி மறுவரையறை செய்யப் போகிறீர்கள்?**

நான் தலைமைப் பதவியில் மாறுபட்ட கண்ணோட்டத்தில் செயல்படப் போகிறேனா என்பது தெரியவில்லை. இன்றைய சூழல் மற்றும் கலா சாரத்தில் ஒரு பொருத்தமான அமைப்பாக நாம் எப்படிச் செயல்படப் போகிறோம் என்ற கண்ணோட்டத்தில் நான் பார்க்கிறேன்.

ஒரு குறிப்பிட்ட இலக்கை எட்டுவதில், கடந்த காலங்களை விட மாறுபட்டு செயல்படலாம் என்று நினைக்கிறேன். ஒருவேளை நாம் இன்னும் நம்பகத்தன்மையுடன் நடக்க வேண்டியிருக்கலாம். பெண்களை அதிக அளவில் நமது அமைப்பில் சேர்க்கலாம் என்று நினைக்கிறேன். ஒரு பெண்ணால் செய்ய முடியும் என்றால் ஏன் நாமும் செய்ய முடியாது என்ற எண்ணத்தை இளைஞர்களிடையே உருவாக்க வேண்டும். மற்றவர்களை ஈர்க்க இது ஒருவாய்ப்பாக இருக்கலாம். இளைய சிந்தனையாளர்களையும், இளைய உறுப்பினர்களையும் நாங்கள் தேடி வருகிறோம்.

நான் முக்கியமான ஒரு விஷயத்தை முன்வைக்க விரும்பு கிறேன். அது பாலினம் அல்ல, தகவல் தொடர்பு. இந்த விஷயங்களை முன்னணி உறுப்பினர்களுக்கும், ரோட்டரி குடும்பத்தில் அங்கம் வகிக்கும் மற்றவர்களுக்கும் எப்படி தெரிவிக்கப்போகிறோம். வித்தியா சமாக இருப்பது நல்லது என்பதை புரிந்துகொள்ள வேண்டும். ஆனால், இது உங்களை மாற்றிவிடாது. நமது DNA ஒன்றுதான். நமது குறிக்கோளும் ஒன்றுதான். ஆனால், இவற்றை நாம் இப்போது வித்தியா சமான கண்ணாடிகள் கொண்டு பார்க்க முடியும்.

**நீங்கள் இளம் சிந்தனையாளர்கள் என்றும் இளம் உறுப்பினர்கள் என்றும் சொல்கிறீர்கள். இதில் என்ன வித்தியாசம்?**

25 வயது இளைஞரை சந்தித்திருக் கிறீர்களா? நாம் அனைவரும் சந்தித் திருப்போம். 86 வயதான இளைஞரை

சந்தித்திருக்கிறீர்களா?
நிச்சயமாக. எனவேதான் நான் இளம் சிந்தினையாளர்கள் பற்றி பேசுகிறேன். நான் உலகில் எங்கிருந்தாலும் இது எதிரொலிக்கும்.

சில சமயங்களில் அனுபவத்தின் அடிப்படையில் நல்ல யோசனைகள் வரும். சில சமயங்களில் இதை இவரால் செய்யமுடியாது அல்லது இதை ஒரு குறிப்பிட்ட வழியில் தான் செய்ய வேண்டும் என்று சொல்லப்படாத ஒருவரிட மிருந்து இது வரும். நம் அமைப்பில் இளம் பங்கேற்பாளர்களை உற்று நோக்கினால் அவர்கள் நம்பிக்கை அளிக்கும் வகையில் பேசுவார்கள். தொடர்ந்து பரிணாம வளர்ச்சியில் இருக்க முடியும் என்ற நம்பிக்கையை அளிப்பார்கள்.

உங்களிடம் ஒரு புதிய யோசனை இருந்தால், அதை ரோட்ராக்ட் சங்கத்திடம் அளித்தால், அடுத்த சில நாட்களில் என்ன செய்ய வேண்டும் என்பதை கண்டுபிடிப்பார்கள். அவர்களிடம் சமூக ஊடகம் உள்ளது. அதன் மூலம் அவர்கள் கூட்டாளர்களிடம் தொடர்பு கொள்வார்கள். அவர்களால் எல்லாவற்றையும் செய்ய முடியும். அவர்களால் வேகமாகச் செயல்பட முடியும். அதே சமயத்தில் அதை ஒரு ரோட்டரி சங்கத்திடம் கொடுத்தால் நாம் என்ன செய்வோம்? நாம் இதற்கென ஒரு குழு அமைப்போம். அதன் பிறகு நிறைய கூட்டங்கள் நடைபெறும். அவ்வளவுதான்.

அதாவது திட்டமிட்ட பாதையை நாம் நிராகரிப்பதாக அர்த்தம் அல்ல. வேடிக்கைக்காக இதைச் சொல் கிறேன். ஆனால், அதிகாரத்துவம் சில நேரங்களில் நம்மை மெதுவாக நடத்திச் செல்லலாம். இது மக்களுக்கு வெறுப்பூட்டலாம்.

இளைஞர்களை முன்னெடுத்து பார்க்கும்போது நமக்கு ஒரு நல்ல வாய்ப்பு கிடைக்கிறது. அவர்கள் எதையும் வித்தியாசமாகச் செய்வார்கள். இது அவர்களிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய ஒன்று என்றே நினைக்கிறேன்.



**நீங்கள் ஒரு இயல்பான கதை சொல்லி. உங்கள் தலையின் தொடக்க அத்தியாயத் தின் முதல் வாக்கியம் என்னவாக இருக்கும்?**

ஒரே வார்த்தையில் சொன்னால் கற்பனை செய்து பாருங்கள்.

**அதுதான் உங்கள் கரு பொருள், இல்லையா?**

ரோட்டரியை கற்பனை செய்து பாருங்கள்.

**நீங்கள் அதை எப்படி கொண்டு வந்தீர்கள்?**

கற்பனை என்று நான் சொல்வது கனவு காணுங்கள் என்பது. கனவுகளின் பின்னே நாம் ஓட வேண்டும். மக்கள், தாங்கள் அடைய விரும்புவதைப் பற்றி சிந்திக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். பின்னர் அதை அடைய அவர்கள் ரோட்டரியை கருவியாக பயன்படுத்த வேண்டும். நமக்கு முன்னால் ஏராளமான வாய்ப்புகள் உள்ளன. ஆனால், நிலையான தாக்கத்தை ஏற்படுத்தும் வழியை நாம்தான் கண்டறிய வேண்டும். என்னிடம் ஒரு யோசனை இருக்கிறது என்று சொல்லும் சக்தி ஒருவரிடம் இருக்க வேண்டும். பின்னர் அதை மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ள வேண்டும். அதன்பின் அதை எங்கு கொண்டு செல்லவேண்டும் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். கற்பனை என்பது ஒரு அதிகாரம் அளிக்கும் வார்த்தையாகும். இந்த உலகத்தை சிறப்பானதாக மாற்றியமைக்க மக்களுக்கு அது அனுமதியளிக்கிறது. மேலும் இந்த குடும்பத்தின் ஒரு பகுதியாக இருப்பதால் அவர்களால் இதைச் செய்ய முடியும்.

**சமகால தலைமைத்துவம் என்றால் என்ன, உங்கள் தலைமைத்துவப் பாணி இதற்கு எப்படி பொருந்தும்?**

நாம் எதை முதலில் முக்கியமாகச் செய்ய வேண்டும், எதை உடனடி யாகச் செய்யத் தேவையில்லை என்பதை கடந்த இரண்டு வருடங்களில் ஆழமாக அறிந்து கொள்ளும் வாய்ப்பு நமக்கு கிடைத்தது. நண்பர்களாகவும், அண்டை வீட்டார் போல் இல்லாமலும் மனித நேயத்துடன் ஒருவருக்கு ஒருவர் ஆதராவாக எப்படிச் செயல்படலாம் என்பது குறித்து நாம் உண்மையாக சிந்திக்க வேண்டும்.

சமகால தலைமைத்துவ கண்ணோட்டத்தில், மோசமான வற்றிலிருந்து சிறந்ததை நாம் தேர்ந்தெடுக்க வேண்டும். மற்றவர் களின் அனுபவங்களிலிருந்து எப்படி வித்தியாசமாகச் செயல்படுவது, பாராட்டும் வகையில் எப்படிச் செயல்படுவது என்பதை நாம் கற்றுக்கொண்டிருப்போம். அதுதான் ரோட்டரி என்ற அமைப்பு எல்லா நேரங்களிலும் சிறப்பாகச் செயல்பட வைத்தது. நாம் மேலும் பிரகாசிக்க வேண்டிய காலம் நெருங்கிவிட்டது.

**தலைவர் பதவிக்கு நீங்கள் என்ன பலம் மற்றும் பலவீனத்தை கொண்டு வருவீர்கள்?**

எனது பலமே தகவல் தொடர்புதான். அதன் மூலம் வித்தியாசமாக எப்படிச் செயல்படலாம் என்று பார்த்துக் கொண்டிருக்கிறேன். நம் அமைப்பின் ஒவ்வொரு உறுப்பினரும் அதன் ஒரு பகுதி என்பதைப் புரிந்துகொள்வதை உறுதி செய்வதாகும். ஒன்றை வெளிப்படுத்துவதற்கு பல வழிகள் உள்ளன. வெறும் மின்னஞ்சல் அனுப்பவதுடன் இது முடிந்து விடுவதில்லை. மக்கள் எங்கள் அமைப்பிடமிருந்து என்ன கேட்க விரும்புகிறார்கள் என்பதற்கான காரணத்தை உருவாக்குவது பற்றியதாகும்.

நிர்வாகக்குழு கூட்டங்களைத் தொடர்ந்து நேரலையாகச் செல்வது நாம் செய்ய விரும்புவனவற்றில் ஒன்று. அவர்களின் அமைப்பு என்ன செய்துகொண்டிருக்கிறது – என்ன நடந்தது என்பதை மக்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். எவன்ஸ்டனில் 18-வது தளத்திலிருந்து அதிரடி செய்திகளைத் தர விரும்புகிறேன். அதாவது உங்கள் சங்கத்தின் அனுபவங்களை. அந்த கதையைச் சொல்ல முடியுமா? இதற்காக நான் சில புதிய கருவிகளைப் பயன்படுத்த விரும்புகிறேன். நான் சங்கங்களுக்கு செல்லும் போது என்னுடன் கேமராவையும் எடுத்துச் செல்வேன். என்னிடம் ஒருவர் சொன்னதையும், நான் பார்த்ததையும் வெளிக்காட்ட விரும்புகிறேன்.

பலவீனம்தான் இருப்பு. என்னை நான் கவனித்துக் கொள்ள முயல்கிறேன். சரியான உணவை சாப்பிடவும், உடற்பயிற்சி செய்யவும், நண்பர்களுடனும் குடும்பத்தி னருடனும் நேரத்தை செலவிட முயற்சிக்கிறேன். மேற்கூறியவற்றில் நான் எப்போதும் ஒழுங்குடன் இல்லை. தொற்றுநோய் காலக்கட்டத்தில் இடை நிறுத்தப் பட்ட பொத்தானை அழுத்துவதற்கு நம் எல்லோருக்கும் வாய்ப்பு கிடைத்தது. சில சமயங்களில் நாம் பணிபுரியும் இலக்கை நோக்கி ஆயிரம் சதவீதம் செல்கிறோம். அது சரியான அணுகுமுறையாக இல்லாமல் கூட இருக்கலாம். நாம் சிறப்பாகச் செயல்படும்போது நாம் பலமாக இருக்கிறோம். நாம் இதை கற்றுக்கொண்டுள்ளோம் என்று நினைக்கிறேன். குறைந்தபட்சம் நான் இதை கற்றுக்கொண்டேன்.

இப்போது மக்களுடன் தொடர்புகொள்ள மின்னஞ்சல், வாட்ஸ்ஆப், முகநூல், டுவிட்டர் என பலவிதமான வழிகள் உள்ளன. என்னிடம் இரண்டு தொலைபேசிகள் உள்ளன. அதிலிருந்து விலகி அருகில் இருப்பவர்களுடன் தொலைபேசியில் பேசாமல் நடந்து சென்று அவர் களுடன் உரையாட எனக்கு நானே அனுமதித்துள்ளேன். நான் அதை மதிக்கிறேன். ஆனால், நேரடித் தொடர்பில் இருக்க விரும்புகிறேன். நான் உண்மையில் 24 மணி நேரமும் தொடர்பு கொள்ள முடியும். ஆனால், அதனால் யாருக்கும் சேவை செய்ய முடியாது.

படங்கள்: மோனிகா லோஸின்ஸ்கா
© ரோட்டரி

# RIDs 3141 & 3070 இணைந்து நடத்திய செயற்கை கால் பொருத்தும் முகாம்

ரோட்டரி செய்திக் குழு



RID 3141 DG *ராஜேந்திர அகர்வால் மற்றும்* RID 3070 DG U S *காய் செயற்கை கால் பொருத்தும் முகாமில்.*

மும்பையின் ரத்னா நிதி அறக்கட்டளையுடன், RID 3141 மும்பையின் ரோட்டரி சங்கங்கள் மற்றும் RC தர்ம்ஷாலா, RID 3070 இணைந்து ஹிமாச்சலப் பிரதேசத்தின் தர்ம்ஷாலாவில் செயற்கை மூட்டு பொருத்தும் முகாமை ஏற்பாடு செய்தன. உடல் ஊனமுற்ற 165 பேருக்கு ஜெய்ப்பூர் கால் பொருத்தப்பட்டது மற்றும் 10 பேருக்கு சக்கர நாற்காலிகள் வழங்கப்பட்டன. DG ராஜேந்திர அகர்வால் (RID 3141) மற்றும் DG Dr உபிந்தர் சிங் காய் (RID 3070) ஆகியோர் RID 3141ன் பல்வேறு ரோட்டரி சங்கங்களை சேர்ந்த 170 உறுப்பினர்கள் மற்றும் RC தர்ம்ஷாலா, RID 3070 உறுப்பி னர்களுடன் முகாமில் பங்கேற்று உதவி செய்தனர். பின்னர் அவர்கள் 50 ஹாப்பி பள்ளிகளுக்கு 5,000 குறிப்பேடுகளை விநியோகித்தனர் மற்றும் அந்நகரத்தில் உள்ள 800 தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஆடைகளை வழங்கினர்.■

# ஜல்னா ரோட்டேரியன்கள் நடத்திய மருத்துவ முகாம்

ரஷீதா பகத்

கடந்த ஜனவரி 2021ம் ஆண்டு, RID 3132-க்கு உட்பட்ட சங்கத்தின் முன்னாள் PDG ராஜீவ் பிரதான், ஜல்னாவைச் சேர்ந்த 5 சங்கங்கங்களின் ரோட்டேரியன்கள் மற்றும் மகாராஷ்டிராவின் அம்பத்தைச் சேர்ந்த ரோட்டரி சங்கத்தினர், தொற்றுக்காலத்தில் மாநில அளவில் கோவிட் நிர்வாகத்தை சிறப்பாக மேற்கொண்டதற்காக மகாராஷ்டிர சுகாதாரத்துறை அமைச்சர் ராஜேஷ் தோப்புக்கு பாராட்டு விழா நடத்தினர். அப்போது இந்தியாவிலும், ஆப்பிரிக்காவிலும் ரோட்டேரியன்கள் செய்த மருத்துவச் சேவைகள் குறித்து அமைச்சரிடம் மீண்டும் விளக்கப்பட்டது. ரோட்டரியின் சேவை அவருக்குத் தெரியாது என்பதற்கல்ல, அவர் எங்கள் நகரமான ஜல்னாவைச் சேர்ந்தவர் என்பதால். ரோட்டரியின் மருத்துவச் சேவைகள் குறித்து கடந்த காலங்களில் அவரிடம் பலமுறை கூறியிருந்தேன். ஆப்பிரிக்காவிலும் இந்தியாவிலும் நடந்த மருத்துவச் சேவைகள் பத்துக்கும் மேலான வற்றில் நான் பங்கேற்றிருக்கிறேன். அப்போது அவர், ஜல்னாவிலும் மருத்துவச் சேவை நடத்துவது குறித்து ஏன் நீங்கள் சிந்திக்கவில்லை என்று கேட்டார் என்றார் ஜல்னா ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்தவரும் கண் மருத்துவருமான டாக்டர் மாதவ் அம்பேகர்.

ஜல்னா ரோட்டேரியன்கள் மற்றும்



*ஜல்னா முகாமில் லாப்ரோஸ்கோபி அறுவை சிகிச்சை புரியும் Dr ராமேஷ்வர்.*



Dr ராமேஷ்வர் மற்றும் Dr சோமானி அறுவை சிகிச்சை அறையில்.



ரோட்டரி ‘ஆஷா’ பணியாளர்கள் வீடு வீடாக சென்று சுகாதார தகவல்கள் சேகரிக்கின்றனர்.

PDG டாக்டர் பிரதான் இதைப்பற்றி யோசித்தனர். பின்னர் இதுகுறித்து விவாதிப்பதற்காக Dr பிரதான் ஜல்னாவுக்கு பயணமானார். ஆரம்ப கட்ட திட்டத்தின்படி 9 நாள் மருத்துவ முகாமில் பங்கேற்க சோலாபூர், நாந்தேத், நகர், சதாரா மற்றும் பன்வலைச் சேர்ந்த ரோட்டேரியன் டாக்டர்கள், ஜல்னாவுக்கு வருகைதர ஒப்புக்கொண்டனர். அந்த சமயத்தில் கோவிட் இரண்டாவது அலை தலைதூக்கியது. இதனால் முகாம் நடக்குமா? அதற்குத் தேவையான பொருள்களைக் கொண்டு செல்லமுடியுமா? என்ற கவலை எழுந்தது. ஆனால், ஜல்னாவைச் சேர்ந்த எங்கள் ரோட்டேரியன் மருத்துவ நிபுணர்களும், அரசு மருத்துவர்களும் தயார்நிலையில் இருந்தனர். இதையடுத்து வெளியிடங்களில் இருக்கும் மருத்துவர்களை வரவேண்டாம் என்று கேட்டுக் கொண்டோம் என்றார் Dr பிரதான்.

ஜல்னா சென்ட்ரல் ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த ரோட்டேரியன்கள் டாக்டர் அம்பேகர் மற்றும்

டாக்டர் சுசித்ரா கடியா (மயக்கவியல் மருத்துவ நிபுணர்) இருவரும் மருத்துவ முகாமின் நிர்வாகப் பொறுப்புகளை ஏற்றனர். ஆரம்பத்தில் சிறிது தாமதமானாலும் இறுதியில், தொற்று பாதிப்பு இருந்தபோதிலும் RID 3132ன் மாவட்ட ஆளுநர் ஓம்பிரகாஷ் மோதிபவாலேயின் ஒப்புதல்பேரில் ஜனவரி 4 முதல் 10 ஆம் தேதி வரை முகாம் நடைபெற்றது.

தொற்றுக்காலம் தொடர்கிறது என்பதை ரோட்டேரியன்கள் மறந்து விடவில்லை. அரசு இயந்திரங்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப் பட்டது. ஆஷா பணியாளர்கள் முகாம் பற்றி அறிந்திருந்தனர். எனவே முகாமில் அதிகம்பேர் பங்கேற்பார்கள் என எதிர்பார்த்தோம். எனினும் அறுவைச்சிகிச்சை தேவைப்படும் நோயாளிகள் மட்டும் வரலாம் என்றும் மற்றவர்கள் வீட்டிலேயே இருக்குமாறும் கேட்டுக்கொண்டோம். இதைத் தொடர்ந்து இரண்டாவது பரிசோதனை முகாமும் நடை பெற்றது. அப்போது டாக்டர்கள், கோவிட் தொற்று பாதிப்பு இன்னும் இருப்பதால் உடனடியாக அறுவைச் சிகிச்சை தேவைப்படாதவர்கள் வரவேண்டாம் என்றும் சிறிது காலம் காத்திருக்குமாறு கேட்டுக் கொண்டனர்.

தொற்றுக்காலத்தில் ஒரு மெகா மருத்துவ முகாமை ஏற்பாடு செய்வதில் உள்ள முக்கிய சவால்கள் குறித்து டாக்டர் அம்பேத்கர் கூறுகையில், சுகாதாரப் பணியாளர்கள் கோவிட் தொற்று நிர்வாகம் மற்றும் சிகிச்சை பணிகளில் மும்முரமாக இருந்தபோது அரசு ஊழியர்களை சமாதானப்படுத்தி வீடு வீடாகச் சென்று கணக்கெடுக்க வைப்பது சவாலாக இருந்தது. அரசு மருத்துவர்கள், ஊழியர்களை முகாம் பணியில் முழுமனதுடன் ஈடுபடவைக்க உதவுமாறு ரோட்டேரியன்களைக் கேட்டுக் கொண்டார்.

இந்த திட்டத்தின் சாராம்சம் என்னவெனில், இது ஏதோ ஒரு சில சங்கங்களின் திட்டமல்ல, ஜல்னாவில் உள்ள அனைத்து சங்கங்களும் இணைந்து நடத்தும் மெகா மருத்துவச் சேவை திட்டம். ரோட்டரி பரிவார் இதை நடத்துகிறது என்று சொல்லி புரியவைத்தோம். மருத்துவ முகாமுக்காக திரட்டப்பட்ட நிதியை சேகரித்து வைக்க ஜல்னா ரோட்டரி சங்க அறக்கட்டளையை உருவாக்கினோம் என்றார் அவர்.

நாங்கள் இந்த முகாமை பெரிய அளவில் நடத்த திட்டமிட்டோம். அதற்கான திட்ட மதிப்பீடாக ரூ.25 லட்சம் நிர்ணயிக்கப் பட்டது. ஜல்னாவில் உள்ள ஜல்னா இரும்பு உற்பத்தியாளர்கள் சங்கம், கலஷ் சீட்ஸ், விக்ரம் தேயிலை பதப்படுத்தும் நிறுவனம் மற்றும் ஏராளமான ரோட்டேரியன்கள் நிதி ஆதரவு அளித்தனர். மேலும் இரண்டு பெரு நன்கொடையாளர்கள் தன்ஷியாம் கோயல் மற்றும் சதீஷ் அகர்வால் இருவரும் நிதியுதவி அளித்ததுடன் தேவைப்படும்போது மேலும் நிதியுதவி அளிப்பதாக உறுதியளித்தனர் என்றார் டாக்டர் அம்பேகர். அன்னம்ருத் பவுண்டேஷன் (சமுதாய சமையல் கூடம்) அமைப்பினர் நோயாளிகளுக்கும், ஊழியர் களுக்கும் முகாம் நாட்களில் சலுகை விலையில் உணவு வழங்கினர். Dr அம்பேகர், Dr சுமித்ரா மற்றும் Dr கிறிஸ்டோபர் மோஸஸ் தலைமையில் ரோட்டேரியன்கள் மாவட்ட சுகாதார அதிகாரி, ஜில்லா பரிஷத் தலைமைச் செயல் அதிகாரி, மாவட்ட ஆட்சியர் மற்றும் சிவில் சர்ஜன் Dr அர்ச்சனா போன்ஸ்லே ஆகியோருடன் தொடர் சந்திப்புகளை நடத்தினர். சுகாதாரத் துறை அமைச்சர், தனது சிறப்பு அதிகாரி டாக்டர் கௌரி சங்கர் சவான் என்பவரைத் தொடர்பாளராக நியமித்தார். மருத்துவக் கருவிகள், அறுவைச் சிகிச்சைக்குத் தேவையான பொருள்கள், மருந்து மாத்திரைகள் தொடர்பாக பல பிரச்னைகளை எங்கள் குழுவினர் எதிர்கொண்டு



*காது அறுவை சிகிச்சை செய்யத் தயாராக உள்ளார்* Rtn Dr *மன்தலே.*

சமாளிக்க வேண்டியிருந்தது. அரசு சிவில் மருத்துவமனை, அரசு மகளிர் மருத்துவமனை மற்றும் அம்பத் துணை மாவட்ட மருத்துவ மனைகளில் அறுவை சிகிச்சைகள் திட்டமிடப்பட்டன.

கோவிட் தொற்று காலத்தில் புறநோயாளிகள் பிரிவு மூலம் முகாம்களுக்கான பயனாளிகளைத் தேர்ந்தெடுப்பது சரிபட்டு வராது என்ற காரணத்தால் பொது சுகாதார மையம் (PHC) ஊழியர்கள் மற்றும் ஆஷா பணியாளர்கள் மூலம் வீடு வீடாகச் சென்று ஆய்வு நடத்தி அறுவைச் சிகிச்சைத் தேவைப்படுபவர்களை தேர்ந்தெடுத்தோம். அதாவது பொதுவான அறுவைச்சிகிச்சை, காது, மூக்கு, தொண்டை அறுவைச் சிகிச்சை, மகப்பேறு மற்றும் முடநீக்கியல், பல் சிகிச்சை, கண்புரை அறுவைச்சிகிச்சை என அனைத்து பிரிவினரும் இதில் அடங்குவர். மருத்துவ முகாம் தொடர்பாக தகவல்களை மக்களுக்கு தெரியப்படுத்த போஸ்டர்கள், பேனர்கள் வைக்கப்பட்டன. மேலும் துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன. இந்தப் பணியில் ரோட்டேரியன்கள் ஈடுபட்டனர்.

அரசு இயந்திரங்கள் எங்களுக்கு முழுமையாக ஒத்துழைத்தன. தனியார் மருத்துவர்கள் உதவுவதால் அனைத்து உதவிகளையும் செய்ய வேண்டும் என்பதை உணர்ந்து கொண்டு மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்து, மாத்திரைகளுக்கு ஏற்பாடு செய்தனர். கூட்டம் நன்றாக நிர்வகிக்கப்பட்டது. நோயாளிகள் சரியான முறையில் வழிநடத்தப் பட்டனர். கோவிட் நெறிமுறைகளும் பின்பற்றப்பட்டன. மேலும் அனைவருக்கும் கோவிட் தொற்று பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது என்றார் டாக்டர் சுமித்ரா.

இரண்டு அரசு மருத்துவ மனைகளிலும் உள்ள பெரும்பாலான அறுவைச்சிகிச்சை அறைகள் மருத்து வர்களால் பயன்படுத்தப்பட்டன. மேலும் மருத்துவர்கள் நேரம்-காலம் பார்க்காமல் பணியைச் செய்தனர். இதனால் 673 பேருக்கு அறுவைச் சிகிச்சைகள் நடத்தப்பட்டன.



*மருத்துவ முகாமில் அறுவை சிகிச்சை புரியும் Dr அம்போரே.*

நோயாளிகள் முன்னரே அடையாளம் காணப்பட்டதால் அரசு மருத்துவர்கள் தொடர் அறுவைச்சிகிச்சையில் ஈடுபட்டனர் என்றார் டாக்டர் அம்பேகர்.

கோவிட் தொற்று காரணமாக நிலுவையில் வைக்கப்பட்டிருந்த 43 கருப்பை நீக்க அறுவைச்சி கிச்சை நிபுணர்கள் குழுவால் மேற்கொள்ளப்பட்டது என்று குழு தலைவர் Dr அனில் தாக்ரே கூறினார்.

Dr சுமித்ரா மேலும் கூறுகையில், ஜல்னா ரோட்டேரியன்கள் இப்போது இதுபோன்ற திட்டங்களை செயல்படுத்த தயாராகிவிட்டனர். ரோட்டரி மாவட்டம் 3132 மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் இதே போன்ற திட்டத்தை அவர்களால் செயல்படுத்த முடியும் என்றார். PDG பிரதான் கூறுகையில், கோவிட் காரணமாக நான் தனிப்பட்ட முறையில் ஜல்னாவில் இருக்க முடியவில்லை. எனினும் நான் அவர்களுடன் அடிக்கடி தொடர்பில் இருந்தேன். டாக்டர் அம்பேகர், டாக்டர் சுமித்ரா மற்றும் அனைத்து சங்கத்தின் தலைவர்களும் பணிகளை சிறப்பாகச் செய்தனர். மருத்துவ முகாமுக்கான திட்டத்துக்கு விதை விதைத்தவர் PRIP ராஜேந்திர சாபூ. கடந்த 23 ஆண்டுகளில் நான் செய்த பணிகளைத் தொடரக் கூடிய வகையில் அல்லது மிஞ்சும் வகையில் அர்ப்பணிப்பு உணர்வுள்ள இன்றைய தலைமுறையினர் ரோட்டேரியன்களிடம் மலர்ந்துள்ளது.

ரோட்டேரியன்கள் தொடக்கத்தில் ரூ.25 லட்சம் பட்ஜெட்டை திட்டமிட்டிருந்தாலும், பின்னர் கோவிட் தொற்று காரணமாக ரூ.10 லட்சம் திட்டமாக குறைக்கப்பட்டது எனவே நாங்கள் ஸ்பான்ச ர்களிடமிருந்து ரூ.10 லட்சம் திரட்ட முற்பட்டோம். ஆனால், அரசு இயந்திரங்கள் துரிதமாகச் செயல்பட்டன. ஆரம்பத்தில் கிடைக்காத மருத்துவ உபகரணங்கள் பின்னர் எங்களுக்கு கிடைத்தது. இதனால் எங்கள் திட்டச்செலவு கட்டுக்குள் வந்தது. எங்களுக்கு ரூ.4 லட்சம் மிச்சமாகியது. அதை நாங்கள் எங்கள் ஸ்பான்சரிடம் திருப்பிக் கொடுத்தபோது, நாங்கள் பல அறக்கட்டளை களுக்கு நிதியுதவி அளித்துள்ளோம். ஆனால், செலவுபோக பணத்தை திருப்பிக்கொடுப்பது இதுவே முதன்முறையாகும். எதிர்காலத்தில் உங்களுக்கு நிதியுதவி தேவைப்பட்டால் எங்களிடம் வாருங்கள் என்று தெரிவித்தனர் என்றார் ராஜீவ் பிரதான்.■

# வடகிழக்கு இந்தியாவில் மறக்க முடியாத பயணம்

ரஷீதா பகத்



RC சிலிகுரி சென்ட்ரலின் முதல் தலைவரும் மற்றும் மோட்டார் சைக்கிள் ஆர்வலரும் ஆன விஷால் குப்தா, தனது பிரியமான ஹார்லி டேவிட்சன் சாஃப்டெய்ல் ஹெரிடேஜ் 2021ல் செய்த உற்சாக மான பயணத்தையும் மற்றும் தான் ஹார்ன்பில் திருவிழாவில் பங்கேற்ற தையும் கவிதை போல நினைவுகூறுகிறார். எங்கள் 7 பேர் கொண்ட குழு சிலிகுரியில் இருந்து குவாஹாத்தி, குவாஹாத்தியில் இருந்து திமாபூர் பின்னர் நாகாலாந்தின் கோஹிமா வரை 6 நாள் சவாரி செய்தது. அந்தக் குழுவில் நான் மட்டுமே ஒரு ரோட்டரி உறுப்பினர். ரோட்டரிக் கொடியை ஏந்தியும், எனது சவாரி ஜாக்கெட்டில் ரோட்டரி சின்னத்தை அணிந்தும் ரோட்டரியின் பொதுப் புகழை வளர்க்க பாடுபட்டேன்,'' என்று பெருமையுடன் கூறுகிறார்.

பழங்குடியினருக்கு இடையேயான தொடர்பு களை ஊக்குவிக்கவும், நாகாலாந்தின் கலாச் சார பாரம்பரியத்தை மேம்படுத்தவும், நாகாலாந்து அரசாங்கம் ஒவ்வொரு ஆண்டும் ஹார்ன்பில் திருவிழாவை நடத்துகிறது; இது முதன்முதலில் 2000ல் நடைபெற்றது. மாநிலத்தின் பெரும் பாலான பழங்குடியினரின் நாட்டுப்புறக்கதைகளில் சொல்லப்படும் வண்ண மயமான வனப்பறவையான இந்திய ஹார்ன்பில்லின் நினைவாக இந்த திருவிழா பெயரிடப்பட்டுள்ளது.

1997ம் ஆண்டு முதல் மோட்டார் சைக்கிள் சவாரி



Rtn *விஷால் குப்தா தன் ஹார்லி டேவிட்ஸன் பைக்குடன்.*

செய்து வரும் விஷால் குப்தா அவரது சாகசத்தைப் பற்றி மகிழ்ச்சியுடன் கூறும் பொழுது நாகாலாந்து மக்களைப் மிகவும் பாராட்டுகிறார், ‘அவர்கள் மிகவும் அன்பாகவும், நட்பாகவும், விருந்தோம்பல் அளிப் பவர்களாகவும் இருந்தனர். மலைகள், நெடுஞ் சாலைகள், ஆறுகள், நல்ல உணவு, விருந் தோம்பல் போன்ற வற்றை அனுபவிக்க விரும்பும் ஒருவருக்கு, வடகிழக்கு இந்தியா ஒரு வரப்பிரசாதம்.

மோட்டார் சைக்கிள் சவாரி செய்வதில் தனது ஆர்வத்தை விளக்கும் குப்தா, சவாரி என்பது பைக்கில் அமர்ந்து இலக்கை அடைவது மட்டுமல்ல. அதற்கு திட்டமிடல் மற்றும் துல்லியமான செயலாக்கம் தேவை.’’ என்று கூறுகிறார். ஒரு ஆட்டோமொபைல் டீலரான அவர், சமீபத்தில் அமெரிக்காவிலிருந்து தனது ஹார்லி மோட்டார் சைக்கிள் பெறுவதிலிருந்து அவரது திட்டமிடல் தொடங்கியது. அதை வாங்க அவருக்கு சுமார் 32 லட்சம் ரூபாய் செலவானது. குப்தா மற்றும் அவரது சவாரி குழுவும் வசதியான 3-நட்சத்திர ஹோட்டல் களில் தங்கினர், ஒவ்வொருவரும் பெட்ரோல், ஹோட்டல்கள், உணவு போன்றவற்றின் விலை உட்பட 50,000 முதல் 60,000 ரூபாய் வரை செலவழித்தனர்.

அவரது குழுவின் சவாரி சிலிகுரியில் இருந்து தொடங்கியது, முதல் இலக்கு குவாஹாத்தி. 550 கிலோ மீட்டர் நீளம் கொண்ட அந்த பயணத்தில் சரியான சாலைகள், நெடுஞ் சாலை மற்றும் ஒழுக்கமான ஓட்டுநர்கள் இவை அனைத்தும் இணைந்து மகிழ்ச்சிகரமான பயணமாக இருந்தது. வழியில் மல்பஜார், திஹு, பங்கோயகோன் போன்ற சிறிய நகரங்களை கண்டு களிக்கலாம்.

மறுநாள் குவஹாத் தியில் இருந்து காலை 7 மணிக்குப் புறப்பட்ட குழு, திமாபூரில் சிறிது நேரம் ஓய்வெடுத்த பிறகு இரவு 8 மணியளவில் கோஹிமாவை அடைந்தது. பயணத்தின் பெரும்பகுதி சீரான சாலைகளில் இருந்தபோதிலும், மோட்டார் சைக்கிள் குழு, குறிப்பாக கோஹிமாவை அடைவதற்கு முன்பு, கரடுமுரடான மற்றும் மோசமான சாலைகளை கடக்க நேர்ந்தது. ஒரு குறிப்பிட்ட பகுதியில், மோட்டார் சைக்கிள் சறுக்கி குப்தா கீழே விழுந்தார். “ஆனால் நான் மிகக் குறைந்த வேகத்தில் இருந்ததால் மிகவும் லேசாக கீழே விழுந்தேன்’’ என்று கூறினார்.

மோட்டார் சைக்கிள் மற்றும் அதை ஓட்டுதல் பற்றி பெரிதும் அறியாத நான் அவர் மிகக் குறைந்த வேகத்தில் சென்றும் ஏன் பைக்கைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்று அவரிடம் கேட்க, அவர் கூறியதாவது, வெப்பநிலை 3–4 டிகிரி இருந்ததால், சாலை ஈரமாக இருந்தது, என் பைக் முழுவதுமாக 180 டிகிரி சுழன்று சரிந்தது. என் ஹார்லி டேவிட்சன் மோட்டார் சைக்கிளின் எடை சுமார் 485 கிலோ, அது கீழே விழும்பொழுது, நீங்கள் அதை தடுக்கவோ அல்லது நிறுத்தவோ முயற்சித்தால், தங்கள் எலும்பை உடைப்படும் அல்லது மிகவும் மோசமாக காயமடைவீர்கள்.

எல்லா வகையான சைவ உணவுகளும் கிடைப் பதால் எந்தப் பிரச்சனை யும் இல்லை. ஆனால் எங்கள் பயணத்தை முழுமையடைய செய்தவர் கள் அங்கிருந்த மக்கள் தான். அவர்கள் எங்கள் மீது மிகவும் கவனம் காட்டினர் மற்றும் அந்த பகுதியில் கிளர்ச்சி இருப்பதால் சாலைகளில் வெளியே செல்ல வேண்டாம் என்றும் அவ்வபோது எச்சரித்தனர்.

அவர் ஒரு சம்பவத்தை நினைவுகூர்ந்து, 20 மோட்டார் சைக்கிள் ஓட்டுனர்கள் கோஹிமாவில் ஒரு தவறான சாலையில் சென்றுவிட்டேன். அங்கிருந்த காவல் அதிகாரி எனக்கு சரியான வழியைக் காட்டியது மட்டுமல்லாமல், சாலையின் தவறான பக்கத்திலிருந்து வெளியே வருவதற்காக போக்குவரத்தை நிறுத்தினார். இத்தகைய உதவிகள் உங்கள் இதயத்தில் ஒரு மகிழ்ச்சியான நினைவை ஏற்படுத்தும்! ஒட்டு மொத்தமாக, இது ஒரு அற்புதமான அனுபவம்.

இந்த மூத்த ஆர்வலரின் மதிப்பு மிக்க உதவிக் குறிப்பு இங்கே. நீங்கள் அஸ்ஸாமை காண விரும்பினால், சிலிகுரியில் இருந்து சாலை வழி சவாரி செய்து வடகிழக்கின் அழகு, அதன் வளமான பாரம்பரியம் மற்றும் மதங்கள், மரபுகள் மற்றும் பழக்கவழக்கங்களின் சங்கமத்தைத் தழுவி செல்லுமாறு பரிந்துரைக்கிறேன். அஸ்ஸாமில் உள்ளூர் தேயிலையை வாங்குங்கள். மூங்கிலால் செய்யப்பட்ட கிராமங்களுக்குச் செல்லுங்கள், இது உங்களுக்கு எப்போதும் நினைவில் இருக்கும் ஒரு அனுபவமாக அமையும் என்கிறார் குப்தா.

நீங்கள் குப்தாவின் யூடியூப் சேனலில் அவரைப் பின் தொடரலாம்: https://youtube.com/thehighwayrider.

# அரசு மருத்துவமனைக்கு உயர்தர உபகரணங்கள்

கிரண் ஜெஹரா

சென்னை ஓமந்துரரார் அரசு மருத்துவமனைக்கு RC மெட்ராஸ் சென்ட்ரல் (RCMC), RID 3232 வழங்கிய அல்ட்ராசவுண்ட் கலர் டாப்ளர் (UCD) மற்றும் முழு தானியங்கு உயிர் வேதியியல் இயந்திரங்களை தமிழக சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடக்கி வைத்தார். நோயாளிகள் நோயறிதலுக்காக நீண்ட வரிசையில் காத்திருக்கின்றனர் என்று கதிரியக்க வியல் துறையைச் சேர்ந்த டாக்டர் சௌமியா சண்முகம் கூற டாக்டர்கள் புதிய உபகரணங்களை உடனடியாகப் பயன்படுத்தத் தொடங்கினர்.

50 வயதான நோயாளியின் தோள்பட்டை மற்றும் மார்பின் மீது அல்ட்ராசவுண்ட் கலர் டாப்ளர் ஆய்வு கருவியை சுழற்றி, அல்ட்ரா சவுண்ட் திரையில் ஒரு வண்ணப் புள்ளியைக் காட்டி, அப்பகுதியில் இரத்த ஓட்டம் தடைபட்டுள்ளதை உறுதிப்படுத்தினார். இந்த இயந்திரம் பல்வேறு உறுப்புகளில் இரத்த ஓட்டத்தின் திசையையும் வேகத்தையும் கண்டறிகிறது அது மட்டுமல்லாமல், இந்த கருவி பாது காப்பானது, செலவு குறைந்தது, எளிதாக எடுத்துச் செல்லக்கூடியது மற்றும் மிகவும் துல்லியமானது. இது ஆஞ்சியோகிராபி போன்ற விலையுயர்ந்த மற்றும் உள்ஆக்கிரமிப்பு அதிகம் கொண்ட முறைகளுக்கு மாற்றாக அமையும்,'' என்று அவர் கூறுகிறார்.

நீல நிற நோயாளி கவுன் அணிந்து, கைகளில் IV கீமோ டிரிப்பை ஏந்திக்கொண்டு, லுகிமியா நோயாளியான ஷோபனா (வயது 23) புதிய UCD வைக்கப்பட்டுள்ள அறைக்குள் எட்டிப்பார்க்கும் போது, எனது சிகிச்சைக்கு உதவக்கூடிய இயந்திரத்தை பார்க்க வந்தேன் என கூறி புன்னகைக்கிறார். செவிலியர் ராமுத்தாய், பின்னர் என்னிடம் கூறுகையில், ஷோபனாவின் புற்றுநோய்க்கு சிகிச்சை இல்லை, அவளால் இன்னும் சில ஆண்டுகள் மட்டுமே வாழமுடியும். ஆனால் புதிய இயந்திரத்தின் உதவியுடன், அவளது வலிக்கான காரணத்தை நாம் எளிதாக புரிந்து கொள்ளலாம் மற்றும் உடனடியாக ஒரு ஊசி மூலம் நிவாரணம் அளிக்கலாம். இயந்திரம் எளிதாக எடுத்துச் செல்லக்கூடியது என்பதால், அவளைப் போன்ற நோயாளிகளை ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு பரிசோதனைக்காக மாற்றுவதற்கான வேலையும் குறையும்.

சோதனை செய்ய இயந்திரத்தின் உள்ளே மாதிரிகளை வைக்கும், உயிர்வேதியியல் துறையின் தலைவரான Dr R சாந்தி, “தானியங்கி உயிர்வேதியியல் இயந்திரத்தை உபயோகிப்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.” என்று கூறினார். அவர் அதை பற்றி விளக்குகையில்:

*மருத்துவமனையில் ஷோபனா செவிலியர் ராமுதாயுடன்.*





*இடதிலிருந்து: கோபிநாத், S R பாலகிருஷ்ணன், ஓமன்துரார் மருத்துவமனை தலைவர் Dr ஜெயந்தி, நல்லம்மை ராமநாதன், Dr குமார் , Dr சாந்தி, ஹரிஷ்குமார், DRFC M அம்பலவானன், ராகவ் ராவ், PDG அபிராமி ராமநாதன், Dr P ஸ்ரீனிவாசன், வினோத் சரோகி மற்றும் சூரியநாராயண ராவ்.*

இது 400 படுக்கைகள் கொண்ட அரசுக்கு சொந்தமான சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை. நாங்கள் இப்போது ஒரே தளத்தில் பல சோதனைகளை (வெவ்வேறு நோயறிதலுக்கான கிட்டத்தட்ட 200 மாதிரிகள்) செய்யலாம், நேரத்தைச் செலவழிக்கும் சோதனை மற்றும் பகுப்பாய்வு செயல்முறைகளைக் குறைத்து நம்பகமான தகவலைப் பெறலாம். மருத்துவச் சொத்துக்களை அதிகரிப்பது தரமான பராமரிப்பைப் கொடுக்கவும் முறையான அறிக்கை களை அளிக்க வேண்டிய கூடுதல் தேவை இருக்கிறது. ஆனால் நாங்கள் அந்த சவாலுக்கு தயாராக இருக்கிறோம்.

செய்தியாளர் சந்திப்பில், சுகாதார அமைச்சர் மா சுப்ரமணியம், நன்கொடையாக வழங்கப்பட்ட உயர் தொழில்நுட்ப மருத்துவ உபகரணங்கள் எண்ணற்ற நோயாளிகளுக்கு பயனளிக்கும். இது போல் நற்செயலை தொடருங்கள், சமூகத்தை மேம்படுத்த எங்களுக்கு உதவுங்கள். என்று வேண்டுகோள் விடுத்தார்.

உயர் தொழில்நுட்ப மருத்துவ இயந்திரங்கள் ''ரூபாய் 23 லட்சம் செலவில் வாங்கப்பட்டன, இது உலகளாவிய மானியத்தால் (GG) ஆதரிக்கப்பட்டது, இதில் பங்களித்தவர்கள் RC கராச்சி (3271), ஹில்ஸ் கெல்லிவில் (9685), நிபோகன் (5580), மெடிசின் ஹாட் (5360), கேடராக்கி கிங்டன் (7040), சங்க உறுப்பினர் PDG அபிராமி ராமநாதன் அவர்களின் நேரடி நன்கொடை 6,622 டாலர் மற்றும் 3,000 டாலர் DDF மற்றும் 12,119 டாலர் RCMC பங்களித்தது'' என்று சங்கத்தின் முன்னாள் தலைவர் டாக்டர் P சீனிவாசன் கூறுகிறார். அவர் சங்க உறுப்பினர்களான S R பாலகிருஷ்ணன், வினோத் சரோகி மற்றும் A G பாலாஜி ஆகியோருடன் சேர்ந்து, இந்த GGயில் பணியைத் தொடங்கினார். ''PDG அபிராமி ராமநாதன் இந்த ஆண்டின் தொடக்கத்தில் வேறு சில மருத்துவ உபகரணங்களின் தொடக்க விழாவிற்காக மருத்துவமனைக்கு வந்திருந்தார், அப்போது மருத்துவ மனையின் தலைவர் அவரிடம் இந்த குறிப்பிட்ட உபகரணத்தை பெற்று தருமாறு கோரிக்கை விடுத்தார். நாங்கள் DG J ஸ்ரீதரை அணுகினோம், அவர் DDF மூலம் எங்களுக்கு ஆதரவளித்தார்.

''நீங்கள் கேட்டதை நாங்கள் உங்களுக்கு வழங்கிவிட்டோம், எங்கள் வேலை இங்கே முடிந்தது'' என்று கூறி, PDG அபிராமி ராமநாதன் மருத்துவமனையின் தலைவர் Dr R ஜெயந்தியிடம் இயந்திரங்கள் பின்தங்கியவர்களுக்கு மட்டுமே பயன்படுத்தப்படுவதை உறுதி செய்யவேண்டும். பணப்பற்றாக் குறைக்காக எந்த ஒரு ஏழையும் தரமான மருத்துவச் சேவை பெறுவதைத் தடுக்கக்கூடாது என்று கூறினார்.

டாக்டர் ஜெயந்தி மேலும் கூறுகையில், எங்கள் நோயாளிகள் அனைவரும், தினசரி கூலித் தொழிலாளர்கள், வீட்டுப் பணிப் பெண்கள் மற்றும் மிகவும் ஏழ்மையான பின்னணியில் இருப்பவர்கள். மொத்தத்தில் தரமான மருத்துவ சேவையை பெற முடியாதவர்கள். இந்த தாராளமான பரிசை வழங்கியதற்காக RCMC க்கு நாங்கள் மிகவும் கடமை பட்டிருக்கிறோம். அவர் மற்றொரு கோரிக்கையை அங்கே வைத்தார் - ஒரு ரேடியோ ப்ரிக்கொன்சி அபலஷன் இயந்திரம்; ''இந்த உபகரணங்களை பெறுவதின் மூலம் எங்கள் நோய்த்தடுப்பு சிகிச்சைப் பிரிவை முழுமையானதாகவும் விரிவானதாகவும் மாறும்.'' என்று அவர் கூறினார். அதற்கு ராமநாதன் நாங்கள் அதை பெற்று தருகிறோம். விரைவில் மற்றுமொரு தொடக்க விழாவை ஏற்பாடு செய்ய தயாராகுங்கள் என்று கூறினார்.

படங்கள்: கிரண் ஜெஹ்ரா.

# பெங்களூருவில் RCCக்களின் சேவை

ஜெய்ஸ்ரீ

ரோட்டரி சங்கத்தைப் போல் அர்த்தமுள்ள வகையில் சமூக சேவை செய்து வருகிறது இங்குள்ள RCC. RID 3190-க்கு உட்பட்ட பெங்களூர் வித்யாரண்யபுரம் ரோட்டரி சங்கத்தின் ஆதரவில் செயல்பட்டு வருவதுதான் RCC பெங்களூர் வித்யாரண்யபுரம். கோவிட் தொற்றின் இரண்டாவது அலையின் துவக்கத்தில் இந்த அமைப்பு தொடங்கப்பட்டது. சேவை மனப்பான்மை கொண்ட 15 பேர் அடங்கிய ஒரு குழு, ஆக்சிஜனுக்கு தேவை அதிகரித்த போது ஆக்ஸிஜன் சப்ளை மற்றும் நிறுவுதல் திட்டத்தில் இணைந்தனர். இரண்டு மாதங்கள் அவர்கள் கடுமையாக உழைத்ததுடன் 80 நோயாளிகளுக்கு ஆக்சிஜன் களை விநியோகித்தனர். ஆஷா ஊழியர்களுக்கு N-95 முகக் கவசங்கள் மற்றும் ஆக்ஸிமீட்டர்கள் வழங்குவதில் ஆதரவுக்கரம் நீட்டினர். நாங்கள் ஆக்சிஜன் உருளைகளை பொருத்துவதற்காக கோவிட் நோயாளிகளின் வீடுகளுக்குச் சென்றோம். அதனால் எங்களுக்கும் கோவிட் தொற்று வந்தது. ஆனால், அதிர்ஷ்டவசமாக உயிர் பிழைத்தோம் என்றார் RCCV தலைவர் முகமது சிக்கந்தர். கோவிட் நிவாரணப் பணிகளை சிறப்பாகச் செய்ததற்காக உலக சுகாதார நிறுவனம் எங்களுக்கு பாராட்டுத் தெரிவித்து கடிதம் வழங்கியுள்ளது. வருகிற ஏப்ரல் 7ம் தேதி உலக சுகாதார தினம் கொண்டாடப்படுவதை அடுத்து, சுவிட்சர்லாந்து நாட்டின், ஜெனிவாவில் உள்ள உலக சுகாதார நிறுவனத் தலைமையகத்துக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

கடந்த 2021ம் ஆண்டு மே மாதம், தாய் சங்கமான RC பெங்களூர் IPP பிலிப்ஸ் ஜான் மற்றும் தில்லியில் உள்ள WHO பணிக் குழு தலைவராக இருக்கும் ரோட்டேரியன் ஸ்ரீனிவாசபாபு ஆகியோர் முன்னிலையில் 8 பெண்கள் உள்பட 15 உறுப்பினர்களுடன் RCC உருவாக்கப்பட்டது.

### திட்டங்கள்

கர்நாடகத்தின் மேற்கு கடற்கரைப் பகுதியில் உள்ள கைகா அணுமின் நிலையம் அருகே உள்ள கிராமத்தில்




*RCC பெங்களூரு வித்யாரண்யபுரா தலைவர் முகமது சிக்கந்தர் மற்றும் உறுப்பினர்கள் மரம் நடும் நிகழ்ச்சியில்.*

ஹலக்கி பழங்குடியினருக்கான நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் இப்போது RCC கவனம் செலுத்தி வருகிறது. எங்கள் திட்டங்களைச் செயல்படுத்த WHO நிதியுதவி செய்து வருகிறது என்றார் சிக்கந்தர்.

இக்குழுவினர் வித்யாரண்யபுரம் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் தொடர்ந்து மருத்துவ முகாம்களை நடத்திவருகின்றனர். மேலும் மாதவிடாய் சுகாதாரம் மற்றும் கழிவுகள் வெளியேற்றுதல் மற்றும் மீண்டும் பயன்படுத்தக்கூடிய சானிட்டரி நாப்கின்கள் விநியோகம் தொடர்பாக பெண்களிடம் விழிப்புணர்வு பிரசாரமும் செய்து வருகின்றனர். முக்கியமாக பிராண்டட் மருந்துகளின் விலையில் ஐந்தில் ஒரு பங்கு விலையில் உள்ள சமமான பலன்களைத் தரும் பொதுவான (ஜெனரிக்) மருந்துகளைப் பற்றி மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறோம். இதன் மூலம் இரத்த அழுத்தம், நீரிழிவுநோய் உள்ளிட்டவற்றுக்கு தொடர்ந்து மருந்து, மாத்திரை சாப்பிடுபவர்கள் பணத்தை சேமிக்க முடியும் என்றார் அவர்.

“புனர்பவ” பிரச்சாரத்தின் குழுவினர், டாக்டர் ராஜ்குமார் கண் வங்கி, நாராயணா நேத்ராலயா, ராமையா மருத்துவக் கல்லூரி மற்றும் ESI மருத்துவக் கல்லூரி ஆகியவற்றுடன் இணைந்து மருத்துவ ஆராய்ச்சிக்காக உடல் தானம், மற்றும் கண் தானத்தை வலியுறுத்தி வருகின்றனர். எங்கள் பிரசாரத்தின் மூலம் நாராயணா நேத்ராலயாவுக்கு 300 பேர் கண் தானம் செய்துள்ளனர்.

“ஆபத்பாந்தவா” திட்டம் ரோட்டரி உதவி எண் மற்றும் இதயத்துடிப்பை கட்டுப்படுத்தும் கருவிகள் இணைந்த ஆம்புலன்ஸ் வசதி கொண்டது. உறுப்பினர்கள் அவசரநிலைகளைக் கையாளும் வகையில் துணை மருத்துவப் பயிற்சி பெற்றுள்ளனர். உள்ளூர் மருத்துவர் களும் தேவைப்படும் நேரத்தில் உதவிகளை வழங்குகிறார்கள். RCC அமைப்பின் “மார்ப்பு” திட்டம் திருநங்கைகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில் பயிற்சிப் பட்டறைகளை வழங்கி வருகிறது.

சிக்கந்தர், 2008ம் ஆண்டுவரை சுமார் 8 ஆண்டுகள் ஹைதராபாத் ஈஸ்ட் ரோட்டரி சங்கத்தின் (RID 3150) உறுப்பினராக இருந்தார். பின்னர் ஹைதராபாதிலிருந்து பெங்களூருவுக்கு இடம் மாறினார். நான் இந்த பகுதிக்கு வந்தபோது அவர்களில் பெரும்பாலானோருக்கு ரோட்டரி பற்றி அதிகம் தெரியவில்லை. ரோட்டரியின் திட்டச் செயல்பாடுகள், சட்ட திட்டங்கள் குறித்த தகவல்களை வாட்ஸ்ஆப் மூலம் நான் அவர்களிடம் பகிர்ந்து கொண்டேன். இதையடுத்து அவர்கள் ரோட்டரி மீது ஆர்வம் காட்டினர். நைஜீரியா, ஜப்பான் போன்ற நாடுகளில் RCC மாதிரி அமைப்பு எப்படி வெற்றிகரமாகச் செயல்படுகிறது என்பதைத் தெரிந்துகொண்டோம். இறுதியில் பிலிப்ஸ் ஜான் கொடுத்த உந்துதலை அடுத்து RCC உருவானது என்று அவர் கூறினார்.



*RCC உறுப்பினர் க்ளிஃபோர்ட் சென்னை அருகே ஒரு மீனவ கிராமத்தில்.*

### நிதியுதவி

தாய் சங்கம் நல்ல ஆதரவு அளித்து வருகிறது. ஆனால், பாபு, தமது நிறுவனத்தின் CSR நிதி மூலம் இந்த RCCக்கு முக்கியப் பங்களிப்பாளராக இருந்து வருகிறார். அவர் ஒரு பருத்தி உற்பத்தியாளர் மற்றும் ஏற்றுமதியாளர்.

உறுப்பினர்களின் சராசரி வயது 50. நலத்திட்ட நடவடிக்கைகளில் குடும்பத்தினரும் ஈடுபடுகின்றனர். உறுப்பினர்களின் மனைவிமார்கள் மாதவிடாய் சுகாதாரத் திட்டங்களில் பங்கேற்கின்றனர். பெண்களிடமும், சிறுமிகளிடமும் பேசி வருகின்றனர். குழந்தைகளும் ஆர்வத்துடன் திட்டங்களில் ஈடுபட்டு வருகிறார்கள். உறுப்பினர்கள் ஒவ்வொரு சனிக்கிழமையும் சந்தித்துப் பேசுகின்றனர். ஆன்லைன் மூலம் விவாதித்தும் திட்டங்களை வகுக்கின்றனர். குழந்தைகள், குடும்பத் தலைவிகள், நாங்கள் என 35 பேர் ஒன்றாகக் கூடுவோம் என்கிறார் அவர்.

சங்கம் அதன் திட்டங்களை சொந்த இடத்திலோ அல்லது ஒரு குறிப்பிட்ட பகுதியிலோ செயல்படுத்துவதில்லை. ஒரு முறை சங்க உறுப்பினர்களில் ஒருவர், சென்னை அருகே கல்பாக்கம் என்ற இடத்துக்குச் சென்றபோது, அங்கு

மீனவர்களின் குழந்தைகள் தரையில் கட்டம் வரைந்து நாணயங்களுக்குப் பதிலாக கூழாங்கற்களைப் பயன் படுத்தி லூடோ விளையாடிக் கொண்டிருந்ததைப் பார்த்தார். இதை அவர் எங்களிடம் தெரிவித்தபோது, நாங்கள் உடனடியாக அவர்களுக்கு கேரம் போர்டு உள்ளிட்ட விளையாட்டுப் பொருள்கள், புத்தகங்கள் மற்றும் அவற்றை பாது காப்பாக வைப்பதற்கான அலமாரி ஆகியவற்றை வழங்கினோம். சமீபத்தில், சங்கம் அதன் தாய் சங்கத்துடன் இணைந்து பெங்களூரு ஊரகப் பகுதியில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளிக்குத் தேவையான அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தது.



*RCCV உறுப்பினர் ஆக்னஸ் விஜயா கிராமத்து பெண்களுக்கு மாதவிடாய் சுகாதாரம் பற்றி கூறுகிறார்.*

### ஸ்மார்ட் வகுப்புகள்

மாவட்டத்தில் உள்ள 60 RCCக் களில் ஆறு மிகவும் சுறுசுறுப்பாகச் செயல்பட்டு வருகிறது என்றார் மாவட்ட RCC கமிட்டி தலைவர் பால் முண்டக்கல். அவற்றில் ஒன்று RCC பெங்லிஹோஸஹள்ளி. தாய் சங்கமான பெங்களூர் சௌத் ரோட்டரி சங்கத்தின் உதவியுடன் சர்வதேச மானிய உதவியுடன் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

புறநகர் பகுதியில், குக்கிராமமான பெங்லிஹோஸஹள்ளியில் உள்ள கிரீன் வேலி பள்ளியில் 1 முதல் 12 ஆம் வகுப்புவரை படிக்கும் மாணவர்களுக்கு முன்பதிவேற்றப் பட்ட பாடத் திட்டத்துடன் கூடிய 8 ஸ்மார்ட் வகுப்பறைகளை RCC அமைத்துக் கொடுத்துள்ளது. மேலும் மின்சாரம் கிடைப்பதற்காக சூரிய சக்தி மின்வசதியும் ஏற்படுத்தித் தரப் பட்டுள்ளது. தாய் ரோட்டரி சங்கத் தின் அப்போதையத் தலைவர் டாக்டர் ஜெயப்பிரகாஷ், இந்தப் பள்ளிக்கு சென்றபோது மாணவர்களின் செயல்பாடுகளால் ஈர்க்கப்பட்டதைத் தொடர்ந்து 2019ல் இந்த RCC உருவாக்கப்பட்டது என்றார் RCC தலைவரும், பள்ளி அறங்காவலரு மான முனிசாமி. மொத்த திட்டச் செலவு ரூ.27 லட்சம். இதில் ரூ.20 லட்சம் சர்வதேச மானிய உதவி யாகவும், ரூ.7 லட்சம் தாய் சங்கம் மூலமும் திரட்டப்பட்டது. இப்பள்ளி 2006 ஆம் ஆண்டு முனிசாமி மற்றும் அவரது மூன்று நண்பர்களால் தொடங்கப்பட்டது. சுற்றியுள்ள 72 கிராமங்களைச் சேர்ந்த 1,200 மாணவர்கள் இதில் படித்து வருகின்றனர். குழந்தைகள் வீட்டிலிருந்து பள்ளிக்கும், பள்ளி யிலிருந்து வீட்டிற்கு செல்வதற்கும் பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது.

பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் பள்ளி 100 சதவீத தேர்ச்சி யை தொடர்ந்து உறுதிசெய்து வருவதாக அவர் கூறினார். உயர் வகுப்பில் படிக்கும் மாணவர்களுக்கு RYLA கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகிறது. மேல் படிப்புக்கான ஆலோசனைகளையும் RCC மூலம் வழங்கப்பட்டு வருகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.■

*க்ரீன் வேலி பள்ளியில் சூரிய சக்தி மின்வசதி. RCC பெங்லிஹோஸஹல்லி தலைவர் முனிசாமி (வலது) மற்றும் RC பெங்களூர் சவுத் தலைவர் ராஜேஷ்வரி சுனில் (வலதிலிருந்து 6வது) உள்ளனர்.*





# போலியோவை ஒழிக்க ஒரு இறுதி சுற்று

ராஜேந்திர சாபூ



போலியோவுக்கு எதிரான இந்தியாவின் நீண்ட போராட்டத் தையும் வெற்றியையும் தற்கால தலைமுறையினர் அறிந்திருக்க மாட்டார்கள். ஜனவரி 13, 2011 அன்று, ஹவுராவைச் சேர்ந்த இரண்டு வயது சிறுமி ருக்சார் இந்தியாவில் கடைசியாக போலியோவால் பாதிக்கப்பட்டாள். தெற்காசியாவின் அனைத்து நாடுகளும் இந்தியாவிற்கு 10 ஆண்டுகளுக்கு முன்னரே போலியோ இல்லாத நாடுகளாக மாறிவிட்டன.

டாக்டர் ஆல்பர்ட் சபின் உருவாக்கிய OPV யை (வாய்வழி போலியோ தடுப்பூசி) 1979 ஆம் ஆண்டில், ரோட்டரி 6 மில்லியன் பிலிப்பைன்ஸ் குழந்தைகளுக்கு கொடுத்தது. 1985ல் போலியோ ஒழிப்பிற்காக பெரிய நடவடிக்கை தொடங்கியது, WHO CDC இணைந்து செயல்பட, பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை ஒரு குறிப்பிடத்தக்க பங்காற்றியது.

1988ம் ஆண்டு உலக சுகாதார சபை போலியோ ஒழிப்பை ஏற்றுக் கொண்டாலும், 1993–94 வரை இந்தியாவில் எந்த நடவடிக்கையும் எடுக்கபடவில்லை. அதன்பிறகு, டில்லியின் அப்போதைய சுகாதார அமைச்சராக இருந்த Dr ஹர்ஷ் வர்தன் அவர்களின் திட்டப்படி, ஐந்து அல்லது அதற்கு குறைவான வயதுடைய அனைத்து குழந்தைகளுக்கும் ஒரே நாளில் தடுப்பூசி செலுத்தபட்டது. இது மிகவும் பயனுள்ளதாக இருந்தது மற்றும் அந்நாள் தேசிய நோய்த்தடுப்பு நாள் என அறியப்பட்டு, இந்தியா முழுவதும் கடைபிடிக்கப்பட்டது. இந்த செயலாக்கத்தின் பெருமை மத்திய சுகாதார அமைச்சர்கள் சுஷ்மா சுவராஜ், அன்புமணி ராமதாஸ், குலாம் நபி ஆசாத் ஆகியோருக்குச் சேரும். இருப்பினும் சிறுபான்மை சமூகத்தினரிடையே போலியோ தடுப்பூசிக்கு கடும் எதிர்ப்பு கிளம்பியது. ரோட்டரியின் அவுட்ரீச் திட்டத்தின் மூலம் அவர்கள் மனம் மாற்றபட்டது. அவர்களின் குழந்தை களுக்கு இலவச போலியோ அறுவை சிகிச்சைகள் அளிக்கபட்டது, மேலும் தடுப்பூசிகளுக்கு அரசாங்கத்தால் நிதியுதவி அளிக்கப்பட்டது. அதிலிருந்து, இந்தியாவில் WHO மற்றும் UNICEFவின் போலியோ பணிகளுக்கு ரோட்டரி நிதியுதவி அளித்து வருகிறது.

மார்ச் 26, 2014 அன்று, WHO இந்தியாவை போலியோ இல்லாத நாடு என்று சான்றளித்து, தெற்காசியாவை நோயிலிருந்து விடுபட்டதாக அறிவித்தது. ஆகஸ்ட் 2020ல் நைஜீரியா போலியோவில் இருந்து விடுபட்டது. 2021ம் ஆண்டில், வைல்ட் போலியோ வைரஸ் பரவுதல் வரலாற்றில் இதுவரை இல்லாத அளவுக்கு குறைந்த அளவில் பதிவாகியுள்ளது, பாகிஸ்தானில் ஒரு வழக்கும், ஆப்கானிஸ்தானில் நான்கு வழக்கு களும் மற்றுமே பதிவாகியுள்ளன.

2011 முதல் இந்தியா போலியோ வைரஸிலிருந்து விடுபட்டிருந்தாலும், அண்டை நாடுகளான பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் குறித்து கவலை கொண்டுள்ளது. நோய் கண்டறிதலில் பாகிஸ்தான் திறம்பட செயல்படுகிறது. ஆப்கானிஸ்தானைப் பொறுத்தவரை நல்ல செய்தியானது, புதிய அரசாங்கம் போலியோ தடுப்பூசிக்கு ஆதரவாக உள்ளது. மேலும் அக்டோபர் 21, 2021 அன்று, தலிபான் அரசாங்கம் வீட்டுக்கு வீடு தடுப்பூசி திட்டத்தை மீண்டும் தொடங்குவதாக அறிவித்தது.

2026-க்குள் உலகம் போலியோ இல்லாத சான்றிதழைப் பெறும் என்று நம்பப்படுகிறது. அதுவரை நிதி திரட்டப்பட வேண்டும். இதில் ரோட்டரி தனது பங்கைத் தொடர் கிறது, ஒவ்வொரு ஆண்டும் 1 மில்லியன் திரட்டி முன்னேற்றத்தைக் கண்காணித்து வருகிறது. போலியோ இல்லாத உலகம் என்ற ரோட்டரியின் 1978 கனவு நனவாகும் பொன்னான தருணமாக இது இருக்கும்.

எழுத்தாளர் முன்னாள் RI தலைவர்

© தி ட்ரிப்யுன்.

# வேடிக்கைகள் நிறைந்த மெய்நிகர் இளைஞர் பரிமாற்றம்!

சச்சின் ஜம்மா

*மெக்ஸிகன் பங்கேற்பாளர்களுடன் ஆன்லைனில் தீபாவளியைக் கொண்டாடுவது, அவர்களுடன் யோகா செய்வது, இந்தியன் மற்றும் மெக்ஸிகன் உணவு வகைகளைத் தயாரிப்பது என இந்த மெய்நிகர் இளைஞர் பரிமாற்ற நிகழ்வு எதிர்பாராத வகையில் வேடிக்கைகள் நிறைந்ததாக இருந்தது.*

அன்பான ரோட்டேரியன்களே, RID 3132ன் ரோட்டரி மெய்நிகர் இளைஞர் பரிமாற்ற திட்டத்தின் (RYE) தலைவர் என்ற முறையில் எனது முதல் அனுபவத்தை உங்களுடன் பகிர்ந்துகொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். ஒரு வருடத்திற்கு முன்னரே இந்த பதவி எனக்கு வழங்கப்பட்டது. கோவிட் தொற்று காரணமாக எங்களால் ஒரு இளைஞர் பரிமாற்ற நிகழ்ச்சியைக்கூட நடத்த முடியாமல் இருந்தது எனக்கு எரிச்சலூட்டியது. நேரடி இளைஞர் பரிமாற்றத்துக்கு ரோட்டரி தலைமை அனுமதிக்கவில்லை. மேலும் உலகம் முழுவதிலும் உள்ள ரோட்டரி இளைஞர் பரிமாற்ற திட்டத் தலைவர்களும் மெய்நிகர் முறையில் இவற்றை நடத்த ஆர்வம் காட்டவில்லை.

ஆனால், நான் தொடர்ந்து முயற்சி செய்துகொண்டே இருந்தேன். பலமுறை மின்னஞ்சல் அனுப்பிக் கொண்டே இருந்தேன். இறுதியில் RID 4170ன் ரோட்டரி இளைஞர் பரிமாற்றத் திட்டத் தலைவர் எரிகாவிடமிருந்து பதில் வந்தது. ஆஹா இறுதியில் எங்களுடன் இணைந்து கொள்ள ஒருவர் ஒப்புக்கொண்டார். நான் உற்சாகமடைந்தேன். மற்ற RYEக்களைப் போலவே நாங்களும் மெய்நிகர் இளைஞர் பரிமாற்ற நிகழ்ச்சிக்கு புதியவர்கள்தான். இந்த நிகழ்ச்சியை நடத்துவது குறித்து எந்த தெளிவான வழிகாட்டுதல்களும் இல்லை. ஆனால், நாங்கள் உறுதியாக இருந்தோம். இருதரப்பினரும் ஒருமாதம் சோதனை ஓட்டம் நடத்த முடிவு செய்தோம். புதிய நிகழ்ச்சி என்பதால் விண்ணப்பங்களைப் பெறுவது எளிதான காரியமாக இல்லை. ஒருவழியாக கஸ்தூரி, கரன் மற்றும் ஆர்யன் ஆகிய மூவரிடமிருந்து விண்ணப்பங்கள் வந்தன. அதேபோல எரிகாவும், ப்ரீடா, கேமி மற்றும் கிஸ்ஸல் என்ற மூன்று பெண்களின் பெயர்களை அறிவித்திருந்தார்.

என்னுடைய மாவட்டம் 3132 சார்பாக ஒரு உள்வரும் திட்டத்தை நடத்த திட்டமிட்டேன். அதேபோல மெக்ஸிகன் மாணவர்களும் தங்கள் அனுபவங்களைக் கூறுவார்கள் என நினைத்தேன். ஆனால், மூன்று என்பது சிறிய எண்ணிக்கையாக இருந்தது. எனவே நான், எனது மாவட்ட மாணவர்கள் அனைவரையும் மெய்நிகர் நிகழ்ச்சியில் இணையுமாறு கேட்டுக் கொண்டேன். இதில் சுவாரஸ்யம் என்னவெனில் இரு தரப்பிலும் இளைஞர் பரிமாற்றத் திட்டத்தில் தொடர்புடைய ரோட்டேரியன்கள் மேலும் சிலர் இதில் பங்கேற்க ஒப்புக்கொண்டனர். இந்நிகழ்ச்சி மிகவும் வேடிக்கை நிறைந்ததாக இருந்தது. ரோட்டரி இளைஞர் பரிமாற்றம் (RYE) மற்றும் ரோட்டரி நட்புறவு பரிமாற்றம் (RFE) இரண்டும் சேர்ந்த கலவையாக நிகழ்ச்சி அமைந்தது. வரவேற்பு நிகழ்வில் மெக்ஸிகோ மாணவர்கள், மெக்ஸிகோ பற்றியும்,



அவர்களின் RID 4170ன் செயல் பாடுகள் குறித்தும் விளக்கக் காட்சி களை அளித்தனர்.

நான் வேண்டுமென்றே தீபாவளி பண்டிகையின்போது உள்வரும் திட்டத்தை செயல் படுத்த திட்டமிட்டிருந்தேன். மெக்ஸிகன் மாணவர்கள் தீபாவளியை வண்ணமயமாகவும், ஒளிவெள்ளத்திலும் இந்திய குடும்பத்தினருடன் கொண்டாடினர். பல்வேறு சடங்குகளில் பங்கேற்றனர். ரங்கோலி போட்டி, தீபம் ஏற்றுவது மற்றும் இனிப்புகள் தயாரிப்பது என பலவற்றிலும் பங்கேற்றனர். இவையெல்லாமே மெய்நிகர் முறையில் நடந்தது. மெக்ஸிகோவைச் சேர்ந்த மாணவர்கள் மற்றும் ரோட்டேரியன்கள் தீபாவளி பண்டிகை தொடர்பான அமர்வுகளில் பங்கேற்று இந்திய கலாசாரம் பற்றிய தகவல்களைத் தெரிந்துகொண்டனர். இந்தியாவைச் சேர்ந்த ரோட்டேரியன்கள் மெக்ஸிகோ மாணவர்களுக்கும் சில ரோட்டேரியன்களுக்கும் இந்திய இனிப்பு வகைகளை குறிப்பாக, ஷாஹி துக்டா மற்றும் காரமான மூங்க் சிலா ஆகியவற்றை தயாரிக்க கற்றுக்கொடுத்தனர்.



இரு தரப்பு மாணவர்கள், தங்கள் நாட்டு உணவு வகைகளை சிறப்பாகத் தயாரித்திருந்தனர். அனைவரும் இணைந்து வேலை செய்ததற்காக மெய்நிகர் நிகழ்வுக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும். மூன்று மெய்நிகர் சந்திப்புகளின் முடிவில், இந்திய யோகா ஆசிரியர் வழிகாட்டுதல் பேரில் அனைத்து மாணவர்கள் மற்றும் ரோட்டேரியன்கள் அடிப் படை யோகா பயிற்சி மற்றும் பிராணாயாமம் செய்தனர். சிறந்த நடன ஆசிரியர் உதவியுடன் இந்திய நடனக் கலையின் அடிப் படை அம்சங்களைத் தெரிந்து கொண்டனர். வாஸ்கோடகாமா ரோட்ராக்ட் சங்கத்தின் உதவியுடன் மெக்ஸிகன் மாணவர்கள் மெய்நிகர் முறையில் கோவா சுற்றுப் பயணத்தை அனுபவித்தனர். மெக்ஸிகன் மாணவர்கள் தங்களின் அனுபவங்களை பகிர்ந்து கொண்டதை அடுத்து உள்வரும் நிகழ்வு முடிவுக்கு வந்தது. மெய்நிகர் நிகழ்ச்சியில் பங்கேற்ற 6 மாணவர்களுக்கு RID 3132 சார்பில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். இரு தரப்பு களைச் சேர்ந்த ரோட்டரி மாவட்டத் தலைவர்களும் பங்கேற்றவர்களுக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

RID 3132 மாணவர்களுக்கான வெளிவரும் நிகழ்வும் சுவாரஸ்யமாக இருந்தது. மெக்ஸிகன் ரோட்டரி இளைஞர் பரிமாற்றத் திட்டத் தலைவர் எரிகா, நிகழ்ச்சியை சிறப்பாக அமைத்திருந்தார். பங்கேற்ற 6 மாணவர்களும் மெக்சிகன் கோகடா மற்றும் என்சிலா சாஸ் ஆகியவற்றை தயாரிப்பது எப்படி என்று மெய்நிகர் நிகழ்ச்சி மூலம் தெரிந்து கொண்டனர். ஆர்வத்துடன் செயல்பட்ட உள்ளூர் ரோட்டேரியன்களுக்கு நன்றி. மெக்சிகன் வரலாற்றைத் தெரிந்து கொள்வதும் Day of the Dead- இன் பாரம்பரிய விவரங்கள் சுவாரஸ்யமாக இருந்தது. பினாட்டா (Pinatas)-பல்வேறு வடிவங்களில் தயாரிக்கப்படும் இனிப்புகளுடன் கிறிஸ்துமஸ் கொண்டாடியது மகிழ்ச்சியாகவும் வேடிக்கையாகவும் இருந்தது.

மெய்நிகர் முறையிலான ரோட்டரி இளைஞர் பரிமாற்ற நிகழ்ச்சி முடிவுக்கு வந்தபோது மாணவர்களும், ரோட்டேரியன்களும் கண்ணீர் மல்க விடைபெற்றனர். 2022ம் ஆண்டு ஜூலை முதல் இளைஞர் பரிமாற்ற நிகழ்வுகள் நேரடியாக நடைபெறும் என்ற உறுதிமொழி அவர்களுக்கு ஆறுதல் அளித்தது. ரோட்டரி இளைஞர் பரிமாற்றம் மட்டுமின்றி ரோட்டரி நட்புறவு பரிமாற்ற நிகழ்ச்சிகள் நடத்தவும் இரண்டு மாவட்டங்களும் திட்ட மிட்டுள்ளன. RID 3132-க்கு உட்பட்ட சோலாபூர் வடக்கு ரோட்டரி சங்கம் மற்றும் லாஸ் லோமாஸ் ரோட்டரி சங்கமும் (RID 4170) இது தொடர்பாக உடன்பாடு செய்துகொண்டுள்ளது குறிப்பிடத்தக்க அம்சமாகும். ஒட்டு மொத்தமாக RYE மாணவர்களுக்கு மட்டுமின்றி இரு மாவட்டங்கள் மற்றும் அதன் குடும்பங்களைச் சேர்ந்த ரோட்டேரியன்களுக்கும் இது ஒரு அற்புதமான, தனித்துவமான மற்றும் மறக்க முடியாத வாழ்நாள் அனுபவமாக இருந்தது.

நான் இப்போது மாறுபட்ட மனிதன். மெய்நிகர் முறையிலான ரோட்டரி இளைஞர் பரிமாற்றம் நீடிக்கும். அதற்கு பல காரணங்கள் உள்ளன. பயணம் இல்லை. ஆபத்து இல்லை. நடைமுறையில் எந்த தொந்தரவும் இல்லை. நேரடி இளைஞர் பரிமாற்ற நிகழ்ச்சியைப் போலவே இதுவும் வேடிக்கை நிறைந்ததாக இருந்தது. இதற்கு அதிகம் செலவிட வேண்டியதில்லை என்பதால் சமூகப் பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்கள்கூட இதில் பங்கேற்க முடியும். 2022ம் ஆண்டு ஜூலை முதல் ரோட்டரி இளைஞர்கள் நேரடி பரிமாற்ற நிகழ்வுகள் தொடங்கினாலும், மெய்நிகர் முறையிலான ரோட்டரி இளைஞர் பரிமாற்ற நிகழ்வுகளும் தொடர வேண்டும் என்பதுதான் ரோட்டரி தலைமைக்கு நான் முன்வைக்கும் வேண்டுகோளாகும்.

கட்டுரையாளர் RC சோலாப்பூர் நார்த், RID 3132, உறுப்பினர்.

படம்: D சஞ்சய்

# பெங்களூர் ரோட்டரி பார்வையற்றவர்களுக்காக நடத்திய செஸ் போட்டி

கிரண் ஜெஹரா



நீங்கள் செஸ் விளையாடுபவரா? அதனை கண்மூடி விளையாட முயற்சிக்கவும், என்று இந்தக் கட்டுரைக்கான விவரங்களைப் பகிர்ந்து கொள்ளும்போது ஷஷிதரா KM கூறுகிறார். ஒவ்வொரு முறையும் அவர் ஒரு செஸ் போட்டிக்குச் செல்லும் முன் பின்வரும் வழக்கத்தை முயற்சிக்கிறார் - செஸ் பலகையில் குதிரையை நகர்த்தி ஒரு சதுரத்திலிருந்து மற்றொரு சதுரத்திற்கு செல்லும் குறுகிய பாதையை கண்டறிகிறார். உதாரணமாக, எனது குதிரைக்கு B1 முதல் G8 வரை செல்ல சிறந்த வழி எது? இது ஆட்டத்திற்குத் தயாராவதற்கு எனக்கு மிகவும் உதவுகிறது, என்று RC பெங்களூர் (RCB), RID 3190 சமீபத்தில் சங்கத்தின் அரங்கமான ரோட்டரி ஹவுஸ் ஆஃப் ஃப்ரெண்ட்ஷிப்பில் நடத்திய செஸ் போட்டியில் வெற்றி பெற்ற பார்வையற்ற செஸ் வீரர் கூறுகிறார்.

பார்வையற்ற வீரர்களுக்கு காட்சிப்படுத்தல், கற்பனை, கணக்கீடு மற்றும் தொடுதல் ஆகியவையே விளையாட்டின் ஆதாரம். காய்களின் மேல் உள்ள முள்ளை தொடுதல் மூலம், ஒரு வெள்ளை நிற காயினை கருப்பு நிற காயிடம் இருந்து வேறுபடுத்திப் உணர வீரருக்கு உதவுகிறது, மேலும் அந்த காய்களின் மூலம் சிப்பாய், யானை, மந்திரி, குதிரை, ராணி அல்லது ராஜா என்பதை வேறுபடுத்தி தீர்மானிக்க முடியும். பிரெய்ல் போர்டில் உள்ள சதுரங்கள் உயர்த்தப்பட்டு, பலகையில் உள்ள வெவ்வேறு சதுரங்களை அடையாளம் காண அவற்றின் மீது புள்ளிகள் கொண்ட ஒரு சிறப்பு செஸ் பலகை பயன்படுத்தப்படுகிறது. எனவே, அந்த வீரர்கள் தனது மனதில் பலகையில் உள்ள நிலையைப் பற்றிய தெளிவான காட்சியை காண முடியும். மேலும் ஒரு சிறப்பு கடிகாரம் ஒவ்வொரு வீரரும் காய் நகர்த்து வதற்கு எடுத்துக்கொண்ட நேரத்தைக் கணக்கெடுக்கும்.

பார்வையற்றோருக்கான ஒரு நாள் ஸ்பீடு செஸ் போட்டி யானது, கர்நாடகா மாநில பார்வை யற்றோருக்கான செஸ் சங்கத்துடன் இணைந்து நடத்தப்பட்டது, இதில் பெங்களூரு, ராய்ச்சூர், மண்டியா, பாகல்கோட், மைசூரு மற்றும் பிற நகரங்களைச் சேர்ந்த 34 வீரர்கள் தங்கள் திறமையை பரிசோதிக்கும் விதமாக ஒருவருக்கொருவர் எதிர்த்து சுவிஸ் லீக் முறையில் போட்டியிட்டனர். இந்த முறையில் எந்த வீரர்களும் தோல்வி அடைந்தால் நீக்கப்பட மாட்டார்கள் மாறாக கொடுக்கப்பட்ட நேரத்தில் அதிக எண்ணிக்கையிலான நகர்வுகளின் அடிப்படையில் வெற்றியாளர் தேர்ந்தெடுக்கப்படுவார். பங்கேற் பாளர்கள் அனைவருக்கும் பிரெய்ல் சான்றிதழ் வழங்கப்பட மேலும் 10 வெற்றியாளர்களுக்கு மொத்தம் ரூ.25,000 ரொக்கப் பரிசுகள் வழங்கப்பட்டன.



RCBன் தொழிற்கல்வி சேவைகள் தலைவர் சந்தீப் ஒஹ்ரி கூறுகையில், பார்வையற்றவர்களும் பார்வையுடையவர்களுக்கு இணையாக விளையாடக்கூடிய ஒரே விளையாட்டு செஸ். பார்ப்பதற்கு சுவாரஸ்யமாக இருப்பது மட்டு மல்லாமல், அவர்கள் விளையாட்டின் துல்லியமும் நம் மனதைக் கவரும். ரோட்டரியின் DEI கொள்கைக்கு இணங்க, அவரது சங்கம் பார்வை குறைபாடுள்ளவர்களுக்கான அனுசரிப்பை தீவிரமாக ஊக்குவித்து வருகிறது. நாங்கள் உருவாக்கிய RC பெங்களூர் எபிலிடிஸ் (RBA) மாற்றுத் திறனாளிகளுக்காக சேவை புரியும் மாற்றுத்திறனாளி உறுப்பினர்களால்




*RCB முன்னாள் தலைவர் ரங்கா ராவ் ப்ரெய்ல் செஸ் சான்றிதழை K M ஷஷிதருக்கு வழங்குகிறார். உடன் (இடதிலிருந்து) ஹரிப்ரியா கிரீஷ், கல்யாணி தாலுக்தார், சந்தீப் ஓஹ்ரி, சங்க செயலாளர் கௌரி ஓஜா, கிரீஷ் ராமனாதன், ஆரிய ஓஹ்ரி மற்றும் Dr தயாப்ரசாத் குல்கர்னி ஆகியோர் உள்ளனர்.*

உருவாக்கப்பட்ட உலகின் ஒரு சில ரோட்டரி சங்கங்களில் ஒன்றாகும்.

RBAன் உறுப்பினர்களுக்காக பிரெய்லில் தயாரிக்கப்பட்ட ஒரு வாழ்க்கை முறை இதழுக்கான வருடாந்திர சந்தாவையும் சங்கம் வாங்கியுள்ளது.'' நம்மிடம் பாடப் புத்தகங்கள் உள்ளன, ஆனால் பார்வையற்றவர்களுக்கு வாழ்க்கை முறை இதழ்கள் அல்லது லேசான வாசிப்புகளுக்கு இல்லாமல் இருந்தது.'' பொழுதுபோக்கு, தலைமைத்துவம், புனைகதை, செய்திகள், விளையாட்டு மற்றும் நடப்பு விவகாரங்கள் பற்றிய பல்வேறு கட்டுரைகளைக் கொண்ட 64 பக்க ஆங்கில மாத இதழான White Print-ஐ சங்கம் பார்த்தபோது, பார்வை குறைபாடுள்ளவர்களுக்கு இது உண்மையிலேயே ஒரு மகிழ்ச்சியான அனுபவமாக அமையும் என உணர்ந்தோம், RBA உறுப்பினர்களுக்காக சந்தாக்களை பெற்றோம். கர்நாடகா முழுவதும் உள்ள 25 நிறுவனங்களை அடையாளம் கண்டு, அவர்களுக்கு White Print-ஐ ஒரு வருடத்திற்கு ரூ.1,30,000 செலவில் வழங்க உள்ளனர். இதன் மூலம் 1,000 பார்வையற்றோர் பயனடைவார்கள்.

செஸ் போட்டி முடிந்ததும், RBA தலைவர் அரவிந்திடம் இதழின் பிரதிகள் வழங்கப்பட்டன, அவர் கூறுகையில், ''இது பொழுது போக்காக இருக்கிறது, நாங்கள் சந்திக்கும் நபர்களுடன் விவாதிக்க இன்னும் பல தலைப்புகள் இதன் மூலம் கிடைத்திருக்கிறது, மேலும் எங்கள் சமூகத்திற்காக பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்ட இந்த இதழை வாசிப்பதில் அடையும் மகிழ்ச்சியை என்னால் விவரிக்க இயலாது.''■

Rotary PEOPLE OF ACTION

# கட்டக்-கில், நலிந்தோருக்கு டயாலிசிஸ் மையம்

ரோட்டரி செய்திக் குழு




PDG A B *மொஹாபத்ரா (இடதிலிருந்து 3வது) சங்கத்தின் புதிய டயாலிஸிஸ் மையத்தில்.*

கடுமையான சிறுநீரக நோய் கொண்ட நோயாளிகளுடைய எண்ணிக்கை மிகுந்துவருவதால், அவர்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்காக JPM ரோட்டரி கண் மருத்துவமனையில் இரண்டு இயந்திரங்களுடன் ஒரு டயாலிசிஸ் மையத்தை அமைத்துள்ளது RC கட்டக், RID 3262. ரூ.34 லட்சம் மதிப்புள்ள இந்த மையத்துக்கான பணி சென்ற ஆண்டு இந்தச் சங்கத்தின் பிளாட்டினம் விழாக் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாகத் தொடங்கியது. இது DDFயிடமிருந்து ரூ.10 லட்சத்தைப் பெற்றது, மீதி நிதியை உறுப்பினர்கள் திரட்டினார்கள். PRID பரத் பான்ட்யா தன்னுடைய மெய்நிகர் உரையில், ஓராண்டுக்குள் இந்தத் திட்டத்தை நிறைவு செய்த இந்தச் சங்கத்தைப் பாராட்டினார். IPDG சௌம்ய ரஞ்சன் மிஷ்ரா, PDG A B மொஹாபத்ரா மற்றும் சங்கத்தின் முன்னாள் தலைவர் பிந்து குமார் தாஸ் இந்த வளாகத்தை மருத்துவமனைக்கு அர்ப்பணித்தார்கள். இந்த மருத்துவமனை இந்த வசதிக்காக நோயாளிகளிடம் ஒரு சிறு கட்டணத்தை வசூலிக்கும், இவ்வாறு திரட்டப்பட்ட தொகை இதைப் பராமரிக்கப் பயன்படுத்தப்படும்.■

# 50 ஆண்டுகளைத் தொடும் RC மெட்ராஸ் மிட்-டவுன்

V முத்துகுமரன்

ஒருவருடைய கனவு, எண்ணம், யோசனை, தொலைநோக்கு அல்லது திட்டத்தின் ஆற்றலை எப்போதும் குறைத்து மதிப்பிடாதீர்கள், அது இந்திய அளவில் ஆழமான சமூகத் தாக்கத்தைக் கொண்டிருக்கலாம் என்றார் RI தலைவர் சேகர் மேத்தா. RC மெட்ராஸ் மிட்-டவுன், RID 3232, பொன்விழாக் கொண்டாட்டங்களின் போது அவர் இவ்வாறு பேசினார். தன்னுடைய கருத்தை விவரிப்பதற்காக, 15 ஆண்டுகளுக்கு முன், குஜராத்தில் உள்ள வாபி என்ற சிறிய நகரத்தில் நடைபெற்ற PRIP கல்யாண் பேனர்ஜியின் மகனுடைய திருமணத்துக்குத் தான் வந்ததைப்பற்றியும், அது தன் மனநிலையை முற்றிலும் மாற்றியதைப்பற்றியும் அவர் நினைவுகூர்ந்தார்.

அந்தத் திருமணம் ஒரு ரோட்டரி பள்ளியில் நடைபெற்றது. அதற்கு என்ன காரணம் என்று அவர் நினைத்துக் கொண்டிருந்த போது, அந்தப் பள்ளியில் மிக நன்றாக அழகு படுத்தப்பட்ட புல்வெளி ஒன்றை நான் பார்த்தேன், அப்போது 54 உறுப்பினர்களைக் கொண்ட RC வாபி-யின் திட்டம் அது. 200,000 மக்களைக் கொண்ட அந்த ஊரில் பள்ளி ஏதும் இல்லை, ஆகவே, அவர்கள் ஒரு தொடக்கப் பள்ளியைத் தொடங்கினார்கள், அதை உயர்நிலைப் பள்ளியாக மேம்படுத்தினார்கள், அதில் இப்போது 2,000 மாணவர்கள் படிக்கிறார்கள். பின்னர், மேற்படிப்புக்காக ஒரு கல்லூரி தொடங்கப்பட்டது. இப்போது, இந்தச் சிறிய நகரத்தில் 200 படுக்கைகளைக் கொண்ட அதி நவீன மருத்துவ மனையுடன் கூடிய ஒரு மருத்துவக் கல்லூரி உள்பட ஏழு கல்லூரிகள் உள்ளன, அனைத்தும் RC வாபி-யால் இயக்கப்படுகின்றன.

அந்த வாபி பயணத்தை நான் ஒரு புனிதப் பயணமாக நினைக்கிறேன் என்றார் மேத்தா. அவருடைய சங்கமாகிய RC கல்கத்தா மகாநகரின் அப்போதைய தலைவர் ஓர் இதய அறுவைச் சிகிச்சை மருத்துவர். என்றாலும், அவர்கள் மிகுந்த தயக்கத்துடன் தான் முதன்முறையாகக் குழந்தைகளுக்கான இதய அறுவைச் சிகிச்சைகளை நடத்தினார்கள், ஏனெனில், அது அவர்களுக்குப் பழக்கமில்லாத துறை. அந்த ஆண்டில் நாங்கள் 66 அறுவைச் சிகிச்சைகளை நடத்துவதாக இலக்கு அமைத்திருந்தோம்; ஆனால், 100 இலவச இதய அறுவைச் சிகிச்சைகளை நடத்தினோம். அதன்பிறகு, அந்தத் திட்டம் எங்கள் மாவட்டத்தின் முக்கியத் திட்டமாகிவிட்டது. நான் தனிப்பட்டமுறையில் 2,500 அறுவைச் சிகிச்சைகளில் ஈடுபட்டேன். இப்போது, இந்திய அளவில், முந்தைய 10 ஆண்டுகளில் சங்கங்கள் 20,000க்கும் மேற்பட்ட ஏழைக் குழந்தைகளுக்கு அறுவைச் சிகிச்சைகளைச் செய்துள்ளன, என்றார்.

வாழ்க்கைகளைத் தொடுவதும் மாற்றுவதும் ஒரு பெரிய பரிசு. மனித குலம் செழிக்கவேண்டுமென்றால், ரோட்டரி தன் சக்கரத்தைத் தொடர்ந்து ஓட்டவேண்டும். வாழ்க்கைகளை மாற்றுவதற்குச் சேவை புரிகிற ஆற்றலும் மந்திரமும் நம்மிடம் உள்ளன'' என்றார் அவர்.

சங்கத்தின் முக்கியத்துவங்களை மறு மதிப்பீடு செய்வதற்காக, மூத்த ரோட்டரியன்களுடைய குழு ஒன்றை அமையுங்கள், எதிர்வரும் பத்தாண்டுகளுக்கான ஒரு செயல் திட்டத்தை உருவாக்குங்கள் என்றார் RI

*RI தலைவர் சேகர் மேத்தா மற்றும் RI இயக்குனர் A S வெங்கடேஷ் காஃபி டேபிள் இதழை வெளியிடுகின்றனர். (இடதிலிருந்து) அனுராதா ஜின்டல், ஜெய்சங்கர் உன்னிதன், உஷா குமார், சங்கதலைவர் விக்ரம் ஜின்டல், நிகழ்ச்சி தலைவர் அஷோக்குமார் ஷெட்டி மற்றும் சங்க செயலாளர் V கிருஷ்ணகுமார் ஆகியோரும் உடன் உள்ளனர்.*



இயக்குநர் A S வெங்கடேஷ். அடுத்த 10 ஆண்டுகளுக்கு நீங்கள் ஒரு வியூகத்தை உருவாக்கவேண்டும், இது போதும் என்ற உணர்வு வராமல் தவிர்க்கவேண்டும்'' என்றார் அவர். இந்தச் சங்கம் தன்னுடைய சாத்தியத்தில் 10%ஐக் கூட இன்னும் தொடவில்லை. அதனால், ஒரு புதிய மருத்துவமனை அல்லது பள்ளியைக் கட்டுதல் அல்லது 1,000 பெண்களுக்கு உதவக்கூடிய தொழில் சார்ந்த மையம் ஒன்றை அமைத்தல் போன்ற பெரிய இலக்குகளைத் தேடுங்கள்'' என்று அவர் அறிவுறுத்தினார்.

இச்சங்கத்தின் மைல் கல் திட்டங்கள் சிலவற்றை சங்கத் தலைவர் விக்ரம் ஜிண்டால் பட்டியலிட்டார்: சூளைமேடு மாநகராட்சிப் பெண்கள் பள்ளி மாணவிகளுக்கு 1,400 சானிட்டரி பேட்கள் வழங்கப்பட்டன; ஐந்து பள்ளிகளில் MHM நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன, 600 பெண்களுக்கு சானிட்டரி பேட்கள் வழங்கப்படும், இதற்காகப் பள்ளிகளுக்கு ஒரு தூய்மை அலமாரி பரிசளிக்கப்படும்; மோட்டார்கள், வலைகளைக் கொண்ட 100 படகுகள் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள மூன்று கிராமங்களைச் சேர்ந்த, சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு வழங்கப்பட்டன; நுங்கம்பாக்கம் மாநகராட்சி ஆண்கள் பள்ளியில் இரண்டு கழிப்பறைத் தொகுதிகள் புதுப்பிக்கப்பட்டன, இங்கு இன்டராக்ட் சங்கமும் உள்ளது; இலங்கைக் குழந்தைகளுடைய கல்விக்காகத் தொலைக்காட்சிகளை வழங்க நிதி அளிக்கப்பட்டது.

இந்தச் சங்கம் RC கொடைக்கானலுடன் இணைந்து கோடைமலையில் ‘பிளாஸ்டிக் வேண்டாம்’ என்ற பரப்புரையைத் தொடங்கியுள்ளது, அங்குள்ள வான் ஆலென் செவிலியர் மாணவர்களுக்கு நிதி உதவி வழங்குகிறது.

பெண்களுக்குத் தொழில் சார்ந்த பயிற்சி அளிப்பதன் மூலம் அவர்களுக்கு ஆற்றல் அளிப்பது தங்களுடைய முக்கிய முன்னெடுப்புகளில் ஒன்று என்றார் ஜிண்டால். ஒவ்வொரு மாதமும், சாக்லெட், துணி மற்றும் தாள் பைகள், உரம் மற்றும் ஊறுகாய் செய்தல் போன்ற வீட்டுத் தொழில்களில் 100 பெண்களுக்குப் பயிற்சி வழங்கி அவர்களுக்கு ஆற்றல் அளிக்க நாங்கள் விரும்புகிறோம்'' என்றார் அவர். TRF வழங்கலுக்கு இந்தச் சங்கம் அமைத்துள்ள இலக்கு, $100,000. இதில் $50,000 பொன்விழாக் கொண்டாட்ட நன்கொடை நிறுவல் நிதியாக வழங்கப்படும், மீதித் தொகை திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள அரக்கமேடு கிராமத்தில் உள்ள ஐயப்பன் சேவா சமாஜத்தில் ஐந்து இயந்திரங்களைக் கொண்ட டயாலிசிஸ் பிரிவு அமைக்கிற GG திட்டத்துக்கு வழங்கப்படும். நடமாடும் மாமோகிராஃபி மருந்தகம் ஒன்றைப் பெறுவதற்கான பன்னாட்டு நல்கை ஒன்றில் இந்தச் சங்கம் கூட்டாளராக உள்ளது, இதற்காக அது ரூ.3 லட்சம் பங்களிக்கும்.



*(இடதிலிருந்து)* RID A S *வெங்கடேஷ்,* RI *தலைவர் மேத்தா மற்றும் சங்கத் தலைவர் விக்ரம் ஜின்டல்.*

### பசுமைத் திட்டம்

இந்தியக் கடல்சார் பல்கலைக் கழகத்துடன் இணைந்து இச்சங்கம் ஒரு மிகப் பெரிய பசுமை முயற்சியில் ஈடுபடுகிறது, சென்னையிலும் அதைச் சுற்றியும் 50,000 மரக் கன்றுகளை நட இலக்கு அமைத்துள்ளது. நாங்கள் அந்த வளாகத்தில் எங்களுக்கு ஒதுக்கப்பட்ட 40 ஏக்கருக்கும் மேற்பட்ட பகுதியில் மியாவாகி காடு ஒன்றை உருவாக்குகிறோம், இங்கு அடுத்த மூன்று ஆண்டுகளில் நாங்கள் 2 லட்சத்துக்கும் மேற்பட்ட மரங்களை நடுவோம்'' என்றார் ஜிண்டால். இந்தச் சங்கம் திருத்தணி மற்றும் காரனோடை (சிவப்பு மலைகள்) பகுதிகளில் இரண்டு ஆரஞ்சுப் பார்வை மையங்களை இயக்குகிறது, இந்த ஆண்டு சாந்தோம், பொன்னேரி மற்றும் மீஞ்சூரில் இன்னும் மூன்று மையங்கள் வரவுள்ளன.

AKS உறுப்பினர்களான DRFC M அம்பலவாணன், அவர் மனைவி கீதாவை மேத்தா பெருமைப்படுத்தினார். 2016–17ல் தான் சங்கத் தலைவராகப் பணியாற்றியதை நினைவுகூர்ந்த அம்பலவாணன், மூன்று GG திட்டங்களை நிறைவு செய்தது சங்கத்துக்குப் பெருமையை, மதிப்பைக் கொண்டுவந்தது என்றார்.

RC மெட்ராஸ் தலைவர் மோகன் ராமன் பேசுகையில், RC மெட்ராஸ் மிட்-டவுனுடன் இணைந்து தன்னுடைய சங்கம் ஒரு தையல் மையத்தை அமைக்கும் என்றார். சேலையூர், ரோட்டரி நகர், திருவல்லிக்கேணியில் உள்ள எங்கள் மையங்களுடைய ஊழியர்கள் புதிதாக அமைக்கப்படும் தொழில் சார்ந்த மையத்தின் பயிற்சியாளர்களுக்குப் பயிற்சியளிப்பார்கள். இந்தத் திட்டத்துக்காக ரூ.2.5 லட்சம் மதிப்புள்ள தையல் இயந்திரங்களை நாங்கள் கொடையளிப்போம். முன்னாள் தலைவர் உஷா குமார் தொகுத்த Touching lives, a Madras Midtown journey என்ற காஃபி டேபிள் புத்தகத்தை மேத்தா வெளியிட்டார். நிகழ்ச்சித் தலைவர் ஜெய்சங்கர் உன்னித்தனும் நிகழ்ச்சியில் பேசினார்.

படங்கள்: V முத்துகுமரன்



**Rtn Shekhar Mehta**
RI President



**Rtn Ramesh Meher**
District Governor

# GLIMPSES OF

## A virtual International marathon

The Rotary Club of Nasik Road and RI District 3030 hosted the second edition of a virtual International marathon, cyclothon and walkathon on November 14, 2021, to raise funds to provide digital classrooms for children studying in rural schools. The event saw 800 participants from almost all states of India and many other countries as well. It was planned in such a way that all the participants could walk, cycle or run their chosen distance at any time on the scheduled day wherever they were in the world, either individually or in small groups maintaining the regulations in force for the pandemic situation. This event was the brainchild of PP Rtn Mahesh Salve, himself an avid runner and president Dr Snehal Gangurde. A committee of Rotarians took care of the planning and implementation. Many runners and cyclists' associations throughout RI District 3030 supported the event and helped to achieve the frequently raised targets for participation. Social media was abuzz with the event details and information for almost a month with all Rotary and non-Rotary groups being flooded with appeals for registration, videos of participating local icons and brand ambassadors, district dignitaries including PDGs, DGEs, DGNs, AGs, etc. The club's Facebook page was also updated several times a day with the latest news of the event and was liked by a large number. Nearly 50 lakh persons were made aware of the event making it a huge PR exercise for the club. IPP Dr Amit Gangurde, past presidents Hemant Shidhaye, Vibha Patil and Firdaus Kapadia contributed their efforts and time to make this event a success. They were ably guided and assisted by DG Ramesh Meher and President Enclave Chair PP Sanjay Kalantri.





## A pathology lab inaugurated by RC Malegaon Fort





Rotary Club of Malegaon Fort recently set up a pathological laboratory at Shiv Lab. The lab, inaugurated by the municipal corporation health officer Dr Sapana Thakre, will extend 40 per cent concession for its services for underprivileged people. In her speech Dr Sapana stated that the Rotary club has been significant with its welfare activities in Malegaon Fort. Deputy Commissioner of Malegaon Municipal Corporation Sachin Mahale presided over the event. He too lauded the admirable work of Rotary Malegaon Fort on its health and education activities and promised the support of the corporation for the club's welfare activities. Club president Arun Pathade felicitated health officer Dr Sapana and commissioner Mahale, pathologists Sagar Pawar and Satyam Nikam with copies of the Bhagwad Gita. This programme was anchored by Dr Narendra Thoke. Project manager Kavita Kasliwal detailed the gathering about the project and club secretary Nilesh Patil delivered the vote of thanks. Club members Shashir Hire, Sarjerao Pawar, Vijayalaxmi Ahire, Shippa Deshmukh, Sagar Lonari, Amit Khare and RAC Malegaon Fort president Nilesh Pathade and other Rotaractors were present at the event.

ADVT.

# DISTRICT 3030

जीवन RID 3030 RY 2021- 22
LIVE LIFE.... GIVE LIFE

SERVE TO CHANGE LIVES

## RC Nagpur Metro installs a multispecialty OPD

Rotary club of Nagpur Metro and the Central Neurological Medical Institute (CNMI) have jointly started the 'one of its kind' project of free medical consultancy for senior citizens above age 65. This project was inaugurated on Dec 29, 2021 by orthopaedic surgeon Dr Sudhir Babhulkar. CNMI founder and director Dr Shyam Babhulkar's mother Pramilatai Babhulkar (age 96 years) graced the occasion with her presence and blessed the project. Under this project, neurology, orthopaedic, cardiology, ophthalmology, dental, skin, ENT and homeopathy consultancies will be provided free to senior citizens above 65 yrs on every Wednesday between 3 to 6 pm. Specialised doctors will offer their services.

Club president Satish Dande welcomed Dr. Sudhir Babhulkar with a floral bouquet. Mrs Seema Deshpande greeted Pramilatai Babhulkar; Rtn Aashish Rewatkar welcomed Dr Shyam Babhulkar with a floral bouquet. Dande briefed the audience about the project. Rtn Ramesh Borkute, introduced the chief guest Dr Sudhir Babhulkar. Rtn Sandhya Dande compered the programme.

Dr Sudhir Babhulkar appreciated the project and suggested the organisers to extend it for more days in a week as per the response of senior citizens. He also appealed to the doctors of the city to join this venture and congratulated the organisers. Dr Shyam Babhulkar also congratulated the club for the venture. Dilip Patne presented the vote of thanks.

AG Virendra Patrikar, Rotary Enclave Chair Kishor Rathi, Dr Shirpurkar, Dr Akulwar, Dr Manohar Muddeshwar, Dr Adil Chimthanwala, Dr Rashmi Babhulkar, Dr Sayali Bhave, Dr Kiran Saoji, PP Mahesh Singh, Nishant Mishra (Secretary, Metro club), Ramesh Borkute, Sukhadev Yeole, Gaidhane, Mahesh Mahale, Sanjay Thakre, Girish Dhond, Devendra Verma, Brij Chandak and other club members were present.






## RC Jalgaon Midtown forms an RCC at ZP School, Domgaon



Rotary Club of Jalgaon Midtown formed a Rotary Community Corps with students of Domgaon ZP School, Pachora Jalgaon. The club donated a water filter, two ceiling fans, drawing books, crayons and pencils to the needy students of the school. Mr Tayade, Kendra Pramukh and village sarpanch graced the programme. Dr Aparna Makasare spoke on women's empowerment and Rotary's role in leadership development. Vishwas Thakur, head master of the school, explained the challenges faced by the rural students and presented the vote of thanks. Club member Kishor Patil donated the water filter to the school so that the studens and staff will have access to clean drinking water. Club president Dr Vivek Vadjikar, honorary secretary Tariq Shaikh, Kishor Patil and Dr Aparna Makasare took efforts for the successful completion of project.








# மௌனமானது இசைக்குயில்!

**SR மது**

நான் உயிருடன் இருக்கும் நாள் வரை, லதா இருக்கும் வரை, அவர்தான் எனக்கு முதல் தேர்வாக இருப்பார் – இசையமைப்பாளர் மதன் மோகன்.

ஆஷா போஸ்லே ஒரு முறை, நீங்கள் எனக்கு சாதாரண ட்யூன் களைக் கொடுக்கிறீர்கள். ஆனால், தீதிக்கு (அக்கா) சிறந்த ட்யூன் களைக் கொடுக்கிறீர்கள் என்று புகார் செய்தபோது மதன் மோகன் சொன்ன பதில்தான் இது.

எஸ்.டி.பர்மன் இதே கருத்தை வேறுவிதமாகக் கூறினார். நான் எப்போதும் லதாவை எனது முதல் தேர்வா கவும், ஆஷாவை இரண்டாதாகவும் கருதினேன். முதல் தேர்வு செயல்படத் தொடங்கிய நிலையில் எனக்கு இரண்டாவதுக்கு தேவையே எழவில்லை என்றார்.

எஸ்.டி.பர்மனின் மகன் ஆர்.டி.பர்மன் (பஞ்சம்) ஆஷாவை மணந்து, அவரது சாதனைகளை உயர்த்தியவர். லதாவை பிரமிப்புடன் பார்த்து அவரை பீடத்தில் வைத்திருந்தார். இசை உலகில் ஆஷா போஸ்லே ஒரு கேரி ஸோபர்ஸ் என்றால், லதா மங்கேஷ்கர் டான் பிராட்மனுக்கு இணையானவர் என்று அவர் குறிப்பிட்டார். இதற்கு பதிலளித்த ஆஷா, ஒருவேளை பஞ்சம் என்ன நினைக் கிறார் என்றால், ஆடு களத்தில் பிராட்மன் கட்டுப்படுத்தப் பட்டதைப் போலவே தீதியும் கட்டுப்படுத்தப் பட்டார். அதேசமயம், நான் ஸோபர்ஸைப் போல பல நேரங்களில் அதிக ரிஸ்க் எடுத்துள்ளேன் என்று குறிப்பிட்டிருந்தார்.

லதா மங்கேஷ்கர்! இசைக் கலைஞர் களுக்கு இந்த இரண்டு வார்த்தைகள் முழுமையை உச்சரிக்கின்றன. திரைப்பட வரலாற்று ஆசிரியர்களுக்கு, இந்த பெயர் பாலிவுட் இசையின்

*நான் உயிருடன் இருக்கும் நாள் வரை, லதா இருக்கும் வரை, அவர்தான் எனக்கு முதல் தேர்வாக இருப்பார்.*

*இசையமைப்பாளர் மதன் மோகன்*



*தில்லி ராம் லீலா மைதானில் 1963ம் ஆண்டு முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேரு முன்னிலையில் 'ஏ மேரி வத்தன் கி லோகோன்' பாடலை லதா பாடுகிறார்.*

7 தசாப்தங்களை உள்ளடக்கியது. பெரும்பாலான வெகுஜனங்களுக்கு அது சொர்க்கம். வானொலி, தொலைக்காட்சி, யூடியூப், அமேஸான் அல்லது ஆப்பிள் மியூஸிக் மூலம் அவர்கள் ஒவ்வொரு நாளும் லதாவின் பாடல்களை கேட்டு ரசித்துக் கொண்டே இருக்கிறார்கள்.

இமயமலை, கங்கை, கண்ணுக்குத் தெரியாமல் ஓடும் சரஸ்வதி நதி, தாஜ்மஹலுக்கு இணையாக லதா போற்றப்படுகிறார். கடந்த பிப்ரவரி 6 ஆம் தேதி அவரது குரல் ஓய்ந்துவிட்டது. ஆனால், ஆன்மா, அவர் உலகிற்கு வழங்கிய பல ஆயிரம் பாடல்கள் மூலம் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

இந்தியா டுடே விமர்சித்துள்ளது போல தில்லியில் சாலையோரம் வணிகம் செய்யும் வியாபாரி, நெடுஞ் சாலையில் நீண்ட தொலைவு லாரியை ஓட்டிச் செல்லும் டிரைவர், லதாக் பள்ளத்தாக்கு எல்லையில் பதுங்கு குழியில் காவல் பணியில் ஈடுபட்டுள்ள ஜவான் அல்லது மும்பையில் சொகுசு ஹோட்டலில் டின்னருக்காக வந்திருக்கும் பெருமகன்களாக இருந்தாலும் சரி, அவரது குரலை கேட்காதவர்களே இல்லை எனலாம்.

இசையமைப்பாளர் சஜ்ஜத் ஹூசைன் ஒரு முறை, லதா பாடுகிறார், மற்றவர்கள் புலம்புகிறார்கள் என்று குறிப்பிட்டார். மற்றொரு இசையமைப்பாளர், சரி கம பதநி என்ற ஏழு ஸ்வரங்களுடன் லதா என்ற இரண்டு ஸ்வரங்களையும் சேர்க்க வேண்டும் என்று பரிந்துரைத்தார்.

இதைவிட உச்சம் என்னவெனில், லதாவின் செல்வாக்கு இணையில்லாமல் இருந்தது. சென்னைக்கு ஒரு முறை பயணம் சென்ற லதா, அங்குள்ள சொகுசு ஹோட்டலில் தங்கி, ஹோட்டல் உணவை சாப்பிட விரும்பவில்லை. எனவே லதா தங்குவதற்காக நடிகர் சிவாஜி கணேசன், தமது வீட்டிலேயே குடில் ஒன்றை அமைத்துக் கொடுத்தார்.

பாரத ரத்னா, தாதா சாகேப் பால்கே விருது, நான்கு முறை சிறந்த பாடகிக்கான பிலிம்பேர் விருது, சிறந்த பாடகிக் கான, பிலிம்பேர் வாழ்நாள் சாதனையாளர் சிறப்பு விருது, 3 முறை



*பாடல் பதிவு ஒன்றில் முகமது ரஃபி மற்றும் இசையமைப்பாளர் சங்கருடன் லதா.*



லதா மற்றும்
M S சுப்புலஷ்மி.

தேசிய விருது என பல விருது களால் லதா அலங்கரிக்கப் பட்டார். மத்தியப்பிரதேசம் மற்றும் மகாராஷ்டிர அரசுகள் அவரது பெயரில் விருதுகளை நிறுவியுள்ளன.

வெளிநாடுகளிலும் அவர் இசைநிகழ்ச்சிகளை வெற்றிகரமாக நடத்தியுள்ளார். 1975 மற்றும் 1998ம் ஆண்டுகளுக்கு இடையில் அமெரிக்கா, கனடா, கரீபியன் மற்று பிஜி தீவுகளில் பல முறை அவரது இசை நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன. எப்போது அவரது நிகழ்ச்சிகள் மதிப்புமிக்க இடங்களிலேயே நடைபெற்று வந்தன. லதாவின் இசை நிகழ்ச்சி களுக்கு ஏற்பாடு செய்தவர்கள், மக்கள் கூட்டம் வருமா, டிக்கெட்டுகள் விற்பனையாகுமா என்று சந்தேகம் கொண்டிருந்த நிலையில், அமெரிக்க நட்சத்திரம் பிராங்க் சினாட்ராவின் நிகழ்ச்சிக்கு வரும் ரசிகர்கள் கூட்டத்தைவிட அதிக கூட்டம் வந்ததையும், டிக்கெட்டுகள் விற்றுத் தீர்ந்ததையும் கண்டு ஆச்சரியம் அடைந்தனர்.

### லதாவின் குழந்தைப் பருவம்

லதா, 1929 ஆம் ஆண்டு செப்டம்பர் 28ம் தேதி இந்தூரில் பிறந்தார். ஐந்து குழந்தைகளில் மூத்தவர். உடன் பிறந்தவர்கள் ஆஷா, உஷா, மீனா மற்றும் ஹிருதயநாத். தந்தை பண்டிட் தீனானாத் மங்கேஷ்கர், பாரம்பரிய இசைக்கலைஞர். ஊர் ஊராரகச் சென்று நாடகம் போடும் குழுவை நடத்தி வந்தார். மகாராஷ்டிராவில் சிறு நகரங்களில் புராணக்கதைகளை அடிப்படையாகக் கொண்ட நாடகங்களை அரங்கேற்றிவந்தார். குழந்தைகள் நாடோடி வாழ்க்கை வாழ்ந்ததால் பள்ளிக்கூடம் செல்ல முடியவில்லை. ஆனால், எங்கள் வீட்டில் இரவும் பகலும் இசை ஒலித்துக் கொண்டே இருந்தது என்று நினைவுகூர்ந்தார் லதா. வீட்டில் திரையிசை பாடல்களுக்குத் தடைவிதிக்கப் பட்டது. எனினும், கே.எல். சைகலுக்கு மட்டும் விதிவிலக்கு. ஏனெனில் தீனானாநாத், சைகலின் ரசிகர். லதாவும் கூட. அவர் எப்போதாவது ஏக் பங்களா பானே நயாரா என்ற பாடலை முணுமுணுப்பார்.

குழந்தைப் பருவத்தில் லதா, ஆண்களைப் போலவே நடை, உடை, செயல்பாடுகளைக் கொண்டிருந்தார். சாங்லியில் அவரது குடும்பம் ஒரு பெரிய வீட்டில் வசித்து வந்தது. சிறுவயதில் மரத்தின் மீது ஏறி மாங்காய், கொய்யா பறிப்பது. கையில் ஒரு குச்சியை வைத்துக் கொண்டு மற்றவர்களை மிரட்டுவது, கார் டயர்களினுள் உட்கார்ந்துகொண்டு மற்ற சிறுவர், சிறுமியர்களை தெருவில் உருட்டிச் செல்லக் கூறுவது, சீட்டு விளையாடுவது, கில்லித் தண்டு விளையாடுவது ஆகிய நடவடிக் கைகளில் ஈடுபட்டதாக தனது சுயசரிதையை எழுதிய நஸ்ரின் முன்னி கபீரிடம் லதா குறிப்பிட்டுள்ளார்.

1934–35ல்அர்தேஷிர் இரானியின் ஆலம் அரா என்னும் பேசும் படம் திரையில் வெளியானதை அடுத்து தீனாநாத்தின் நாடகக்குழுவுக்கு பலத்த அடி கிடைத்தது. வழக்கமாக நாடகம் பார்ப்பவர்கள், பேசும் திரைப்படங்களால் ஈர்க்கப்பட்டார்கள். தீனாநாத் போன்று நாடகத்துறையில் ஈடுபட்டிருந்த பலரால் பேசும் திரைப்படங்களால் ஏற்பட்ட பாதிப்பிலிருந்து மீள முடியவில்லை. அவர் தானே திரைப்படம் தயாரித்தார். நாடகக் கம்பெனியை மீட்டெடுக்க நினைத்தார். இதற்காக சாங்லியில் உள்ள வீட்டை விற்க நேரிட்டது. ஆனால், கடனாளியானார். மேலும் மதுவுக்கு அடிமையானார். இறுதியில் 1942ம் ஆண்டு ஏப்ரல் 24ம் தேதி மறைந்தார்.

லதாவுக்கு 13-வயது இருக்கும்போது குடும்பத்தின் சுமையை ஏற்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அவரது தந்தையின் நண்பரான மாஸ்டர் விநாயக் (நடிகை நந்தாவின் தந்தை) மராத்தி திரைப்படம் ஒன்றில் சிறிய பாத்திரத்தில் நடிக்க வாய்ப்பளித்தார். அவரது

# லதாவை மறக்கமுடியுமா!





லதாவின் பாடல்களை ஒருவர் இசையமைப்பாளர்கள், ரசிகர்களின் மனோநிலை, அவரது பாடல்களுக்கு உதட்டளவில் ஒத்திசைத்த கதாநாயகிகள் என்ற வரிசையில் வெவ்வேறு வழிகளில் பட்டியலிடலாம். லதா எதையும் சாதாரணமாக பாடாமல், உணர்ச்சி பொங்க பாடுவதில் வல்லவர் என்று ஜெயா பச்சன் கூறுவதுண்டு. சில முன்னணி பாலிவுட் ஹீரோயின்களுக்காக லதா பாடிய முத்தான பாடல்கள் இதோ:



**மதுபாலா**

- ஆயேகா, ஆயேகா ஆனேவாலா- மஹல் (1949) இசையமைப்பாளர் நௌஷத்
- சீனே மெய்ன் சுலாக்தே ஹை அர்மான்- லதா மற்றும் தலைத் முகமதுரானா (1951). இசையமைப்பாளர் அனில் விஸ்வாஸ்
- தேரே சத்கே பாலம்- அமர் (1954). நௌஷத்
- மேரே சப்னே மெய்ன் ஆனா ரே- ராஜ்ஹட் (1954). சங்கர் - ஜெய்கிஷன்
- பியார் கியா து தர்னா கியா- முகல்-இ-ஆஸம் (1960). நௌஷத்

**நர்கீஸ்**

- மேரி ஆங்கோன் மெய்ன் பாஸ் கயா கோயி ரே- பர்ஸாத் (1949). சங்கர்-ஜெய்கிஷன்
- கர் ஆயா மேரி பர்தேசி- ஆவாரா (1951). சங்கர்- ஜெய்கிஷன்
- யே ஷாம் கி தன்ஹாய்யான்- ஆஹ் (1953). சங்கர்-ஜெய்கிஷன்
- ரஸிக் பால்மா- சோரி சோரி (1955). சங்கர்-ஜெய்கிஷன்
- பியார் ஹுவா இர்கர் ஹுவா- ஸ்ரீ 420 (1955). லதா-மன்னாடே. சங்கர்-ஜெய்கிஷன்
- ஜாகோ மோஹன் பியாரே- ஜக்தே ரஹோ (1957). டலீல் சௌத்ரி







**மீனா குமாரி**

- ராதா நா போலே நா போலே நா போலே ரே- ஆஸாத் (1955) சி.ராமச்சந்திரா
- ஓ ராத் கி முஸாஃபிர்- மிஸ் மேரி (1957) லதா மற்றும் ரஃபி. சி.ராமச்சந்திரா
- அஜீப் தஸ்தன் ஹை யே- தில் அப்னா அவுர் ப்ரீத் பராய் (1960) சுதிர் பட்கே
- ஜோதி கலஷ் சல்கே- பாபி கி சுடியான் (1961) சுதிர் பட்கே
- இன்ஹி லகோன் னே- பகீசா (1972) குலாம் முகமது-நௌஷத்

**நூதன்**

- மன்மோகன படே ஜூடே- சீமா (1955) சங்கர் - ஜெய்கிஷன்.
- சந்த் பிர் நிக்லா- பேயிங் கெஸ்ட் (1957) எஸ்.டி.பர்மன்.
- மெய்ன் து பூல் சாலி பாபுல் கா தேஸ்- சரஸ்வதிக் சந்திரா (1959). கல்யான்ஜி- ஆன்ந்த்ஜி.
- மோரா கோரா அங் லீ லே- பந்தினி (1963). எஸ்.டி.பர்மன்.
- தேரா ஜானா- அனாரி (1969). சங்கர்-ஜெய்கிஷன்.

**வஹீதா ரெஹ்மான்**

- கஹின் தீப் ஜலே கஹின் தில்- பீஸ் ஸால் பாத் (1962). ஹேமந்த் குமார்.
- ஆஜ் பிர் ஜீனே கி தமன்னா ஹை- கைடு (1965). எஸ்.டி.பர்மன்.
- தேரே மேரே சப்னே- கெய்டு (1965) லதா மற்றும் ரஃபி.
- ரங்கீலா ரே- பிரேம் புஜாரி (1970). எஸ்.டி.பர்மன்.

லதா பாடிய இந்த பாடல்களை அனைத்துமே அந்தந்த திரைப்படங்களில் நடித்த நடிகைகளின் நடிப்பை உயர்த்திக் காட்டியது என்று சொன்னால் மிகையாகாது.

இசைக்குயில் லதா மங்கேஷ்கர் மறைந்துவிட்டாலும், அவர், தனது குரலால் ரசிகர்களின் நெஞ்சங்களில் என்றென்றும் வாழ்ந்துகொண்டிருப்பார்.



தூண்டுதலின் பேரில், லதா, உஸ்தாத் அமன் அலிகான் பெண்டிபஸார்வாலேவிடமும், பின்னர் அமனத் கான் தேவாஸ்வாலே ஆகியோரிடம் கிளாஸிக்கல் இசை பயின்றார். லதாவிடம் அசாத்திய நினைவாற்றலும், புதிதாக எதையும் உள்வாங்கும் திறனும் இருந்தது. இதனால், அவரது பயிற்சி பயனுள்ளதாக அமைந்தது.

நான்கு மராத்தி படங்களில் லதா நடித்தார். அதில் ஒரு படத்தில் தனது முதல் ஹிந்தி பாடலைப் பாடினார். அவருக்கு நடிப்பு பிடிக்கவில்லை என்றாலும் வேறு வழியில்லை. குடும்பத்துக்காக சம்பாதித்தார். சேமித்தார். குடும்பத்திலுள்ள மற்றவர்களுக்காக தனது உணவைத் தியாகம் செய்தார்.

இசையமைப்பாளர் குலாம் ஹைதருடனான சந்திப்பு, அவரது வாழ்க்கையில் முக்கிய திருப்பத்தை ஏற்படுத்தியது. அவர் லதாவை தயாரிப்பாளர் சஷிதர் முகர்ஜியிடம் அழைத்துச் சென்றார். அப்போது முகர்ஜி, திலிப்குமார், காமினி கௌஷல் நடிக்கும் ஷாஹீத் திரைப்படத் தயாரிப்பில் மும்முரமாக இருந்தார். ஆனால், லதாவின் குரல் மிகவும் மெல்லியதாக இருப்பதாகக் கூறி பாடகியாக அவரை நிராகரித்தார்.

இதனால் எரிச்சலடைந்த குலாம் ஹைதர், முகர்ஜி கூறியது தவறு என்று நிரூபிக்கத் தீர்மானித்தார். ஹைதரின் சொந்தப் படத்தில் "தில் மேரா தோடா" என்ற பாடலை லதா பாடினார். அந்தப் பாடல் பலரின் கவனத்தை ஈர்த்தது. அதன் பிறகு கெம்சந்த் பிரகாஷ், அனில் விஸ்வாஸ் மற்றும் நௌஷத் ஆகியோர் அவரைப் பயன்படுத்திக் கொண்டனர்.

1949ம் ஆண்டு, லதாவுக்கு 20 வயது ஆன போது திருப்புமுனை ஆண்டாக அமைந்தது. மஹல் திரைப்படத்தில் (கெம்சந்த் பிரகாஷ் இயக்கிய படம்) லதா பாடிய ஆயேகா ஆனேவாலா என்ற பாடல் ஒரு பரபரப்பை ஏற்படுத்தியது. அந்தப் பாடலை பாடியவர் யார் எனக் கேட்டு அகில இந்திய வானொலிக்கு



இசையமைப்பாளர் A R ரகுமானுடன் லதா.

*1. R D பர்மனுடன்; 2. இசையமைப்பாளர் S D பர்மனுடன்; 3. கீதா தத் மற்றும் ராஜ்கபூருடன்; 4. சகோதரிகள் மீனா மற்றும் உஷாவுடன்; 5. நௌஷத், முகமது ரஃபி மற்றும் மஜ்ரு சுல்தான்பூரி ஆகியோருடன்; 6. சிறு வயது லதா.*

கோரிக்கைகள் வந்தவண்ணம் இருந்தன. (அந்த நாளில் பாடல் பதிவில் அவரது பெயர் இடம்பெறவில்லை.) இறுதியில் தயாரிப்பாளர்கள் அவரது பெயரை வெளியிட்டனர்.

நௌஷத்துக்காக 1949ம் ஆண்டு திலிப் குமார், நர்கீஸ், ராஜ்கபூர் நடித்த அந்தாஸ் திரைப்படத்தில் லதா பாடிய உதயே ஜா உன்கே சிதம் பாடலும் சிறப்பாக அமைந்தது. ராஜ்கபூர் நடித்து, சங்கர் ஜெய்கிஷன் இசையமைத்த "பர்ஸாத்" திரைப்படத்துக்காக லதா 8 பாடல்களைப் பாடினார். அத்தனையும் முத்தான பாடல்கள். அந்த படத்திற்குப் பிறகு பாடகி லதாவின் திரையுலக வாழ்க்கையில் எந்த பின்னடைவும் ஏற்படவில்லை என்கிறார் இசையமைப்பாளர் சங்கர் ஜெய்கிஷன்.

1950-களில் மும்பை திரையுலகில் லதாவின் குரல் தொடர்ந்து ஒலித்துக் கொண்டே இருந்தது. தனது பாடல்கள் மூலம் அவர் ரசிகர்களிடம் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தினார். போட்டியாளர்களை பின்னுக்குத் தள்ளி அவர் உச்சத்தை எட்டினார். காலையில் இரண்டு, பிற்பகலில் இரண்டு, மாலையில் இரண்டு, இரவில் இரண்டு என பாடல்களை பதிவு செய்ததாக சுயசரிதை எழுதும் நஸ்ரின் முன்னி கபீரிடம் லதா தெரிவித்துள்ளார். அதிகாலை 3 மணிக்கு வீட்டிற்கு வந்து தான் சாப்பிடுவார். நம்ப முடியாதது போல தோன்றினாலும், பல ஸ்டியோக்களில் உணவகம் இருப்பது தமக்குத் தெரியாது



1



2



3



4



5



6

*தலத் மகமூத், முக்கேஷ், ரஃபி மற்றும் மன்னா டேயுடன் லதா.*



என்றார் லதா. சிறிது நேர தூக்கத் துக்குப் பிறகு மீண்டும் காலை 6 மணிக்கு எழுந்து ரயிலைப் பிடித்து ஒரு ஸ்டியோவிலிருந்து மற்றொன்றுக்கு பயணித் துக் கொண்டே இருந்தேன் என்கிறார் லதா.

1950-களில் லதாவின் இனிமையான குரல் அழியாமல் தொடர்ந்து ஒலித்துக்கொண்டே இருந்தது. இந்த காலங்களில் சிறந்த இசையமைப்பாளர்களான சங்கர் ஜெய்கிஷன், நௌஷத், சி.ராமச்சந்திரா, எஸ்.டி.பர்மன், ஹேமந்த் குமார் போன்றவர்கள் உச்சத்தில் இருந்தனர். ஆவாரா, ஆஹ், பைஜுபாவ்ரா, ஸ்ரீ 420, அனார்கலி உள்ளிட்ட பிற படங்களில் ஒன்றன் பின் ஒன்றாக பாடல்களைப் பாடி தனது முத்திரையைப் பதித்தார்.



*சயரா பானு மற்றும் திலிப்குமார் அவர்களுடன் லதா.*

1960-கள் பாலிவுட் இசைக்கு மிகவும் செழிப்பான காலமாக இருந்தது. ராஜீவ் விஜய்கர் மேற்கோளின்படி உற்சாகமாகவும், விறுவிறுப்பு நிறைந்ததாகவும், உணர்ச்சிப் பெருக்குடன் இருந்தது. முகல்-இ-ஆஸம் என்ற படத்துடன் அந்த ஆண்டைத் தொடங்கினார் லதா. நௌஷத், லதா, மதுபாலா கூட்டணியில் பாடல்களும், காட்சிகளும் சிறப்பாக அமைந்தது. தேவ் ஆனந்தின் “கைடு” திரைப்படம் மற்றொரு வெற்றிப்படமாக இருந்தது. தேவ் ஆனந்த் படத்தை தயாரிக்க, எஸ்.டி.பர்மன் இசையில் லதா இனிமையான குரலில் பாட, வஹிதா ரஹ்மான் நடிப்பில் வெளியான அந்த படம் ரசிகர்களை வெகுவாக கவர்ந்தது. வஹிதாவுக்காக அவர் பாடிய ஆஜ் பிர் ஜீனா கி தமன்னா ஹை, பியா டோஸி நைனா லாயி ரே மற்றும் லதா-கிஷோர் இணைந்து பாடிய

காதா ரஹே மேரா தில் பாடல்கள் ரசிகர்களை மகிழ்வித்தன. ஜங்லி, அஸ்லி நக்லி, கங்கா ஜமுனா, மேரே மெஹ்பூப், அன்பத், மம்தா, மேரா சாயா ஆகிய படங்களின் பாடல்களும் குறிப்பிடத்தக்கவை.

70-களில் வெளிவந்த பாபி, அபிமான், அமர் பிரேம் மற்றும் ஆந்தி ஆகிய படங்களும் அவருக்கு சிறப் பாக அமைந்தன. மேரே நாம் ஜோக்கர் படத்தின் தோல்வியால் நிலைகுலைந்திருந்த ராஜ்கபூருக்கு பாபி படத்தின் பாடல்கள் மூலம் லதா வெற்றியைத் தேடிக் கொடுத்தார். பாபி படத்தில் நடித்த 15 வயதான டிம்பிள் கபாடியாவுக்கு 45 வயதான லதா, தனது இனிமையான குரலால் உயிர் கொடுத்தார். அந்தப் படம் மாபெரும் வெற்றியைப் பெற்றது.

இசையில் ஆர்வம் கொண்ட ஜோடியைப் பற்றிய படம் அபிமான். அதில் லதாவின் பாடல் அற்புதமாக அமைந்திருந்தது. இதேபோல அமர் பிரேம் படமும் வெற்றிப்படமாக அமைந்தது. ஆர்.டி.பர்மன் இசையில், ரெய்னா பீட்டி ஜாயே (அமர் பிரேம்), பீட்டி நா பீட்டாயீ ரெய்னா (பரிச்சய்), தேரே பின ஜிந்தகி (ஆந்தி) மற்றும் பாஹோன் மெய்ன் சலே ஆவ் (அனாமிகா) ஆகியவையும் குறிப்பிடத்தக்க வெற்றியை பெற்றன.

### இசையமைப்பாளர்களுடன் நல்லுறவு

லட்சுமிகாந்த்-பியாரேலாலுக்காக 696, சங்கர்-ஜெய்கிஷனுக்காக 453, ஆர்.டி.பர்மனுக்காக 331, கல்யாண்ஜி-ஆன்ந்த்ஜிக்காக 302, சி.ராமச்சந்திராவுக்காக 288, மதன் மோகனுக்காக 210 பாடல்களை லதா பாடியுள்ளார்.

ஹிந்தி திரை இசை உலகில் ஒரு புதிய இலக்கணத்தை கொண்டு வந்த சங்கர்-ஜெய் கிஷன், எதிலும் சமரசம் செய்து கொள்ளாமல் செயல்பட்ட நௌஷத் இருவரையும் அவர் பாராட்டினார். லதா, புகழின் உச்சிக்குச் செல்ல அவர்கள் முக்கியப் பங்குவகித்தனர். ஆனால், மதன் மோகனிடம், லதா நெருக்கமான நல்லுறவை வைத்திருந்தார். ஏனெனில் ஒவ்வொரு ஆண்டும் மதன், அவருக்கு ராக்கி கட்டிவிடுவார்.

மதன் மோகன் இசையில் லதா பாடிய பாடல்கள் மிகவும் இனிமையானவை. இது தனக்கு பொறாமையை ஏற்படுத்தியதாக கயாம் ஒருமுறை கூறியுள்ளார். மேரே வீணா தும் பின் ரோயீ (தேக் கபீரா ரோயா), ஹம் பையார் மெய்ன் ஜல்னே வாலோன் கோ (ஜெயிலர்), யூன் ஹஸ்ரதோன் கீ டாக் (அதாலத்), ஆப் கி நஸ்ரன் நே சம்ஜா (அன்பத்), நைனா பார்ஸி ( வூ கௌன் தி) மற்றும் நைனான் மெய்ன் பத்ரா சாயே (மேரா சாயா) ஆகிய பாடல்கள் குறிப்பிடத்தக்கவை.

மதன் மோகனின் மகன் சஞ்சீவ் கோஹ்லி, யாஷ் சோப்ரா மற்றும் லதா மங்கேஷ்கருடன் இணைந்து வீர் ஜாரா (2004) என்னும் இந்தியா-பாகிஸ்தான் காதல் கதையை படமாக்கினார். அந்த படத்துக்கான இசை, மதன் மோகன் பயன்படுத்தாத மெட்டுகளை அடிப்படையாகக் கொண்டிருந்தது. படத்தின் பாடல் பதிவுக்காக கையில் மைக்கை எடுக்கும் போதெல்லாம் லதா கண்ணீர் விட்டு அழுதார். வீர் ஜரா படத்தின் பாடல்கள் நிறைந்த ஆல்பம், அந்த ஆண்டு அதிகம் விற்பனையான ஆல்பமாகும்.

மற்ற இசையமைப்பாளர் களைவிட லெட்சுமிகாந்த்-பியாரேலாலுக்காக லதா அதிகம் பாடல்களைப் பாடினார். அவர்கள் சுமார் 500 படத்துக்கு மேல் இசையமைத்துள்ளனர். லெட்சுமிகாந்த்-பியாரேலால் இசையில் லதா பாடிய முதல் படம் பரஸ்மனி. பாடல் ஹன்ஸ்தா ஹுவா நூரனி சேரா. இந்தப் படத்தில் 36 வயலின்கள் ஒரே நேரத்தில் பயன்படுத்தப்பட்டன. இந்தப் பாடல் வெற்றிப்பாடலாக அமைந்தது. எங்களின் முதல் தேர்வு எப்போதுமே லதாதான் என்பார் பியாரேலால்.

### சர்ச்சைகள்

லதா அனைவரையும் ஈர்க்கும் ஒரு சிறந்த பாடகராக இருந்தாலும், வாணி ஜெயராம், ரூனா லைலா, சுலக்ஷ்ணா பண்ட்டி, ப்ரீத்தி சாகர், அனுராதா பட்வால், ஹேமலதா போன்ற இளம் பாடகர் களை, ஏன் தனது சகோதரி ஆஷாவைகூட இசையமைப்பாளர்களை நெருங்கவிடாமல் சூழ்ச்சி செய்ததாக சொல்லப்படுவதுண்டு.


*தன் சகோதரி ஆஷா போஸ்லேயுடன்.*



*கிஷோர்குமாருடன்.*

இளம் பாடகிகளுக்கு வாய்ப்பளிக்கும் இசையமைப்பாளர்களை அவர் கறுப்புப் பட்டியலில் வைத்திருந்ததாகவும் கூறப்படுவதுண்டு. இந்த குற்றச் சாட்டுகளுக்கு லதா கூறும் பதில், நல்ல திறமையான பாடகர்கள் ஒருபோதும் வீழ்ச்சி அடையமாட்டார்கள். களத்தில் நிலைத்து நிற்க திறமை இருந்தாலே போதுமானது என்பதுதான்.

தானும் ஆஷாவும் சிறந்த சகோதரிகள் என்று லதா அடிக்கடி கூறுவார். தன்னைவிட வயதில் முதிர்ந்த ஒருவருடன் ஓடிப்போய் ஆஷா திருமணம் செய்தபோது அவர்களுக்குள் உரசல் ஏற்பட்டது. அவர் ஆஷாவை வலுக்கட்டாயமாக குடும்பத்திலிருந்து ஒது க்கிவைத்தார். ஆனால், தாம் ஏமாற்றப் பட்டதாக அறிந்ததும் திருமண உறவை உதறி விட்டு வீட்டுக்கு வந்தவரை லதா ஏற்றுக்கொண்டார்.

பாடகர்களுக்கான ராயல்டி தொகை குறித்த கேள்வி எழுந்த போது லதாவுக்கும் முகமது ரஃபிக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது.



*நடிகர் திலகம் சிவாஜி கணேசனுடன். லதா அவரை ‘அண்ணா’ என்று அழைப்பார்*



*லதா தன் உடன் பிறந்தோர் ஹிருதயநாத், மீனா, ஆஷா மற்றும் உஷா ஆகியோருடன்.*

லதா, ராயல்டியை தொடர்ந்து வலியுறுத்தினார். அதன் மூலம் பல பாடகர்கள் பயனடைந்தனர். ஆனால், ரஃபி இதற்கு உடன் படவில்லை. இதன் காரண மாக இருவருக்கும் காரசாரமான விவாதம் நடந்தது. இதன் எதிரொலியாக இருவரும் 6 ஆண்டுகள் சேர்ந்து பாடுவதை தவிர்த்தனர்.

ராயல்டி விவகாரம் காரணமாக லதாவும், ராஜ்கபூரும் பிரிந்தனர். ஆனால், பாபி படத்தை தயாரித்த போது ராஜ்கபூர், லதாவின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டார்.

இதுவரை தனது பாடல்களுக்கு லதாவை பயன்படுத்தாமல் இருந்த ஒரே இசையமைப்பாளர் ஓ.பி.நய்யார்தான். லதாவின் குரல் மிகவும் மெல்லியதாக இருப்பதால் எனது பாடல்களுக்கு பொருத்தமானவராக இல்லை என்பார். இசையமைப்பாளர்கள் சி.ராமச்சந்திரா மற்றும் எஸ்.டி.பர்மன் ஆகியோரிடமும் லதாவுக்கு கருத்து வேறுபாடுகள் இருந்தது.

### லதாவுக்கு பிடித்தமானவை

ஒரு ஆச்சர்யமான விஷயம் என்னவெனில் லதாவுக்கு கிரிக்கெட் ஆட்டம் பிடிக்கும். தீவிர ரசிகை. 1983ம் ஆண்டு இந்தியா உலகக் கோப்பையை வென்றபோது அவரது அறக்கட்டளை சார்பில் நடந்த இசை நிகழ்ச்சி மூலம் கிடைத்த தொகையில் இந்திய அணி வீரர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ.1 லட்சம் பரிசாக வழங்கப் பட்டது.

அவருக்கு வித விதமான கார்கள் மீது அலாதி பிரியம். புகைப்படம் எடுப்பது அவருக்கு பிடிக்கும். இதற்காக தொழில்முறையில் சிறந்த கேமராக்களை அவர் சேகரித்து வைத்திருந்தார். இதே போல வைரங்கள் மீதும் அவருக்கு ஈர்ப்பு இருந்தது. வெள்ளைப் புடவைகளை விரும்பி அணிவார். நல்ல உணவை விரும்பிச் சாப்பிடுவார், ஐஸ்கிரீம், ஊறுகாயும் பிடிக்கும். (பாடகர்கள் பொதுவாக இவை இரண்டையும் தவிர்த்து விடுவார்கள்). வாழ்நாள் வரை திருமணம் செய்துகொள்ளாமல் மகிழ்ச்சியாக இருந்தார். குழந்தைகள் மீது அன்பு செலுத்துவார். குறிப்பாக தனது உடன் பிறப்புகளின் குழந்தைகள் என்றால் அவருக்கு கொள்ளைப் பிரியம்.

### லதாவின் மாயாஜாலம்

ஒரு பாடலைப் பாடுவதற்கு கிளாசிக்கல் இசைக்கலைஞர்கள் 3 மணி நேரம் எடுத்துக் கொண்டால், லதா அதை மூன்று நிமிடங்களில் பாடி சாதனை படைத்து விடுவார் என்று படே குலாம் அலிகான் ஒரு முறை குறிப்பிட்டார்.

லதாவின், பரவலான கண்ணோட்டம் மற்றும் குறுகிய கண்ணோட்டம் இரண்டையும் ஒருவர் பார்க்கலாம் என்கிறார் அவரது சுயசரிதையாளர் கபீர். லதா நமது அனைவரின் நெஞ்சத்திலும் இருக்கிறார் என்பார் திலீப்குமார். அவரது குரல் வேண்டுமானால் ஓய்ந்திருக்கலாம். அவரது பாடல்கள் ஆன்மாவில் இன்றும் ஒலித்துக் கொண்டே இருக்கிறது.

கட்டுரையாளர் RC மெட்ராஸ் சவுத் உறுப்பினர் மற்றும் மூத்த பத்திரிகையாளர்.

வடிவமைப்பு: S கிருஷ்ணப்பிரதீஷ்



# கர்தார்பூர் சாஹிப் குருத்வாராவிற்கு சென்ற ரோட்டரி உறுப்பினர்கள்

ரோட்டரி செய்திக் குழு

PDG பிரேம் அகர்வால் தலைமையிலான RC மான்சா ராயலில் இருந்து ஒரு மதக் குழு, சங்கத்தலைவர் கமன் கோயல் உடன் சேர்ந்து பாகிஸ்தானில் உள்ள கர்தார்பூர் சாஹிப் குருத்வாராவுக்குச் சென்றனர். இது சீக்கியர்களுக்கு மிகவும் புனிதமான இடங்களில் ஒன்றாகும். குரு நானக் தேவ் தனது கடைசி 18 ஆண்டுகளை இங்கு கழித்து, சீக்கிய மதத்தின் மூன்று தூண்களான கிராத் கர்னி (நேர்மையான வாழ்க்கை), வந்த் சக்னா (மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வது) மற்றும் நாம் ஜப்னா (கடவுள் மீது கவனம்) பற்றிய போதனைகளை வழங்கியதாக நம்பப்படுகிறது.

கர்தார்பூர் நடைவழி நவம்பர் 2021ல் மீண்டும் திறக்கப்பட்டது. ரோட்டரி பிரதிநிதிகளை, RID 3090 DG பர்வீன் ஜிண்டால் மற்றும் நளினி ஜிண்டால் மற்றும் RC மோகா ஸ்டார்ஸின் சங்க உறுப்பினர்கள் சுவையான காலை உணவை ஏற்பாடு செய்து மோகாவிலிருந்து விடை கொடுத்து அனுப்பிய பிறகு உள்ளூர் குருத்வாரா நிர்வாகக் குழு அவர்களை வழியனுப்பியது.

ரோட்டரி உறுப்பினர்கள், மான்சா ராயல் இன்னர் வீல் கிளப் உறுப்பினர்கள் மற்றும் இந்திய மருத்துவ சங்கத்தின் உறுப்பினர்கள் அடங்கிய 20 பேர் கொண்ட குழு முதலில் அட்டாரி-வாகா சர்வதேச எல்லையில் உள்ள கூட்டுச்



**மேலே:** *கர்தார்பூர் ஸாஹிப் குருத்வாராவில் இந்திய பாகிஸ்தான் ரோட்டரியினருடன்* RID 3272 DG *சைஃபுல்லா ஏஜாஸ்,* RID 3090 PDG *ப்ரேம் அகர்வால் மற்றும்* RID 3272 DGE *சொபூர் ரொஹைலா.*







PDG அகர்வால் *மற்றும்* DG *ஏஜாஸ்.*

சோதனைச் சாவடி மற்றும் ஸ்ரீ ஹர்மந்தர் சாஹிப் அமிர்தசரஸ் ஆகிய இடங்களுக்கு சென்றது.

டிசம்பர் 1 அன்று, இந்தியா மற்றும் பாகிஸ்தான் சோதனைச் சாவடிகளில் உள்ள அனைத்து சுங்க, குடிவரவு மற்றும் பாதுகாப்பு நடைமுறைகளை முடித்துக் கொண்டு புறப்பட்ட குழு, பாகிஸ்தானில் உள்ள ஸ்ரீ கர்தார்பூர் சாஹிப் குருத்வாராவை சென் றடைந்து பிரார்த்தனை செய்தது.

லங்காரில் (உணவு கூடம்) உணவு அருந்திய பிறகு, குருநானக் தேவ் தனது வயல்களுக்குப் பாச னம் செய்வதற்காகப் பயன்படுத்திய கிணற்றைப் பார்வையிட்டனர்.

திட்டமிட்டபடி, லாகூர், இஸ்லாமாபாத், பெஷாவர், நரோவல் மற்றும் ராவல்பிண்டி ஆகிய 32 ரோட்டரி கிளப்களில் இருந்து பெண்கள் உட்பட 82 பேர் கொண்ட குழு, மாவட்ட ஆளுநர் சைஃபுல்லா இஜாஸ் தலைமையில், கர்தார்பூர் சாஹிப் குருத்வாராவிற்கு வருகை தந்து RID 3090 இல் இருந்து வந்திருந்த இந்திய பிரதிநிதிகளை வரவேற்றனர்.

DG யின் துணைவியார் சித்தரா சைஃப் தவிர, DGE சோபூர் ரோஹைலா, PDG ஃபைசா கொமர் மற்றும் பாகிஸ்தானைச் சேர்ந்த மூத்த ரோட்டரி உறுப்பினர்கள்



இந்திய பிரதிநிதிகளை பரிசுகள் வழங்கி வரவேற்றனர். “ரோட்டரியின் பொது நற்பெயரை அதிகரிக்கவும், போலியோ ஒழிப்பில் எங்களின் முயற்சிகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், இரு நாட்டு மக்களுக்கும் ரோட்டரி அமைப்பினருக்கும் இடையே அமைதி மற்றும் சகோதரத்துவம் பற்றி உணர்த்தவும் இந்த கூட்டம் ஒரு சிறந்த எடுத்துகாட்டாக அமைந்தது’’ என்று PDG பிரேம் அகர்வால் கூறினார். எங்கள் DG பர்வீன் ஜிண்டால் சார்பாக, நான் அவர்களை இந்தியாவுக்கு வருமாறு அழைத்தேன், அவர்கள் அழைப்பை ஏற்று, ரோட்டரி நிகழ்ச்சியின் போது வருகை தருவதாக உறுதியளித்தனர்.

போலியோவை ஒழிப்பிற்கு பாகிஸ்தான் மிக அருகில் உள்ளது என்றும் DG எஜாஸ் கூறினார். மேலும் இந்தியா மற்றும் பாகிஸ்தானின் போலியோ தொப்பிகள் பரிமாற்றம் செய்யப்பட்டது.■

# ரோட்டரி சங்கங்களுக்குப் பால் ஹாரிஸ் சிலை பரிசு

ரோட்டரி செய்திக் குழு




PDG பாக் சிங் பன்னு, RID 3090, இந்தியா முழுவதுமுள்ள ரோட்டரி சங்கங்களுக்கு அவர்களுடைய சொந்தக் கட்டடங்கள், பள்ளிகள் அல்லது மருத்துவமனைகளில் காட்சிப்படுத்துவதற்காக ரோட்டரி நிறுவனர் பால் ஹாரிஸின் சிலைகளைப் பரிசளிக்கும் பணியில் உள்ளார். ஜனவரிவரையில் அவர் பஞ்சாப், ஹரியானா, ஜம்மு மற்றும் காஷ்மீர், மேற்கு வங்காளம், இமாச்சலப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், கர்நாடகம், ராஜஸ்தான், ஆந்திரப் பிரதேசம், சண்டிகர், ஒடிஷா, மகாராஷ்டிரம், கோவா, அஸ்ஸாம், நாகாலாந்தில் உள்ள பல மாவட்டங்களுக்கு ஏற்கெனவே 151 சிலைகளைப் பரிசளித்துள்ளார்.

நான் பரிசளிக்கும் பால் ஹாரிஸ் சிலைகள் 3 அடிக்கு 2 அடி அளவு கொண்டவை, கருப்பு உலோகத்தால் ஆனவை. இந்தத் திட்டத்துக்கு முழு நிதியையும் நான் வழங்குகிறேன், இந்தியாவிலிருந்து RI தலைவர்களை (மறைந்த N C லஹாரி மற்றும் ராஜேந்திர சாபூ) வழங்கியுள்ள மைல்கல் சங்கங்களான RC கல்கத்தா, RC சண்டிகரில் இந்தச் சிலைகளை நிறுவியது எனக்கு மிக மகிழ்ச்சி என்றார் இவர்.

சமீபத்தில், பன்னு RID 3170 (கோவா, கர்நாடகம், மகாராஷ்டிரத்தை உள்ளடக்கியது) 22 பால் ஹாரிஸ் சிலைகளை நிறுவினார்; இந்தத் திட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் RC ஹூப்ளியைச் (கர்நாடகம்) சேர்ந்த நரீந்தர் பர்வால். இவ்வாறு மொத்தம் 800 பால் ஹாரிஸ் சிலைகளை நிறுவ இயலும் என்று இவர் நம்புகிறார்.■

# துலெ-யில் தொடங்கப்பட்ட ரோட்டரி சேவைத் திட்டங்கள்

ரோட்டரி செய்திக் குழு



*சிவில் மருத்துவமனையில் சுவிதா திட்டத்தை தலைவர் RI சேகர் மேத்தா, RI இயக்குனர் மகேஷ் கோட்பாகி மற்றும் DG சந்தோஷ் ப்ரதான் (இடது) முன்னிலையில் துவக்கி வைக்கிறார்.*

வடமேற்கு மகாராஷ்டிரத்தில் குஜராத் எல்லையில் உள்ள துலெ-க்கு இரண்டு நாள் பயணமாக வந்த RI தலைவர் சேகர் மேத்தா, RID 3060 ரோட்டரி சங்கங்கள் நடத்தும் பல சேவைத் திட்டங்களைத் தொடங்கிவைத்தார்.

துலெ மையச் சிறையின் கைதிகளுக்கான பல் மருத்துவ மருந்தகம் ஒன்றை RI இயக்குநர் மகேஷ் கோட்பாகி, DG சந்தோஷ் பிரதான், அவை உறுப்பினர் குணால் படீல் முன்னிலையில் மேத்தா தொடங்கிவைத்தார். இந்தத் திட்டத்தை ஜவகர் மருத்துவ அறக் கட்டளையுடன் இணைந்து RC துலெ ஃபெமினா நடத்தியது.

துலெ குடிமையியல் மருத்துவமனையில் சுவிதா என்ற மிகப் பெரிய திட்டம் (ரூ.35 லட்சம்) தொடங்கப்பட்டது, மருத்துவமனையில் குடிநீர் நிலையம், ஆழ் துளைக் கிணறு அமைக்கப்பட்டன, கழிப்பறைத் தொகுதிகள் கட்டப்பட்டன, குப்பைத் தொட்டிகள் நிறுவப்பட்டன, மருத்துவ மனைப் பூங்கா புதுப்பிக்கப் பட்டது, வளாகத்தில் இருக்கைகள், தூய்மை அறிவிப்புப் பலகைகள் வழங்கப்பட்டன. DG பிரதான், RID கோட்பாகி, மாவட்ட நீதிபதி ஜலாஜ் சர்மா, குடிமையியல் அறுவைச் சிகிச்சை வல்லுனர் டாக்டர் பதங்கெ முன்னிலையில் மேத்தா இந்தத் திட்டத்தைத் தொடங்கிவைத்தார். RC சிக்லி மற்றும் பிற 17 சங்கங்களின் GG திட்டமாகிய முலை ஊடு கதிர்ப் படப் பரிசோதனை (மாமோகிராஃபி) வேன் ஒன்று துலெ தொண்டுச் சமூகத்தில் தொடங்கிவைக்கப்பட்டது.

RC துலெ கிராஸ் ரோடின் சஞ்சீவனி திட்டம் பன்னாட்டு நல்கையின் வழியாக நோயியல் ஆய்வகம், ஃபிசியோதெரபி மையம், மருத்துவ உதவி வண்டியை அமைத்துள்ளது. RI தலைவர் மேத்தா 25 தையல் இயந்திரங்களை வழங்கினார், பெண்களுக்கு ஆற்றல் அளிக்கும் ஒரு மையத்தையும் ஒரு மகிழ்ச்சிப் பள்ளியையும் மெய்நிகர் வழியில் தொடங்கிவைத்தார்.

மேத்தா, கோட்பாகியைத் துலெ நகரத் தலைவர் பிரதீப் கர்பெ பெருமைப்படுத்தினார். மேத்தா, கோட்பாகிக்கு வழங்கப்பட்ட வரவேற்பு நிகழ்ச்சியில் $100,000 மதிப்புள்ள மூன்று நன்கொடை நிறுவல் நிதிகளுக்கு ரோட்டரியன்கள் உறுதி அளித்தார்கள். ரோட்டரி இந்தியா எழுத்தறிவு இயக்கத்தின் (RILM) கீழ், இந்த ரோட்டரி ஆண்டில் 1,000 ஆஷா கிரண் மாணவர்களை ஆதரிப்பதற்கும் இந்த மாவட்டம் உறுதி அளித்தது.

மறைந்த Rtn அதுல் அஜ்மெரா நினைவு ரோட்டரி குறுக்குச் சாலை தொழில் சார்ந்த மையத்துக்கு அடிக்கல் நாட்டும் விழாவுக்கும் மேத்தா தலைமை தாங்கினார். RC துலெ கிராஸ் ரோட் முன்னாள் தலைவர் DRFC PDG ஆஷிஷ் அஜ்மெரா முயற்சிகளால் RI தலைவருடைய வருகை சாத்தியமானது, இதில் மற்ற சங்க உறுப்பினர்கள் அவருக்கு ஆதரவளித்தார்கள். ■

# கொடுப்பதின் மகிழ்ச்சி

V முத்துகுமரன் மற்றும் கிரண் ஜெஹரா




*RI தலைவர் சேகர் மேத்தா மற்றும் TRF அறங்காவலர் அஜீஸ் மேமன் AKS உறுப்பினர்கள் S V வீரமணி மற்றும் அவர் மனைவி ராதா அவர்களை பாராட்டுகின்றனர்.*

தனது நிறுவனத்தை நிர்வகிப்பது மற்றும் மருந்தகத் துறையில் வழிகாட்டியாக பணியாற்றுவது ஆகியவை அவரது நேரத்தை அதிகம் எடுத்துக் கொண்டாலும், ரோட்டரியன் S V வீரமணி தான் சமூகத்தால் பெற்றதை திருப்பி சமுகத்திற்கு தருவதை முதன்மையான செயலாக கொண்டுள்ளார். ரோட்டரி அறக் கட்டளைக்கு நன்கொடை கொடுக்க என்னை ஊக்கப்படுத்தியவர் IPDG S முத்துபழனியப்பன் (2020–21). ஆனால் நான் PDG ராஜா சீனிவாசன் (2012–13) அவர்களின் காலத்தில் DRFC-யாக இருந்தபோது, இரண்டு AKS உறுப்பினர்களை சேர்க்கவும், மேலும் இரண்டு ரோட்டரி உறுப்பினர்களை AKS-ல் சேர வாக்குறுதி பெறவும் எனது குழு மிகவும் கடினமாக உழைத்தது என்று அவர் நினைவு கூர்ந்தார். அப்போது, RID 3231ன் PDG சீனிவாசன், PDG ஜவரிலால் ஜெயின் மற்றும் RC மறைமலைநகரைச் சேர்ந்த ரோட்டரியன் கணேசன் ஆகியோர் AKS உறுப்பினர்கள் ஆனார்கள். அந்த நேரத்தில், நான் TRFக்கு 120,000 டாலர் கொடுத்தேன், அன்றிலிருந்து ஒவ்வொரு வருடமும் 10,000 முதல் 20,000 டாலர் அதற்காக கொடுத்துக் கொண்டே இருந்தேன். கடந்த ஆண்டு (20–21), TRFக்கு நான் கொடுத்த மொத்த தொகை 250,000 டாலரைத் தாண்ட நான் AKS அளவை அடைந்தேன். தற்போது அவரது மொத்த பங்களிப்பு 290,000 டாலராக உள்ளது.

அவரது 25 ஆண்டுகால ரோட்டரி பயணத்தை திரும்பிப் பார்க்கும் போது, RC அடையாறு, RID 3232ன் உறுப்பினரான வீரமணி கூறுவது, ரோட்டரி உடனான எனது தொடர்பு வாழ்நாள் முழுவதும் நீடிக்கும் என்றார். மருந்து சூத்திரங்களின் ஏற்றுமதியாளர்கள் மற்றும் மருந்து தயாரிப்பாளருமான ஃபோர்ட்ஸ் இந்தியா ஆய்வகத்தின் நிறுவனர் வீரமணி, JMDயாக இருக்கும் அவரது மனைவி ராதாவை, எனக்கு மிகவும் உறுதுணையாகவும், ஊக்கமாகவும், நான் வாழ்க்கையில் எடுக்கும் அனைத்து முடிவுகளுக்கும் பின்னால் இருப்பவர் அவரே என்று கூறுகிறார்.

தனக்கு ரோட்டரி மேல் உள்ள ஈர்ப்பை பற்றி கூறுகையில், “உலகிற்கு நன்மை செய்யும் ஒரு உன்னதமான நோக்கத்திற்காக சக ரோட்டரியன்களுடன் ஒன்றிணைந்து சமூகத்தை ஆதரிக்கவேண்டும் என்ற ரோட்டரியின் ஒரு பெரிய தத்துவமே அதற்கு காரணம், அந்த தம்பதியருக்கு Dr காயத்ரி மற்றும் Dr நித்யா என இரண்டு மகள்கள் உள்ளனர்.

வீரமணி, இந்திய மருந்து உற்பத்தியாளர்கள் சங்கத்தின் முன்னாள் தலைவராக இருந்தார். அவர் அடுத்த ஆண்டு இந்திய மருந்து ஏற்றுமதி மேம்பாட்டு கவுன்சிலின் (பார்மெக்சில்) தலைவராக பொறுப்பேற்க உள்ளார். “பார்மெக்சில் துணைத் தலைவராக இருக்கும் எனது பணி மிகவும் பரபரப்பாக இருந்தாலும், ரோட்டேரி உறுப்பினராக இருப்பது எனக்கு ஒரு சிறந்த அனுபவம் ஏனெனில் TRF, மாவட்ட ஆளுநர்கள் மற்றும் சங்கத்தலைவர்கள் சுகாதாரம், கல்வி, சுற்றுச்சூழல், பெண்கள் மற்றும் குழந்தைகள் நலன் ஆகியவற்றில் சில பெரிய திட்டங்களைச் செயல் படுத்துவதை காண்பது என்று அவர் புன்னகைக்கிறார்.

### கொடுப்பதின் வேட்கை

ஒரு ரோட்டேரியன் ஏன் TRFக்கு பங்களிக்க வேண்டும்? RC கோயம்புத்தூர், RID 3201ஐ சேர்ந்த ரோட்டேரியன் நடனசபாபதி சுந்தரவடிவேலு(சுந்தர்), சொல் வதைக் கேட்கும் போது, உலகை சிறந்த இடமாக மாற்றுவதில் அறக்கட்டளை மானியங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன என்பதை நீங்கள் உறுதியாக நம்புவீர்கள். இதுவரை அவர் TRF-க்கு 260,000 டாலர் (ரூ.2 கோடிக்கு மேல்) நன்கொடை அளித்துள்ளார்.’’ மூன்று ஆண்டுகளுக்கு முன்பு நான் AKS உறுப்பினராக வேண்டும் என முடிவு செய்தேன், எனது விருப்பம் கடந்த ஆண்டு (2020–21) நிறைவேறியது. என 22 ஆண்டுகளுக்கு முன்பு ரோட்டரியில் சேர்ந்த வழக்கறிஞர் சுந்தர் கூறுகிறார்.

தான் கடந்து வந்த பாதையை நினைவுகூறும் அவர், GSE குழு உறுப்பினராக இருந்தது (1986–87)

வாழ்க்கையின் மீதான எனது முழு கண்ணோட்டத்தையும் மாற்றியது.'' 1976 முதல் ரோட்ராக்டர் மற்றும் அதன் பிறகு DRR ஆகவும் அவர் தொண்டு புரிந்திருக்கிறார். வழக் கறிஞரான அவரது மனைவி S V முருகாம்பாள் அவர்களும் TRF-க்கு நன்கொடை அளித்துள் ளார்.'' எங்கள் குடும்பத்தில் இருக்கும் அனைவரும் TRFக்கு நிறைய நன்கொடை அளித்துள்ளோம்.''

வழக்கறிஞரான அவரது மகன் பிரவின் ரத்தினம், மற்றும் மருந்தக வணிகம் செய்து வரும் அவரது மகள் ப்ரீத்தி ஆகியோரும் தங்களால் இயன்ற நன்கொடையை அளித்துள்ளனர். 2024–25ல் பொறு பேற்க உள்ள DGND சுந்தர் தனது பணியை செய்ய எதிர்பார்ப்புடன் காத்திருக்கிறார்.



DGND *நடனசபாபதி சுந்தரவடிவேலு* Mahabs *மாநாட்டில் நன்றி உரையாற்றினார். உடன் அவர் மனைவி முருகாம்பாள்,* TRF *அறங்காவலர் குலாம் வஹன்வதி,* RI *தலைவர் மேத்தா மற்றும் அறங்காவலர் மேமன் ஆகியோரும் உள்ளனர்.*

**மாயை புரியும் ரோட்டரியின் நல்லெண்ணம்**

M அம்பலவாணன் அவர்களுக்கு நன்கொடை அளிப்பது ஒரு போதை. TRFன் வெளிப்படைத்தன்மை, விவேகம் மற்றும் உயர்பணி என்னை AKS உறுப்பினராகத் தூண்டியது. நன்கொடைத் தொகையில் 20–25 சதவீதத்தை நிர்வாகச் செலவுகளுக்காகப் பயன்படுத்தும் மற்ற நிறுவனங்களைப் போல் அல்லாமல், நீங்கள் ரோட்டரிக்கு 105 டாலர் நன்கொடையாக வழங்கும்போது, திட்டத்திற்கு 100 டாலர் எடுக்கப்பட்டு, 5 டாலர் மட்டுமே செயலாக்கக் கட்டணமாகப் பயன்படுத்தப்படும் என்பது நாம் அறிந்ததே. DRFC-யாக இருந்ததால் எனது நன்கொடையை TRF எப்படி பயன்படுத்துகிறது என்பது எனக்குத் தெரியும். RC மெட்ராஸ் மிட் டவுன், RID 3232ன் உறுப்பினரான அவர், மதத்தை விட ரோட்டரி சிறந்தது. அதன் நான்கு வழி சோதனை நம் வாழ்க்கையில் கொண்டு வரும் ஒழுக்கம் மிகவும் சிறந்தது.

ஒரு பிராண்டாக ரோட்டரியின் நல்லெண்ணம் ஒரு அற்புத மாயஜாலம். அதனால் கிட்டத்தட்ட அனைத்தையும் செய்ய முடியும்! என்று அவர் கூறுகிறார். ரோட்டரியில் அவரது மறக்கமுடியாத நினைவு, 2013-ல் சங்கத்தலைவராக இருந்தபோது,'' காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரையிலான சைக்கிள் பேரணியை ஏற்பாடு செய்து செயல்படுத்தியது, பங்கேற்பாளர் களுடன் அம்பலவாணன் தானும் 700 கி.மீ சவாரி செய்தார். 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் டூர் டி ரோட்டரி என்ற சைக்கிள் ஓட்டுதல் நிகழ்வை நடத்துவது எங்களுக்கு ஒரு சாகசமாக இருந்தது. இதில் பங்கேற்ற தமிழ்நாட்டின் DGP சைலேந்திர பாபு (அப்போதைய ADGP) அதன் மேல் மிகுந்த ஈடுபாடு கொண்டார். அதன் விளைவாக தற்போதைய முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் பேசி சென்னையில் சைக்கிள்களுக்கு தனி பாதை அமைக்க நடவடிக்கை எடுக்க கேட்டு கொண்டார் என்று பெருமிதம் அடைகிறார்.

அவர் இதுவரை 175,000 டாலர் நன்கொடை அளித்துள்ளார். இந்த ஆண்டு TRFக்கு மேலும் 25,000 டாலர் மற்றும் அடுத்த ஆண்டு 50,000 டாலர் வழங்க உறுதியளித்துள்ளார். கூடுதலாக, அவர் TRFன் சுற்றுச்சூழல் நிதிக்கு 100 டாலர் நன்கொடை அளித்துள்ளார். 2015 முதல் அவர் பால் ஹாரிஸ் சொசைட்டியின் (PHS) உறுப்பினராக உள்ளார்.


DRFC M *அம்பலவானன் மற்றும் அவர் மனைவி கீதாராணி.*

D 3232 இலிருந்து PHSல் சேர்ந்த முதல் ரோட்டேரியன் நான் தான். அறக்கட்டளை திட்டங்கள் மற்றும் பல்வேறு நிதிகள் பற்றிய அறிவு பற்றாக்குறை நம் மத்தியில் உள்ளது. இந்த விஷயத்தில் ரோட்டேரியன்களுக்கு பயிற்சி அளிக்கவும் வழிகாட்டவும் நான் விரும்புகிறேன், என்கிறார் அவர்.

TRFக்கு மக்களை ஊக்குவிக்கும் அவரது வழி பாரம்பரியமானது அல்ல. நான் மக்களிடம் ஒரு டாலர் கூட கேட்பதில்லை. அறக்கட்டளையால் சாத்தியமான சில சிறந்த திட்டங்களைப் பற்றி நான் ரோட்டரியன்களிடம் பேசுகிறேன், மேலும் அவர்களின் முதலீடு TRFன் நற்செயல்களை மேலும் எவ்வாறு பெருக்க முடியும் என்பதை அவர்களுக்குக் தெரிவிக்கிறேன். எனது மனைவி கீதாராணி ஆன்மீகத்தில அதிக ஈடுபாடு கொண்டவர், சேவை செய்வதின் மதிப்பை நான் நன்றாகப் புரிந்துகொள்ள அவர் எனக்கு மிகவும் உதவினார். அறக்கட்டளைக்கு நன்கொடை அளிக்கும் எனது முடிவுக்கு அவர் எப்போதும் உறுதுணையாக இருக்கிறார், என்கிறார் அம்பலவாணன்.■

# எழுத்தறிவுக்காக முசாபர்நகர் ரோட்டரி உறுப்பினர்களின் விடாமுயற்சி

ஜெய்ஸ்ரீ



**மேலே:** *சங்கம் நிருவிய கம்யூட்டர் லேப்பில் பள்ளி சிறுமியர்.*




*சங்க உறுப்பினர்கள் பள்ளி ஒன்றில் மின்விசிறிகளுடன்.*

RC முசாபர்நகர் மிட் டவுன், RID 3100ன் 100-க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள், உத்திரப்பிரதேசத்தின் முசாபர்நகரில் உள்ள அரசுப் பள்ளி மாணவர்களுக்குக் கல்வி கற்கும் முறையை ஒரு மகிழ்ச்சியான அனுபவமாக அமைய அப்பள்ளிகளில் மாற்றம் ஏற்படுத்த உறுதிபூண்டுள்ளனர். 1998ல் சங்கம் தொடங்கப்பட்ட நாள் முதல் எப்போதும் எழுத்தறிவுக்கு முன்னுரிமை அளித்து வருகிறது என்று உதவி ஆளுநர் சமீர் அகர்வால் கூறுகிறார்.

இந்த 24 ஆண்டுகளில், சங்கம் 70 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளை எழுத்தறிவு தொடர்பான திட்டங்களின் கீழ் உதவியுள்ளது. “நாங்கள் 30 பள்ளிகளில் கழிப்பறைகளை கட்டியுள்ளோம் அல்லது புதுப்பித்துள்ளோம், 25 பள்ளிகளில் 5–7 கணினிகள் கொண்ட கணினி ஆய்வகங்கள் மற்றும் 50 பள்ளிகளில் மின்னணு கற்றல் மையம், கை கழுவும் நிலையங்கள் மற்றும் தண்ணீர் குளிரூட்டிகள் ஆகியவற்றை அமைத்துள்ளோம்” என்றும், 2005ம் ஆண்டு முதல் சங்கத்தின் உறுப்பினராக இருக்கும் முன்னாள் தலைவரான சுனில் அகர்வால் கூறினார். சங்கம் 30 பள்ளிகளுக்கு மேஜை, நாற்காலிகள் மற்றும் மின்விசிறிகளை வழங்கியுள்ளது. நாங்கள் தவறாமல் இந்தப் பள்ளிகளுக்குச் சென்று மாணவர்களுக்கு எழுதுபொருட்கள், பள்ளி சீருடைகள் மற்றும் காலணிகளை விநியோகிக்கின்றோம்,” என்று மேலும் அவர் கூறினார்.

பருவ வயது சிறுமிகளுக்கு தொடர்ந்து MHM பயிற்சி நடத்தப்பட்டு அவர்களுக்கு

தேவையான சானிட்டரி பேட்கள் விநியோகிக்கப்படுகின்றன. இவற்றில் சில பள்ளிகளில் சானிட்டரி பேட் விற்பனை இயந்திரங்கள் பொருத்தப் பட்டுள்ளன. சில குழந்தைகளுக்கு சைக்கிள் பரிசாக வழங்கப்படுகிறது. இந்த திட்டங்களில் சிலவற்றிற்கு உலகளாவிய மானிய ஆதரவைப் பெற்றுள்ளோம். அடுத்த ஐந்து ஆண்டுகளில், இந்த 70 பள்ளிகளை யும் ஹாப்பி பள்ளிகளாக மாற்ற விரும்புகிறோம், என்று புன்னகைக் கிறார் அகர்வால்.

இந்த ஆண்டு இரண்டு உலகளாவிய மானியங்கள் சங்கத் திற்காக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பாரௌத் மாவட்டத்தில் உள்ள சுரூர்பூர் கலான் கிராமத்தில் டெலிமெடிசின் மையம் அமைக்க ஒரு மானியம் பயன்படுத்தப்படுகிறது. இந்த மையம் அப்பகுதியில் உள்ள செங்கல் சூளை தொழிலாளர்களின் சமூகத்திற்கு பயனளிக்கும். மற்றொரு மானியத்தில் நகரில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் டயாலிசிஸ் மையம் ஏற்படுத்தப்படுகிறது. இந்த ஆண்டிற்குள் ஒரு அரசுப் பள்ளிக்கு மின் கற்றல் மையம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது என்று அவர் கூறுகிறார்.

"சங்கம் அதன் எழுத்தறிவு ஊக்குவிப்பு நடவடிக்கைகள் மூலம் சமூகத்தில் பிரபலமாக உள்ளது, மேலும் நகரத்தைச் சுற்றியுள்ள பல்வேறு கிராமப்புறங்களில் 15 கோவிட் தடுப்பூசி முகாம்கள் ஏற்பாடு செய்ததன் காரணமாக மேலும் சங்கத்தின் மதிப்பு உயர்ந்துள்ளது. மேலும் கர்ப்பப்பை புற்றுநோயைத் தடுப்பதில் கூடுதல் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது என்று உதவி ஆளுநர் கூறினார்.■



*சிறுமி ஒருவருக்கு மிதிவண்டி பரிசளிக்கும் சங்க உறுப்பினர்கள்.*

# கொல்கத்தாவில் பள்ளி மாணவர்களுக்கான பயிற்சி மையம்

ரோட்டரி செய்திக் குழு

DG பிரபீர் சட்டர்ஜி, கொல்கத்தாவின் சாந்திநிகேதனில் உள்ள துவாரண்டாவில் RC கல்கத்தா ஜாதவ்பூர், RID 3291 ஆல் சமீபத்தில் நிறுவப்பட்ட பந்தானிவாஸ் இ-பாத்ஷாலா என்ற பயிற்சி மையத்தைத் திறந்து வைத்தார். இந்த மையம், சுற்றியுள்ள நான்கு கிராமங்களைச் சேர்ந்த 1 முதல் 10 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு அனைத்து பாடங்களிலும் பயிற்சி அளிக்கும். இதற்காக சங்கம் ஐந்து பட்டதாரி மாணவர்களை வேலையில் அமர்த்தி, அவர்கள் வாரத்தில் ஐந்து நாட்கள் மாணவர்களுக்கு வகுப்புகளை எடுக்குமாறு ஏற்பாடு செய்துள்ளனர், மேலும் இந்த அமைப்பைக் கண்காணிக்க துவாரண்டா உயர்நிலைப் பள்ளியின் தலைமையாசிரியர் வாரத்திற்கு இரண்டு முறை மையத்திற்கு வருவார். மையத்தில் வகுப்புகளுக்குச் செல்லும் குழந்தைகளுக்கு தினமும் சிற்றுண்டி வழங்கப்பட உள்ளது.

பெரியோர் கல்வியறிவுத் திட்டம் மூலம், பந்தானிவாஸ் வளாகத்தின் உதவியாளர்களுக்கு அடிப்படை கல்வி பயிற்சி வழங்கப்படும். மையத்தின் திறப்பு விழாவையொட்டி மாணவர்களுக்கு குறிப்பு புத்தகங்கள், குறிப்பேடுகள் மற்றும் எழுதுபொருட்கள் வழங்கப்பட்டன.■


*பயிற்சி மையத்தில் DG ப்ரபீர் சாட்டர்ஜி.*

# கிராமப்புற பெண்களுக்காக
# சோயா பால் தொழிற்கல்வி பயிற்சி

ரோட்டரி செய்திக் குழு

இந்தியாவில் ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகளுக்கு, பசு மற்றும் எருமை பால் விலையில் மூன்றில் ஒரு பங்கு விலையில் வீட்டிலேயே தயாரிக்கப்படும் மலிவான ஆனால் புரதம் நிறைந்த சோயா பால் ஒரு பெரிய வரமாக அமையும்.

இந்த யோசனையை சேத்ரன் ப்ரோடக்ட்ஸ் நிறுவனர் ரஞ்சித் பால், RID 3131 PDG அருண் குடலே அவர்களின் முன்வைத்தார். அவர் தனது சங்கமான, RC புனே சவுத் உறுப்பினர்களுக்கு இந்த யோசனையை எடுத்துச் சென்றார், மேலும் அவர்களிடம் கிராமப் புறங்களில் ஒரு ஆரம்ப திட்டத்தை தொடங்க பரிந்துரைத்தார்.

ஞான பிரபோதினியின் உறுப்பினர் சுவர்ணா தாய் அவர்களின் அயராத முயற்சியால், முதல் தொழிற்கல்வி பயிற்சி பிப்ரவரி 2021ல் நசராபூருக்கு அருகிலுள்ள அம்பவனே கிராமத்தில் நடைபெற்றது. இந்த பயிற்சியின் மூலம் சுமார் 25 பெண் அங்கன்வாடி பணியாளர்கள் பயனடைந்தனர். இந்த பெண்கள் தற்போது சுற்று வட்டார அங்கன்வாடிகளில் மாணவ, மாணவிகளுக்கு சோயாபால் விநியோகிக்கின்றனர். மஹாராஷ்டிராவைச் சேர்ந்த ஓய்வு பெற்ற அதிகாரி ரஞ்சித் பால் இந்த சங்கத்திற்கு நன்கொடையாக வழங்கிய நிதி மூலம் இந்தப் பெண்களின் பணிக்கான சம்பளம் வழங்கபடுகிறது. மேலும், இந்த திட்டத்திற்காக பெண்களுக்கு ரூ.10,000 மதிப்புள்ள கருவிகளையும், கூடுதலாக ரூ.1 லட்சத்தையும் அவர் வழங்கினார்.

இதுவரை, எங்கள் சங்கம் பல தாலுகாக்களில் உள்ள 11 கிராமங்களில் இந்த பயிற்சி நடத்தியிருக்கிறது. ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகளுக்கு பலன் அளிக்கும் வகையில் இந்த திட்டத்தின் வரம்பை விரிவுபடுத்த எங்கள் சங்கத்திற்கு மேலும் ரூ.20 லட்சம் வழங்குவதாக அவர் உறுதியளித்துள்ளார், என்று கூடலே கூறியுள்ளார்.

உள்ளூர் கிராம பஞ்சாயத்து அலுவலக பணியாளர்கள் மற்றும் அப்பகுதியில் உள்ள தொண்டு நிறுவனங்களின் அறங்காவலர்களுடன் இணைந்து இந்தப் தொழிற்கல்வி பயிற்சியை 10 முதல் 25 பெண்களுக்கு நடத்து கின்றனர். சங்கத்தலைவர் அதுல் அத்ரே மற்றும் அவரது குழுவினர் பல்வேறு கிராமங்களில் இதுபோன்ற 20 தொழிற்கல்வி பயிற்சியை நடத்த உள்ளனர்.

பணியில் இருந்த போது, ரஞ்சித்பால் ஜப்பானில் உணவு பதப்படுத்தும் தொழிலைப் பற்றிப் படித்தார், மேலும் அவர்களது குடும்ப உணவுப் பழக்கங் களைக் கவனித்தபோது, சோயாபீன்ஸ் உணவில் பரவலாகப் பயன் படுத்தப்படுவதைக் கவனித்தார். சில குழந்தைகள் அல்லது பெரிய வர்களால் பசுவின் பாலில் உள்ள லாக்டோஸை ஜீரணிக்க முடியாது. சோயா பால் மற்றும் பிற சோயா பொருட்கள் விலங்குகளின் பாலை விட குறைந்த செலவில் மனித உடலின் புரதத் தேவையை பூர்த்தி செய்ய முடியும். எனவே, அவை ஜப்பானில் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன என்பதை, பால் கவனித்தார் என்கிறார் குடலே.

*சேத்ரன் ப்ரோடக்ட்ஸ் நிறுவனர் ரஞ்சித் பால், Rtn சுதர்ஷன் நட்டு மற்றும் PDG அருண் குடலே கிராமப் பெண்களுடன் ஒரு பயிற்சி முகாமில்.*



1990ம் ஆண்டு, அவர் ஜப்பானுக்குச் சென்றபோது சேகரிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில், தன் வீட்டு மிக்ஸியில், சோயா பால் மற்றும் டோஃபுவை தயாரித்தார். புனே முகாமில் உள்ள டோராப்ஜி மாலில் அதைக் கொண்டு காட்டினார். தயாரிப்பு நன்றாக பயன் தரும் என்று கருத்து தெரிவித்த டோராப்ஜி அவருக்கு முதல் ஆர்டரை வழங்கினார்.

சோயா பால் வீட்டில் தயாரிக்க மிகவும் எளிதானது. 1 கிலோ சோயாபீன் விதைகளை 2 லிட்டர் தண்ணீரில் 6 முதல் 8 மணி நேரம் ஊற வைக்கவும். பின்னர் 7 லிட்டர் கரைசலை உருவாக்கும் வரை படிப்படியாக தண்ணீர் சேர்த்து நன்றாக அரைக்கவும். மெல்லிய துணியால் அந்த திரவத்தை வடிகட்டவும்.

இவ்வாறு தயாரிக்கப்படும் பால், வழக்கமான பால் போன்று மேலும் பல செயலாக்கத்திற்கு பயன்படுத்தலாம். இந்த பாலை சூடாக்கினால் சில மணி நேரம் கெடாமல் நன்றாக இருக்கும். வடிகட்டுதல் துணியில் எஞ்சி யிருக்கும் திப்பியை சமையலிலோ அல்லது கால்நடை தீவனமாகவோ பயன்படுத்தலாம், அதனால் இம்முறையில் எதுவும் வீணாகாது.

சூடாக்கப்பட்ட சோயா பாலுடன் தயிர் அல்லது சோயா தயிர் சேர்த் தால் சோயா தயிர் உருவாகிறது. டோஃபு அல்லது சோயா பன்னீரை கொதிக்கும் சோயா பாலில் 1 அல்லது 2 எலுமிச்சை சாற்றை பிழிந்து, திடப்பொருட்களிலிருந்து தண்ணீரை பிரித்து தயாரிக்கலாம். காய்கறிகளில் பயன்படுத்தும் போது, பலருக்கு வழக்கமான பன்னீருக்கும் டோஃபுவிற்கும் உள்ள சுவை வித் தியாசம் தெரியாது.

கிராமப்புற பெண்களுக்காக எளிய உள்ளூர் மொழியில் சோயா பால் உற்பத்திப் பற்றி தொழிற்கல்வி பயிற்சி அளிக்கப்பட்டு மற்றும் குறிப்புகள் வழங்கப்படுகின்றன. ■

---

TRF உதவியுடன் நற்பணி

# தமிழக கிராமத்தில் ஆழ்துளை கிணறு மூலம் குடிநீர் விநியோகம்

ரோட்டரி செய்திக் குழு




ரோட்டரி மாவட்டம் 3212-க்கு உட்பட்ட விருதுநகர் எலைட் ரோட்டரி சங்கம், 60,900 டாலர் மதிப்பிலான சர்வதேச மானிய உதவித் திட்டத்தின் மூலம் அமைத்துக் கொடுத்துள்ள நான்கு ஆழுதுளை கிணறுகள் மூலம் விருதுநகர் அருகே, ரோசல்பட்டி கிராமத்தைச் சேர்ந்த 750 குடும்பத்தினர், குடிநீர் பெற்று பயனடைவார்கள். இந்த அறக்கட்டளை திட்டத் திற்கு சர்வதேச பங்காளியாக அமெரிக்காவின் நார்த் டகோடாவில் உள்ள, RID 5580-க்கு உட்பட்ட RC ஃபார்கோ மூர்ஹெட் AM இணைந்துள்ளது.

குடியிருப்பாளர்கள் தினசரி தண்ணீர் எடுப்பதற்கு வச தியாக மோட்டார் பம்புகளும், குழாய்களுடன் இணைக்கப்பட்ட தண்ணீர் தொட்டியும் நிறுவப் பட்டுள்ளது. இந்த ஆழ்துளை கிணறுகள் மற்றும் குழாய்கள் இணைக்கப்பட்ட தண்ணீர் தொட்டிகள் மூலம் விருதுநகரில் உள்ள 8 பள்ளிகளைச் சேர்ந்த சுமார் 10,000 மாணவர்களுக்கு குடிநீர் கிடைக்கவும், கைகழுவுவதற்கும் வழிசெய்யப்பட்டுள்ளது என்றார் சங்கத்தின் தொடர்பாளர் C மாரிமுத்து. இது தவிர S S பொன்னுசாமி-சரஸ்வதி அம்மாள் டிரஸ்ட் இத்திட்டத்திற்கு நேரடி நன்கொடையாக ரூ.25 லட்சம் வழங்கியுள்ளது.

இத்திட்டத்திற்கான தொடக்க நிகழ்ச்சியில் DGE V R முத்து, ஆழ்துளை கிணறுகளில் ஒன்றை பொதுமக்கள் பயன்பாட்டுக்காக அர்ப்பணித்தார். IPDG PNB முருகதாஸ், சங்கத்தின் தலைவர் N முத்துகுமார் மற்றும் மாரிமுத்து ஆகியோர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர். ■

# ரோட்டரி ஆளுநர்



## J ஸ்ரீதர்

**வாகன பாகங்கள் உற்பத்தியாளர்**
RC **மெட்ராஸ் இண்டஸ்ட்ரியல் சிட்டி,** RID 3232

## நன்மதிப்பு உருவாக்கத்தின் உச்சத்தில் திகழும் சென்னை

"சங்கத்தின் மேல் நன்மதிப்பு உருவாக்குவதே நம் சங்கத்தின் செயல்பாடுகள் மற்றும் திட்டங்களில் முன்னிலை படுத்தப்பட்டுள்ளது. செப்டம்பர் 12 அன்று நகரம் முழுவதும் நடத்தப்பட்ட மிகப்பெரிய கோவிட் தடுப்பூசி முகாம்கள் மற்றும் உலக போலியோ ரோட்ஷோக்கள் மக்களிடையே நல்ல தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது" என்கிறார் J ஸ்ரீதர். சென்னையின் அனைத்து சங்கங்களும், பெருநகர சென்னை மாநகராட்சி தடுப்பூசி முகாம்களை நடத்துவதற்கு பொருள் மற்றும் தளவாடங்களை கொடுத்து ஆதரவளித்தனர். எங்கள் கூட்டாண்மையை அங்கீகரிக்கும் விதமாக பெருநகர சென்னை மாநகராட்சி சான்றிதழை வழங்கியுள்ளது."

இந்த ஆண்டு, அவர் 1,200 உறுப்பினர்களை சேர்ப்பதை இலக்காகக் கொண்டுள்ளார். "நாங்கள் ஏற்கனவே 19 புதிய சங்கங்களை உருவாக்கியுள்ளோம், மூன்று சங்கங்கள் விரைவில் பட்டயப்படுத்தப்படும்." மேலும் ஸ்ரீதர் 2,000 புதிய ரோட்டராக்டர்களை சங்கத்தில் சேர்த்து ரோட்டராக்டர்கள் எண்ணிக்கை 32,000 ஆக உயர்த்தவும் மேலும் 20 புதிய ரோட்டராக்ட் சங்கங்களை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளார்.

"நகரம் முழுவதும் பல நீடித்திருக்கத்தக்க திட்டங் களைச் செய்ய நாங்கள் சென்னை மாநகராட்சியுடன் கூட்டு சேர்ந்துள்ளோம்," என்று அவர் கூறுகிறார். சுமார் 12–14 டயாலிசிஸ் மையங்கள் (100 இயந்திரங்கள்) அரசு மற்றும் அறக்கட்டளை மருத்துவமனைகளில் GGக்கள் மூலம் ரூ.7.5 கோடி மதிப்பில் அமைக்கப்படும். 1.5 மில்லியன் டாலர் TRF வழங்குவது அவரது இலக்கு ஆகும். "புதிய ரோட்டேரி உறுப்பினர்களை ஈர்ப்பதற்கும், ஏற்கனவே உள்ள உறுப்பினர்களுக்கு இடையே பிணைப்பு மற்றும் கூட்டு நடவடிக்கைகளை அதிகரிக்கும் நாங்கள் கூட்டுறவுகளை உருவாக்குகிறோம் என்கிறார். நீர் நிலை களை தூர்வாருதல், எங்கள் முக்கிய நோக்கமாகும், என்கிறார் இவர். 2000-ம் ஆண்டில் இவர் ரோட்டரியில் சேர்ந்தார்.



## கௌரிஷ் தோண்ட்

**விருந்தோம்பல்,** RC **பனாஜி,** RID 3170

## நீரைச் சேமிப்பதற்கு மிகப் பெரிய மறுசுழற்சி ஆலைகள்

ஒரு ஜப்பானிய நிறுவனம், ஓர் இந்திய நிறுவனத்துடன் இணைந்து, நீரைச் சேமிப்பதற்காக அரசு மருத்துவ மனைகள் மற்றும் ராணுவ முகாம்களில் 10 மறுசுழற்சி வசதிகள் (STP பிரிவுகள்) நிறுவப்படும். ஜல் சக்தி அமைச்சகம் இந்தத் திட்டத்துக்கு அனுமதி வழங்கியுள்ளது, பன்னாட்டு நல்கை மற்றும் CSR நிதிக் கலவையில் இந்தத் திட்டம் நடைபெறும். $100,000 விலையுள்ள பிரிவுகளில் 60%ஐ CSR நிதி வழங்குகிறது. நீர் மறுசுழற்சிப் பிரிவை மேலும் மேம்படுத்தலாம்" என்கிறார் கௌரிஷ் தோண்ட்.

இந்த மாவட்டம் எட்டு புதிய சங்கங்களைச் சேர்த்து மொத்த எண்ணிக்கையை 143க்கு உயர்த்தும். நாங்கள் உறுப்பினர் எண்ணிக்கையை 1,000 வளர்த்து மொத்த எண்ணிக்கையை 6,700க்கு மேல் கொண்டு செல்ல இலக்கு அமைத்துள்ளோம். உஜ்ஜ்வால் திருஷ்டி அபியான் திட்டத்தின்கீழ் தார்வாட் சங்கங்கள் 33,000க்கும் மேற்பட்ட குழந்தைகளுக்குக் கண் நோய்ப் பரிசோதனை களை நடத்தின. நாங்கள் கோவா அரசுடன் இணைந்து, வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 32 வீடுகளை (தலா ரூ.5 லட்சம்)க் கட்டவுள்ளோம். கோவா மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உள்ள குழந்தைகள் மருத்துவப் பிரிவு மேம்படுத்தப்படுகிறது (GG: $60,000). TRFக்கு இவருடைய இலக்கு, $1 மில்லியன். Round Table உறுப்பினரான தோண்ட் சமூக சேவையில் அனுபவம் மிக்கவர். அப்போது பெங்களூரில் எனக்குப் பல ரோட்டரி நண்பர்கள் இருந்தார்கள். 40 வயதுக்குமேல் நான் வட்ட மேசை அமைப்பில் இருக்க இயலாது என்பதால், 2000ல் நான் ரோட்டரியில் இணைந்தேன். இவர் இந்தியச் செஞ்சிலுவைச் சங்கத்தின் கோவா பிரிவுத் தலைவர் ஆவார்.

வடிவமைப்பு: N கிருஷ்ணமூர்த்தி





## K ஸ்ரீனிவாசன்

**பேக்கேஜிங்**, RC **கொய்லான் வெஸ்ட்**, RID 3211

## ரோட்டரியின் பொதுத் தோற்றத்தை மேம்படுத்தும் “என்டெ கிராமம்”

இந்த மாவட்டத்தின் அடையாள முன்னெடுப்பாகிய என்டெ கிராமம் திட்டத்தின்கீழ் 150 சங்கங்களும் குறைந்தது ஒரு கிராமத் தத்தெடுப்புத் திட்டத்தை நடத்துகின்றன, அங்கு பல திட்டங்களைச் செயல் படுத்துகின்றன. எங்களுடைய கிராமத் திட்டங்களில் சில, வீடுகளைக் கட்டுதல், PHCக்கள், மருத்துவமனைகளுக்குக் கருவிகளை வழங்குதல், கழிப்பறைத் தொகுதிகள் போன்ற வசதிகளுடன் பள்ளிகளைப் புதுப்பித்தல். இதற்கான நிதி உறுப்பினர் பங்களிப்புகளால் பெறப்படுகிறது” என்கிறார் K ஸ்ரீனிவாசன். ஃபிப்ரவரியில், கோட்டயம் கொட்டிக்கால் கிராமத்தில் உள்ளூர் MLA மற்றும் ஒரு நில உரிமையாளர் கொடையளித்த 50 சென்ட் நிலத்தில் 10 வீடுகளைக் கட்டும் ஒரு திட்டம் (ரூ.60 லட்சம்) தொடங்கப்பட்டது என்கிறார் இவர்.

TRF வழங்கலுக்கு இவருடைய இலக்கு, 1 மில்லியன். 1,000 புதிய உறுப்பினர்களைச் சேர்த்து மொத்த உறுப்பினர் எண்ணிக்கையை 5,500க்குமேல் கொண்டுசெல்ல இயலும் என்று இவர் நம்புகிறார். பதினைந்து புதிய சங்கங்கள் தொடங்கப்பட்டு மொத்த எண்ணிக்கை 157 ஆகும். 1991ல், தன்னுடைய தந்தையின் நண்பர் Rtn P A சுப்ரமணியன் அவர்களுடைய தாக்கத்தால் ரோட்டரியில் சேர்ந்தார்.

## K சண்முகசுந்தரம்

**ஆட்டோமொமைபல் வணிகர்**, RC **கோபி**, RID 3203

## ரூ.60 கோடி புற்றுநோய் மருத்துவமனை வரவிருக்கிறது

நோய்ப்பரவலுக்கு நடுவில், ஈரோடு பெருந்துறையில் உள்ள அரசு மருத்துவமனை வளாகத்தில் 400 படுக்கைகளைக் கொண்ட கோவிட் மருத்துவமனையை ரூ.20 கோடி செலவில் 45 நாட்களில் அமைத்துச் சாதனை படைத்த இந்த மாவட்டத்தின் மாதிரி நலப் பரிசோதனைத் திட்டத்தை RI தலைவர் சேகர் மேத்தா மிகவும் பாராட்டினார்.

புதிதாக உருவாக்கப்பட்ட இந்த மாவட்டத்தின் முதல் DG சண்முகசுந்தரம் 20 புதிய சங்கங்களை அமைத்து 103 என்ற எண்ணிக்கையை எட்ட இலக்கு அமைத்துள்ளார். ஆண்டு நிறைவுக்குள் 1,000 உறுப்பினர்களைச் சேர்த்து மொத்த உறுப்பினர் எண்ணிக்கையை 5,000க்குக் கொண்டுசெல்வது எங்கள் இலக்கு. உடுமலைப்பேட்டை GH மற்றும் திருப்பூர் தனியார் மருத்துவமனை ஒன்றில் இரண்டு டயாலிசிஸ் மையங்கள் வரவிருக்கின்றன (ஒருங்கிணைந்த GG: ரூ 1.1 கோடி); RC திருப்பூர் காந்திநகர் ஒரு நடமாடும் இதயப் பரிசோதனை மருந்தகத்தைத் தொடங்கும் (GG: ரூ 1.5 கோடி), சமலாபூர் கிராமத்தில் உள்ள, கைவிடப்பட்ட 90-ஏக்கர் குளம் ஒன்றை RC திருப்பூர் வெஸ்ட் புதுப்பித்தது (ரூ.2 கோடி).

TRF வழங்கலுக்கு இவருடைய இலக்கு, $1 மில்லியன். RC மேட்டுப்பாளையம் ரோட்டராக்டர்கள் உதவியுடன் “I Rotree” என்ற டிஜிட்டல் செயலியை உருவாக்கியுள்ளது. இந்தச் செயலி, உலகம் முழுவதும் ரோட்டரியன்கள் நட்டுள்ள மரங்களின் எண்ணிக்கையைப் பதிவு செய்து, டிஜிட்டல் தரவுகளைப் பராமரிக்கும். 1985ல், பதிவு உறுப்பினர் P கருப்பண்ணன் அவர்களுடைய ஊக்கத்தால் இவர் ரோட்டரியில் சேர்ந்தார். தன்னுடைய அலுவல் காலத்தில் 14 GG திட்டங்களையும் நிறைவு செய்ய இயலும் என்று இவர் நம்புகிறார்.

வடிவமைப்பு: N கிருஷ்ணமூர்த்தி

# திட்டங்களைப்பற்றிய அறிமுகங்கள்

ரோட்டரி செய்திக் குழு

## விளையாட்டு நிகழ்ச்சிக்கு ரோட்டரி சங்கம் நிதியுதவி



*ரோட்டரி ஸ்டால் திறப்பு விழாவில் RI இயக்குனர் மகேஷ் கோட்பாகி.*

RC புனே ஸ்போர்ட்ஸ் சிட்டி, RID 3131, புனே கிரிக்கெட் கிளப்புகளுக்கு இடையே நடக்கும் போட்டியான புசல்கர் பிரீமியர் லீக்கிற்கு நிதியுதவி அளித்துள்ளது. போட்டி நடைபெறும் இடத்தில் ரோட்டரி ஸ்டால் மற்றும் ரத்ததான முகாம் ஆகியவற்றை சங்கம் அமைத்திருந்தது. RI இயக்குனர் மகேஷ் கோட்பாகி ஸ்டாலை திறந்து வைத்தார்.

## சூரத்தில் LN-4 பொருத்துதல் முகாம்



*RC சூரத் தபி, RID 3054, RC ஜாம்நகர், RID 3060ன் ஆதரவுடன், சூரத்தில் LN-4 கை பொருத்துதல் முகாமை ஏற்பாடு செய்தது. பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த 77 பேர் இதன் மூலம் பயனடைந்தனர்.*

## கிராமப்புற பெண்களுக்கான தொழில் பயிற்சி திட்டம்



*ரோட்டரி அஷ்ரிதா தையல் மையத்தில் பெண்கள்.*

*RC பெங்களூர் லேக்சைடு, RID 3190, பெங்களூரு அருகே உள்ள கொய்ராவைச் சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த 100 சுயஉதவிக் குழு பெண்களுக்கு தையல் மற்றும் எம்பிராய்டரி திறன்களை கற்றுகொடுப்பதற்காக ரோட்டரி-அஷ்ரிதா பயிற்சி மையத்தை அமைத்துள்ளது.*

## ரோட்டரியின் 5 ஆண்டு நிதி முன்னறிவிப்பு




**இடதிலிருந்து:** PDGs *முருகானந்தம்* (3000), B M *சிவராஜ்* (3142), TRF *அறங்காவலர் அஜீஸ் மேமன்,* PRID P T *பிரபாகர்,* PDG E K *சகாதேவன் மற்றும்* RI *இயக்குனர் வெங்கடேஷ்.*

*TRF அறங்காவலர் அஜீஸ் மேமன் மஹாப்ஸ் ரோட்டரி இன்ஸ்டிட்யூட்டில் ரோட்டரியின் ஐந்தாண்டு நிதி முன்னறிவிப்பை வழங்கினார். அக்கூட்டத்திற்கு PRID PT பிரபாகர் தலைமை தாங்கினார்.*

# பழைய புடவைகளிலிருந்து துணிப்பைகள் தயாரித்தல்

ஜெய்ஶ்ரீ

RC நாக்பூர் பிளாக் கோல்டு, (RID 3030) பயன்படுத்திய பழைய புடவைகளுக்கு மறுவாழ்வு அளிக்கும் வகையில் அவற்றை வண்ண, வண்ண துணிப்பைகளாக தயாரிக்க உதவியுள்ளனர். எங்கள் சங்கத்தின் செயலாளர் ஷீலா தாய், இந்த யோசனையை முன்வைத்தார் என்றார் சங்கத்தின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அனில் மஹல்லே.

நாக்பூரிலிருந்து 35 கி.மீ. தொலைவில் நாகாஜ்ஹரி என்ற கிராமம் இந்த முன்னோடி திட்டத்துக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. மேலும் கிராமப் பஞ்சாயத்து 12 ஆர்வமுள்ள பெண்களை அடையாளம் காண உதவியது. தொடக்கத்தில் சங்க உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் 5 புடவைகளை கொடுத்தனர். 3 உறுப்பினர்கள், தங்களது தையல் இயந்திரங்களை கிராம மக்களுக்கு நன்கொடையாக அளித்தனர். அந்த பெண்களுக்கு புடவையிலிருந்து துணிப்பை தைப்பது எப்படி என்று ஷீலா கற்றுக் கொடுத்தார். சிறிது நேரத்தில் 100 துணிப்பைகள் தயாரிக்கப்பட்டன. பின்னர் நாங்கள் அவற்றை எடுத்துச் சென்று உள்ளூர் வியாபாரிகளிடம் ஒரு துணிப்பை ரூ.10 என விற்று விட்டோம் என்றார் மஹல்லே. விற்பனையாளர்களும் காய்கறிகள், பழங்கள், மளிகை சாமான்களை பிளாஸ்டிக் பைகளுக்குப் பதிலாக இந்த துணிப்பைகளில் பேக் செய்து வாடிக்கையாளர்களுக்கு அளித்தனர். இப்போது நாங்கள் துணிப்பைகளை வாங்குவதற்கு அதிக நபர்களை அடையாளம் கண்டுள்ளோம். இந்த சேவை இரு வழிகளில் பயன்படுகிறது. ஒன்று இதன் மூலம் பெண்களுக்கு வருமானம் கிடைக்கிறது. மற்றொன்று சுற்றுச்சூழலை பாதுகாப்பது மட்டுமல்லாமல், பாலிதீன் பைகள் பயன்பாட்டை குறைக்கிறது. பல சங்கங்கள் இந்த எளிய மற்றும் பயனுள்ள திட்டத்தை தங்கள் சமூகத்தில் பிரதிபலிக்க முடியும் என்று அவர் மேலும் கூறினார்.

இந்த பொருளாதார வலுவூட்டல் திட்டத்தை மேலும் பல கிராமங்களுக்கு விரிவுபடுத்த சங்கம் திட்டமிட்டுள்ளது. இதற்காக மேலும் தையல் இயந்திரங்கள் வழங்க முன் வருபவர்களைத் தேடி வருகிறோம். ஏழைப் பெண்களுக்கு தையல் பயிற்சி அளிக்க “சிங்கர்” தையல் இயந்திர தயாரிப்பு நிறுவனத்துடன் சமீபத்தில் ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. இத்திட்டத்துக்காக நாங்கள் ஒரு அரங்கை வாடகைக்கு எடுத்து அதில் ரூ.1,27,000 மதிப்புள்ள 14 தையல் இயந்திரங்களை நிறுவியுள்ளோம். சிங்கர் நிறுவனம் பெண்களுக்கு பயிற்சி அளித்து டிப்ளமோ சான்றிதழ் வழங்க உள்ளது. இது அவர்கள் ஆடை தயாரிப்பு நிறுவனங்களில் வேலைபெற உதவியாக இருக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.■



*சங்கச் செயலாளர் ஷீலா தாய் பெண்களுக்கு தையல் பயிற்சி அளிக்கிறார்.*



# பாட்டியின் புத்தகத்திலிருந்து ஒரு பக்கம்

*பெரிய விஷயங்கள் அல்ல சிறிய விஷயங்களே உங்கள் அலமாரியை பசுமையாக மாற்றும்.*

ப்ரீதி மெஹரா

“நேரத்தில் போடும் ஒரு தையல் பிறகு போடவேண்டிய ஒன்பது தையலை தடுக்கும்” என்ற பழமொழி உங்களுக்கு நினைவிருக்கிறதா? அந்த தையல் நம் பூமிக்கும் உதவலாம், தங்களை மனம் நெகிழ செய்யலாம் மற்றும் வளங்களைப் பாதுகாக்கவும் உதவலாம். அதிர்ஷ்டவசமாக, இதற்காக பெரிய அறிவியல் பாடம் எதுவும் கற்க தேவையில்லை, அவ்வப்போது தங்கள் அலமாரிகளுக்குள் ஒரு நோட்டம் மற்றும் உங்கள் தாத்தா பாட்டி பின்பற்றிய சில முறைகளை பின்பற்றினாலே போதும். அவர்கள் வாழ்ந்த காலங்களில் பிராண்டுகள் குறைவாக இருந்தது, வேகமான ஃபேஷன் என்பது இல்லாமலிருந்தது, ஆடைகள் வேறு கோணத்தில் பார்க்கப்பட்டன.

முந்தைய இதழில், ஜவுளி மற்றும் பேஷன் தொழில்கள் சுற்றுசுழலை எவ்வளவு மாசுபடுத்து கிறது என்றும் அதனால் ஏற்படும் வெப்பநிலை மாற்றத்தை பற்றி ஏற்கனவே பார்த்தோம். ஆனால் நாம் நம் படைப்பாற்றல் மற்றும் உணர்திறனை பயன்படுத்தி ஆடைகளை குறைவாக பயன்படுத்தி, அந்த தொழில்களின் நீர் பயன்பாட்டினை கட்டுப்படுத்தலாம் மற்றும் கடல்களுக்குள் கலக்கப்படும் இரசாயனங்கள் மற்றும் மைக்ரோபிளாஸ்டிக் துகல்களை குறைக்க உதவலாம்.

நாம் அதை எப்படி செய்யலாம்? முதலில், நம்மால் தைக்க முடியும் என்பதை மறக்காமல் இருக்க வேண்டும். அறுந்து தொங்கும் பொத்தானையோ, கிழிந்த பாக்கெட்டையோ அல்லது பிரிந்திருக்கும் விளிம்பை ஒரு ஊசி யை கொண்டு சரி செய்ய வேண்டும். இத்தகைய எளிமையான செயல் ஒரு ஆடையின் ஆயுளை நீட்டிக்கும், அதை நீங்கள் தூக்கி எறிவதை தடுக்கும் மேலும் புது அடைகள் வாங்குவதை குறைக்கும்.

இக்கட்டுரைக்காக, நான் மூன்று இளைஞர்கள், மூன்று நடுத்தர வயதுடையவர்கள் மற்றும் ஒரு வயது முதிர்ந்தவரிடம் தங்களுக்குப் பிடித்த ஆடை கிழிந்தால், அதன் பொத்தான்கள் விழுந்தால் அல்லது அதன் விளிம்பு பிரிந்தால் என்ன செய்வீர்கள் என்று கேட்டேன். அதில் நான்கு பேர் எனக்கு ஒரே பதிலைக் அளித்தனர் - அவர்கள் அதை தங்கள் அலமாரியின் ஒரு மூலையில் வைத்து அதை மறந்துவிடுவர். ஒருவர் அதைக் தானமாக கொடுத்துவிடுவதாக கூறினார், மற்றொருவர் ஒரு சீரான முறையைப் பின்பற்றுகிறார். அவர் பழுதுபார்க்க வேண்டிய அனைத்து ஆடைகளையும் ஒன்று சேர்த்து, வார இறுதியில், ஒரு தையல்காரரை அழைத்து அனைத்தையும் சரிசெய்கிறார். வயது முதிர்ந்தவரோ தனது ஆடைகளை தானே தைத்து கொள்கிறார். அது மட்டுமல்லாமல், மற்ற குடும்ப உறுப்பினர்களின் ஆடைகளையும் சரிசெய்கிறார்.



எல்லோராலும் தையலில் சிறந்து விளங்க முடியாது, ஆனால் ஒரு தையல்காரரை அழைத்து தைப்பது என்பது ஒரு சிறந்த யோசனையாகும். குறிப்பாக கொரோனா தொற்றால் பெரும்பாலான தையல்காரர்கள் வேலையின்றி தவிக்கும் நேரத்தில், உங்கள் உதவி வேலைவாய்ப்பை வழங்குவதில் முக்கிய பங்குவகிக்கும். ஆனால், தையல்காரர் இயற்கை இழைகளால் செய்யப்பட்ட நூலைப் பயன்படுத்து கிறார்களா என்பதை உறுதிப்படுத்த முயற்சிக்கவும். ஏனெனில் தைக்கும்போது நிறைய நூல் வீணாகும். இயற்கையான

நூலைப் பயன்படுத்துவதால் அது மங்கினாலும் சுற்றுசூழலுக்கு எந்த தீங்கும் கிடையாது.

ஆனால் நாம் அடிக்கடி செய்வது போல், ஒரு ஆடையை நீங்கள் தூக்கி எறிய விரும்பினால், அதில் இருக்கும் பொத்தான்களைப் பிடுங்கவும், சரிகையை கிழிக்கவும், ஜிப்பினை வெட்டி எடுக்கவும், அவற்றை வேறு உடையில் பயன்படுத்தவும். இனி எந்தப் பயனும் இல்லை என்று நிராகரிக்கப்பட்ட அல்லது வடிவமற்ற ஆடைகள், அளவுக்கு வெட்டப்பட்டால், ஃபிராக், ஸ்மாக், ஷர்ட் மற்றும் ஷார்ட்ஸ் ஆக குழந்தைகளுக்கு தைத்து கொள்ளலாம். புதுப்பித்தல், மறுபயன்பாடு மற்றும் மறுசுழற்சி செய்தலின் மூலம் நாம் நம் பூமியை காப்பாற்றலாம்.

உங்கள் அலமாரியில் மற்றொரு நோட்டம் இன்னும் ஆக்கப்பூர்வமான யோசனைகளைத் தூண்டும். உதாரணமாக, ஆண்களின் தேய்ந்து போன டைகள் ஆடைகளுக்கு சிறந்த பைப்பிங்காக அமையும், கிழிந்த சட்டைகளை கைக்குட்டைகளாகவும், கிழிந்த ஜீன்ஸ் பேன்ட்களை ஷார்ட்ஸாகவும் புதுப்பிக்கலாம். நம்மால் முடிந்த வரை வீணாக்கம் இருக்கக் கூடாது என்பதே நம் எண்ணமாக இருக்க வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் 1.22 முதல் 2.93 பில்லியன் மெட்ரிக் டன் கார்பன்-டை-ஆக்சைட் வாயுவை வளிமண்டலத்தில் வெளியேற்றி, உலகளாவிய க்ரீன்ஹவுஸ் வாயு வெளியேற்றத்தில் 6.7 சதவீதத்தைக் வகிக்கும் ஜவுளி துறையின் ஆடைகள் வீணாகி, குப்பைக் கிடங்குகளில் குவிவதை நாம் ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது. சிறிது முயற்சி மேற்கொண்டு, அவற்றை மறுசுழற்சி செய்து மீண்டும் புதிய ஆடைகளாக பயன்படுத்தலாம்.

ஆடைகளை தைக்கவோ அல்லது புதுப்பிக்கவோ நேரமில்லாதவர்களுக்கு, மூன்றாவது வழி ஒன்று உள்ளது - உங்கள் ஆடைகளை சேகரித்து, மறுசுழற்சி செய்யும் தொண்டு நிறுவனங்களுக்கு அனுப்பவும். உதாரணமாக, அரசு சாரா தொண்டு நிறுவனமான கூஞ்ச், எல்லா மாநிலத்திலும் ஆடைகளைச்





சேகரிக்கிறது. கந்தலாக இருந்தாலும் அவற்றை பெற்று தனது தொழிற் சாலையில் அற்புதமான மேஜை விரிப்புகள், கதவு விரிப்புகள் மற்றும் தரை விரிப்புகளாக வடிவமைக்கிறது. இவற்றை விற்பனை செய்வதன் மூலம் பெரும் நிதியை கொண்டு வீடற்றவர்கள் அல்லது இயற்கை பேரிடர்களால் பாதிக்கப்பட்டவர் களுக்கு உதவுகிறது.

பழைய துணிகளைக் கொடுப்பதை பற்றி பேசும்போது, நம் நாட்டில் ஸ்டீல் பாத்திரங்களுக்கு உடைகளை மாற்றிக் கொள்ளும் மரபு என் நினைவுக்கு வருகிறது. என் சிறுவயதில் சில பெண்கள் ஸ்டீல் தட்டுகள், குவளைகள், டம்ளர்கள், டிபன் பாக்ஸ்கள் போன்றவற்றைக் கூடைகளில் தலையில் சுமந்து கொண்டு எங்கள் காலனியைச் சுற்றி வந்ததை நான் ஆர்வமாக கவனித்தது மேலும் நாம் எவ்வளவு பழைய ஆடைகளை கொடுக்கிறோமோ என்பதைப் பொறுத்து பாத்திரங்கள் தரப்பட்டது என் நினைவுக்கு வருகிறது. நான் ஒரு பத்திரிகையாளராக ஆனபோது, ஒரு முறை அவர்களை பின்பற்றி செல்ல, அந்த ஆடைகள் ஒரு பழைய பொருட்கள் விற்கும் பஜாருக்கு எடுத்து செல்லப்பட்டது. ஒவ்வொரு நகரத்திலும் இதுப்போன்ற பஜார்கள் இருக்கின்றன. இங்கே ஆடைகள் புதுப்பிக்கப்பட்டு, காலர்கள் உள்ளே திருப்பபட்டு, பாக்கெட்டுகளால் கறைகள் மறைக்கபட்டு, ஜரிகை மீண்டும் மெருகேற்றப்பட்டு, புதியது போன்று மாற்றப்படுகிறது. இவை அனைத்தும் பயன்படுத்த பட்ட பொருட்கள் விற்கும் சந்தைக்கு எடுத்து செல்லபட்டு அங்கே வேறு பிரிவு நுகர்வோருக்கு விற்கப்படுகிறது. எனவே, அடைகளை மறுசுழற்சி செய்யும் பழக்கம் நம்மிடம் பாரம்பரியமாக இருந்தது, ஆனால் இந்த டிஜிட்டல், ஆன்லைன் ஷாப்பிங் காலத்தில் நாம் அதை மறந்துவிட்டோம்.

ஒரு பசுமையான வாழ்க்கை முறைக்கு துணி துவைப்பதிலும் கவனம் தேவை. இப்போது பலர் உருவாக்கும் சுற்றுச்சூழலுக்கு உகந்த சோப்பினை பயன்படுத்த முயற்சி க்கவும். மேலும் நீங்கள் செயற்கை ஜவுளிகளை சலவை செய்கிறீர்கள் என்றால் மைக்ரோ மெஷ் பையைப் பயன்படுத்தவும். அந்த பை சலவை செய்யும் போது வெளியாகும் மைக்ரோ பிளாஸ்டிக்குகளை தண்ணீரில் கலக்கவிடாமல் தடுக்கும். கடலில் இருக்கும் மைக்ரோ பிளாஸ்டிக்களில் கிட்டத்தட்ட 35 சதவீதம் நாம் உடுத்தும் உடைகள் மற்றும் நாம் பயன்படுத்தும் துணியில் இருந்து உருவாகிறது என்று மதிப்பிடப்பட்டுள்ளது. துணிகள் மற்றும் வீட்டு உபகரணங்களுக்கும் ஒரு கதை இருக்கிறது, அதனை அடுத்த முறை பார்ப்போம்.

எழுத்தாளர் மூத்த இதழாளர் சுற்றுச்சூழல் பிரச்சனைகளைப்பற்றி எழுதிவருகிறார்.



# RI தெற்காசிய அலுவலகத்தின் செய்தி

### RF(I) பங்களிப்புக்கான கட்டாயத் தேவைகள்/வழிகாட்டுதல்கள்

- ஏப்ரல் 1, 2020ல் தொடங்கி, எந்தத் தொகையானாலும் சரி, 1961 வருமான வரிச்சட்டத்தின் 80G பிரிவின்கீழ் கொடையாளர் வரி விலக்கு கோர விரும்பினாலும் சரி, விரும்பாவிட்டாலும் சரி RF(I)க்கு இணையத்தில்/அதற்கு வெளியில் வழங்கப்படும் அனைத்துப் பங்களிப்புகளுக்கும் PAN வழங்குவது கட்டாயம்.
- பங்களிப்பு வரவு, தொடர்புடைய 80G ரசீதினைப் பணம் அனுப்பியவர் பெயரில்மட்டும்தான் உருவாக்க இயலும், அது கொடையாளர் RIல் பதிவு செய்த மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படும்.
- தனக்குச் சொந்தமான/குடும்பத்தால் இயக்கப்படுகிற நிறுவன/அறக்கட்டளைக் கணக்கிலிருந்து வழங்கப் படும் பங்களிப்புகளுக்கு நன்கொடையாளர்கள் அந்த அமைப்புடன் தன்னுடைய உறவைக் குறிப்பிடுகிற, இந்தப் பங்களிப்பை அவருடைய தனிப்பட்ட பங்களிப்பாகக் கருதலாம் என்று தெரிவிக்கிற பெரு நிறுவன/அறக்கட்டளைக் கடிதம் ஒன்றைப் பெரு நிறுவன/அறக்கட்டளைக் கடிதத்தலைப்பில் பெற்றுப் பகிர்ந்துகொள்ளவேண்டும் என்று கோரப்படுகிறது.

### சங்க அங்கீகாரங்கள்

2015–16ல் தொடங்கி, புதிய சங்க உறுப்பினர்கள் (இந்த ரோட்டரி ஆண்டின்போது சேர்ந்தவர்கள் அல்லது இன்னொரு சங்கத்திலிருந்து மாறியவர்கள்) சங்கப் பதாகைகளுக்கான பங்கேற்புத் தேவைகளில் சேர்க்கப்படுவதில்லை (100% பால் ஹாரிஸ் தோழமைப் பதாகை நீங்கலாக). அதே நேரம், புதிய உறுப்பினர்களுடைய பங்களிப்புகள் ஒவ்வோர் உறுப்பினருக்கான கணக்கீடுகளில் பயன்படுத்தப்படும்.

உறுப்பினர் எண்ணிக்கை மற்றும் கூடுதல் அல்லது மறு விநியோகம் செய்யப்பட்ட பங்களிப்புகளில் மாற்றங்களால் ரோட்டரி ஆண்டு முழுவதும் சங்க அறக்கட்டளைப் பதாகை அறிக்கையில் பட்டியலிடப் படும் பதாகை பெறுவோர் தகவல் மாறலாம். 30 ஜூன் அன்று ரோட்டரி ஆண்டு நிறைவடைந்தபிறகு, ரோட்டரி அறக்கட்டளை நிறைவுப் பதாகைச் சான்றிதழைச் செயல் முறைப்படுத்தும். முந்தைய ஆண்டில் பெறப்பட்ட சங்கப்பதாகைகள் இப்போதைய DGக்களுக்கு அக்டோபர் அல்லது நவம்பரில் அனுப்பப்படும். நீங்கள் rotarysupportcenterrotary.orgல் மாவட்ட அறக்கட்டளைப் பதாகை அறிக்கையைக் கோரலாம். சங்க/மாவட்டத் தலைவர்களுடைய என் ரோட்டரி உள்நுழைவின் வழியாகவும் இது கிடைக்கிறது.■

## RI பொருளாளர் (2022–23), RID வெங்கடேஷ்



*RIன் 2022–23க்கான பொருளாளராக RI இயக்குநர் A S வெங்கடேஷ் செயல்படுவார்; ஜெனிஃபர் ஜோன்ஸ் RI தலைவராகச் செயல்படுவார்.*

*RID நிக்கி ஸ்காட் (இங்கிலாந்து) துணைத் தலைவராகச் செயல்படுவார்; RID எலிசபெத் உசோவிக்ச் (மிசௌரி, USA) செயல் குழுத் தலைவராகச் செயல்படுவார்.*

### STATEMENT ABOUT OWNERSHIP

Statement about ownership and other particulars about *Rotary News* (Tamil) to be published in the first issue of every year after the last day of February

| | | |
|---|---|---|
| 1. Place of Publication | : | Chennai - 600 008 |
| 2. Periodicity of its publication | : | Monthly |
| 3. Printer's Name | : | P T Prabhakar |
| Nationality | : | Indian |
| Address | : | 15, Sivasami Street<br>Mylapore<br>Chennai 600 004 |
| 4. Publisher's Name | : | P T Prabhakar |
| Nationality | : | Indian |
| Address | : | 15, Sivasami Street<br>Mylapore<br>Chennai 600 004 |
| 5. Editor's Name | : | Rasheeda Bhagat |
| Nationality | : | Indian |
| Address | : | No. 25<br>Jayalakshmipuram<br>1st Street<br>Nungambakkam<br>Chennai - 600 034 |
| 6. Name and address of individual who owns the newspaper and partner or shareholders holding more than one percent of the total capital | : | Rotary News Trust<br>Dugar Towers,<br>3rd Floor<br>34, Marshalls Road<br>Egmore<br>Chennai - 600 008 |

I, P T Prabhakar, declare that the particulars given are true to the best of my knowledge and belief.

Chennai - 600 008 — sd/-
1st March, 2022 — P T Prabhakar

# மாற்றுத் திறனாளிகளுக்கு ஒரு நல்ல சமாரியர்

V முத்துகுமரன்

மாற்றுத் திறனாளிகளுடைய நலனுக்காகப் பணியாற்றும் இந்த ரோட்டரியனைப் பாருங்கள்; இவருடைய பணியால் ஊக்கம் பெற்ற இவருடைய சங்கம், RC தூத்துக்குடி, RID 3212, மாற்றுத் திறனாளி இணையர்களுக்குத் திருமணம் செய்துவைக்கிறது. புதிதாகத் திருமணமான இவர்கள் தங்களுடைய உடல் சார்ந்த வரம்புகளையும் தாண்டிக் கண்ணியமான வருவாயைப் பெறுவதற்கு என் சங்கம் முழு ஆதரவு அளிக்கிறது. நாங்கள் 100 மாற்றுத் திறனாளி இணையர்களுடைய திருமணங்களை ஆதரிக்கத் தயாராக உள்ளோம், என்கிறார் சங்கத் தலைவர் G P ஜோ பிரகாஷ்.

ஜனவரி 24 அன்று, இந்தச் சங்கம் D ராபர்ட் மற்றும் P ஜெயா ஆகியோருக்குத் திருமணம் செய்து வைத்தது, பின்னர் ஜனவரி 27 அன்று A விஜயராஜா மற்றும் M கனகவல்லி ஆகியோர் மணந்துகொண்டார்கள். இணையர்களுடைய வீட்டுக்குத் தேவையான எல்லாப் பொருட்களையும் சங்கம் வழங்குகிறது.



*RC தூத்துகுடி தலைவர் ஜோ பிரகாஷ் (வலது), பொருளாளர் டேவிட் ராஜா மற்றும் செயலாளர் ஆனந்த் கணேஷ், விஜயராஜா மற்றும் கனகவல்லி திருமணத்தில்.*

### காட்சிப் பொருள் கூடம்

மாற்றுத் திறனாளிகள் தங்களுடைய நிகழ்ச்சிகளை நடத்துவதற்கும் வாரந்தோறும் சந்திப்பதற்கும் தன்னுடைய ரோட்டரி ரோச் விக்டோரியா கூடத்தை இலவசமாக வழங்குகிறது இந்தச் சங்கம். 1946ல், ஜான் மோத்தா என்ற மிகப் பெரிய கொடையாளருடைய மிகப் பெரிய பங்களிப்பினால் கட்டப்பட்ட இந்தக் கூடத்துக்கு PDG JLP ரோச் விக்டோரியாவின் பெயர் சூட்டப் பட்டுள்ளது. சமீபத்தில் ரூ.12 லட்சம் செலவில் மூன்றாவது முறையாகப் புதுப்பிக்கப்பட்ட இந்தக் கூடத்தில் சங்கக் கூட்டங்கள், நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன; அத்துடன், சமூக நிகழ்ச்சிகள், திருமணங்கள் மற்றும் ஆண்டு விழாக்களுக்கு நாங்கள் இதை ரூ.24,000 வாடகைக்கு விடுகிறோம், என்கிறார் பிரகாஷ்.

மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிந்த குடும்பங்களுக்கான திட்டங்களைத் திட்டமிட்டு நடத்துவதற்குத் துரைப் பாண்டி என்ற சமூகச் செயல்பாட்டாளர் இந்தச் சங்கத்துக்கு உதவுகிறார். மகளிர் தினத்தைக் கொண்டாடுவதற்காக இவர் ஒரு மிகப் பெரிய ஒரு நாள் நிகழ்ச்சியை நடத்துகிறார், இதில் மூன்றாம் பாலினர், மாற்றுத் திறனாளிப் பெண்கள், சிறப்புக் குழந்தைகளின் தாய்மார்கள் நாள் முழுவதும் பங்கு பெறுவார்கள். ஐம்பது மாற்றுத் திறனாளிப் பெண்கள், மூன்றாம் பாலினர், முன்களக் கொரோனா போராளிகள் (பெண்கள்) இதில் பெருமைப்படுத்தப்படுவார்கள்'' என்கிறார் பாண்டி.

இந்தச் சங்கத்தின் உறுப்பினர்கள் "லிட்டில் சிஸ்டர்ஸ் ஆஃப் தி புவர்'' என்ற முதியோர் இல்லத்துக்கும், அடைக்கலபுரம் கிராமத்தில் உள்ள புனித ஜோசஃப் ஆதர வற்றோர் இல்லத்துக்கும் சென்று மாதாந்திரப் மளிகை பொருட்களை வழங்குகிறார்கள், அவர்களுடைய செலவுகளுக்குப் பணத்தை நன்கொடையாக அளிக்கிறார்கள். அகில இந்திய வணிகம் மற்றும் தொழில்துறைக் கூட்டமைப்பின் தூத்துக்குடி பிரிவு, தூத்துக்குடி SIPCOT தொழில்கள் அமைப்பு, உள்ளூர் ஜிம்கானா சங்கம், மாவட்டச் சதுரங்க அமைப்பு போன்ற வணிக விளையாட்டு அமைப்புகளின் தலைவராகவும் பிரகாஷ் இயங்கி வருகிறார். வணிகக் கூட்டமைப்பில் உள்ள பணித் தளத்தின் வழியாக, எரிபொருள் சில்லறை விற்பனை நிலையங்கள் போன்ற பல தொழில் களுக்காகவும் பிற ஒப்பந்தப் பணிகளுக்காகவும் நாங்கள் மாற்றுத் திறனாளிகளை வேலைக்கு அமர்த்துகிறோம், என்கிறார் அவர்.

இந்த ஆண்டு இச்சங்கம் ப்ளாட்டினம் விழா (75 வருடங்கள்) கொண்டாடுகிறது.■

# அழுத்தத்தைக் கையாளுதல்

ஷீலா நம்பியார்

உங்கள் இதயம் விரைவாகத் துடிக்கிறது, சற்று குமட்டுவதுபோல், தலை மிதப்பதுபோல் உணர்கிறீர்கள், விரைவாக மூச்சுவிடுகிறீர்கள், "இதற்கு நான் ஒப்புக்கொண்டிருக்கவே கூடாது" என்று நினைக்கிறீர்கள்...

இந்த அனுபவங்கள் உங்கள் வாழ்க்கையில் வந்ததுண்டா? இதுபோன்ற பதற்ற மற்றும் அழுத்த அறிகுறிகளை உண்டாக்கக்கூடிய பல கணங்கள் நம் அன்றாட வாழ்க்கையின் பகுதிகளாகும்.

அழுத்தம் குறிப்பிட்ட உடல் எதிர்வினைகளைத் தூண்டு கிறது; அழுத்தமான நிகழ்ச்சி/தூண்டலின்போது கார்ட்டிசால், அட்ரீனலின், நொரெபைன்ஃப்ரைன் போன்ற ஹார்மோன்கள் வெளிவிடப் படுகின்றன. ஒருவேளை, அழுத்தம் நெடுநாட்களுக்குத் தீர்க்கப் படாமல் தொடர்ந்தால், இந்த ஹார்மோன் மாற்றங்களும் அதனால் உடலில் ஏற்படுகிற உடல் சார்ந்த எதிர்வினைகளும் சேர்ந்து வயிற்றுப் புண்கள், உயர் ரத்த அழுத்தம், ஆர்டெரியோஸ்க்லெரோசிஸ், மூட்டு வீக்கம், மனச் சோர்வு, தன்னுடல் எதிர்ப்பு ஆற்றல் குறைபாடுகள், ஒவ்வாமை எதிர்வினைகளை உண்டாக்கலாம்.

ஒருவருக்கு அழுத்தத்தை உண்டாக்குகிற விஷயம் இன்னொரு வருக்கு அப்படி இல்லாமலிருக்கலாம். அழுத்தம் இல்லாத வாழ்க்கை ஏதும் இல்லை. எல்லாரும் வாழ்க்கையில் வெவ்வேறு அளவு அழுத்தம் நிறைந்த அனுபவங்களைச் சந்திப்போம். உண்மையில், சரியான அளவு அழுத்தம் வளர்ச்சிக்கு உதவலாம், உங்களுக்குச் சவால் விட்டு உங்களைத் துடிப் புடனும் கவனத்துடனும் வைத் திருக்கலாம். சிலரால் தங்களுடைய அழுத்தத்திலிருந்து விடுபட்டு வளர இயலுகிறது, இதை அதிர்ச்சிக்குப் பிந்தைய வளர்ச்சி என்கிறார்கள். குறுகிய காலத்தில், அழுத்த ஹார்மோன்கள் நம்முடைய நோய் எதிர்ப்பு ஆற்றலை, ஊக்கத்தை, அறிவாற்றலை, கவனத்தை, தூண்டுதலை மேம்படுத்தலாம். ஆனால், நாம் தொடர்ந்த அழுத்தத்தைச் சந்திக்கும் போதுதான் பிரச்சனைகள் தொடங்குகின்றன. குறிப்பாக, அவை பின்னணியில் தீர்க்கப்படாவிட்டால் இன்னும் தொல்லை. பல நேரங்களில் மோசமான உடல்நிலை, ஏழைமை, அதிர்ச்சி, மரணம் போன்றவை நம் கட்டுப்பாட்டில் இருப்பதில்லை, இவை மிகப் பெரிய அழுத்தத்தை உண்டாக்குகின்றன.

ஆனால், நம்முடைய நவீன வாழ்க்கைகளில் அழுத்தத்தை உருவாக்கும் பல விஷயங்கள், சமூகம் கட்டமைக்கப்பட்டுள்ள வழி, அதற்கு நம் எதிர்வினையால் உருவாக்கப்படுகின்றன. எடுத்துக் காட்டாக, வெற்றியை நாம் வரையறுக்கும் விதம் (பணம், பெயர், புகழ்), வெல்வதற்கான சமூக அழுத்தம், நுகர்வியம், மேலும் பொருட்கள் வேண்டும் என்கிற தேவை, பிறரை மகிழ்விக்கவேண்டும் என்ற எதிர்பார்ப்பு, தொடர்ந்து பிறருடன் நம்மை ஒப்பிட்டுக் கொள்வது, போதாது என்கிற உணர்வு... இவையும் இதுபோல் நம்மீது சுமத்தப்படுகிற வேறு பல உணரப்படும் தேவைகளும் தேவையில்லாத அழுத்தங்களைத் தருகின்றன, இவை நம்மால் உருவாக்கப்பட்டவைதான்.

அழுத்தத்தைக் கையாள்வதற்கு முதலில் அதை அடையாளம் காணவேண்டும், நல்ல அழுத்தம் எது, தேவையில்லாத, நம் கட்டுப்பாட்டில் இல்லாத அழுத்தம் எது என்று பிரித்துப் பார்க்கவேண்டும். ஒரு விஷயத்தை இத்தனை மணிக்குள் செய்யவேண்டியிருக்கும்போது, முக்கியமான கூட்டத்துக்கு அல்லது வழங்கலுக்கு முன்பாக நீங்கள் உணரும் அழுத்தம் இன்னும் மேம்பட்ட செயல்திறனைத் தூண்டும் விசையாக இருக்கலாம். வலி மிக்க ஒரு நிகழ்ச்சியிலிருந்து



வருகிற அழுத்தத்தைக்கூட மாற்றம், வளர்ச்சிக்கான ஒரு தூண்டுதலாக ஏற்றுக்கொள்ளலாம்.

அடுத்து, உங்கள் உணர்ச்சியைத் துல்லியமாக, தெளிவாக வெளிப்படுத்தவேண்டும். அழுத்தம் என்பது மிகப் பொதுவான, தெளிவற்ற சொல், பல நேரங்களில் இது தவறாகப் பயன்படுத்தப்படுகிறது. “எனக்கு அலுவலகத்தில் அழுத்தம் உள்ளது” என்று சொல்லாமல் அதைப்பற்றி ஆழமாக யோசியுங்கள், அப்போது நீங்கள் அதை “நான் அலுவலகத்தில் ஏமாற்றத்தை, நிறைவின்மையைச் சந்திக்கிறேன்” என்று மாற்றிச் சொல்வீர்கள். உங்கள் உணர்வுகளை இப்படிக் கவனமாக வெளிப்படுத்தினால், தொலைநோக்கில் உண்மையான பிரச்சனையை இன்னும் நன்றாகக் கையாள்வதற்கு அது உதவலாம்.

உங்கள் மூச்சு, உங்கள் நரம்பு அமைப்பைக் கட்டுப்படுத்துகிறது. சரியான முறையில் மூச்சுவிடுதல் துணை-இரக்கமுள்ள நரம்பு அமைப்பைத் தூண்ட உதவும், அது உங்களை அமைதியாக்கும்.

இந்த எதிர்வினை, உங்கள் தசைகளைத் தளரச்செய்யும்படியும் இதயத்தை மெதுவாகத் துடிக்கச் செய்யும்படியும் மூளைக்கு ரத்த ஓட்டத்தை மிகுதியாக்கும்படியும் உங்கள் மூளைக்குச் செய்தி அனுப்புகிற வேதிப்பொருட்களை வெளிவிடும்படி உங்கள் உடலை ஊக்குவிக்கும் உங்கள் தனிப்பட்ட திறன் என்று வரையறுக்கப்படுகிறது. குறிப்பாக, உயர் ரத்த அழுத்தம் கொண்ட மக்களுக்கு இதனால் நல்ல பலன் உண்டு என்று 1960களிலும் 1970களிலும் நடைபெற்ற ஆய்வுகள் காண்பித்தன. தொடர்ந்து தியானம் செய்கிறவர்கள் மற்றவர்களைவிடக் குறைந்த அழுத்த நிலைகளை, மேம்பட்ட நலனை, ஓய்வாக இருக்கும்போது மற்றவர்களைவிடக் குறைந்த இதயத் துடிப்பைக் காண்கிறார்கள்.

அழுத்தத்தை உடல்சார்ந்த எதிர்வினையைக் கட்டுப்படுத்துவதற்கு மிக விரைவான வழி, மூச்சுவிடல் பயிற்சி. நான்கு எளிய மூச்சுவிடல் உத்திகள் இதோ:

- ஆழமாக மூச்சை உள்ளிழுங்கள் பிறகு வெளியில் விடுங்கள் -மூக்கின் வழியாக ஆழமாக மூச்சை உள்ளிழுங்கள், மூடிய உதடுகளின் வழியாக வெளியில் விடுங்கள். இதைப் பல முறை திரும்பத் திரும்பச் செய்யுங்கள்.
- மாற்று மூக்குத் துளை மூச்சு விடல் - யோகாசனத்தில் பின்பற்றப்படுகிற நாடி சோதன் என்ற இந்த முறையில் நீங்கள் உங்களுடைய மோதிர விரல், கட்டை விரலைப் பயன்படுத்தி மூக்குத் துளைகளை மாற்றி மாற்றி மூடவேண்டும், இடப்பக்கம் மூச்சை உள்ளிழுத்து விட்டு, அதை மூடிக்கொண்டு வலப்பக்கம் மூச்சை வெளியில் விடவேண்டும். அடுத்து, இதை மாற்றிச் செய்யவேண்டும். அதாவது, வலப்பக்கம் மூச்சை உள்ளிழுத்து, இடப்பக்கம் வெளியில் விடவேண்டும்.
- இரட்டை உள்ளிழுத்தல் அல்லது உடல் சார்ந்த பெருமூச்சு - நீங்கள் இரண்டுமுறை விரைவாக மூச்சை உள்ளிழுக்கவேண்டும் (நடுவில் மூச்சை வெளியில் விடக்கூடாது), பிறகு, ஒருமுறை நீளமாக மூச்சை வெளியில் விடவேண்டும்.
- டாக்டர் ஆன்ட்ரூ வெய்ல் அவர்களால் புகழ் பெற்ற மூச்சை நீளமாக வெளியில் விடுதல்கள் அல்லது 4–7–8 மூச்சுவிடல் - 4 வரை எண்ணியபடி மூச்சை உள்ளிழுங்கள், 7 வரை எண்ணியபடி மூச்சை வைத்திருங்கள், 8 வரை எண்ணியபடி மூச்சை வெளியில் விடுங்கள்.

ஸ்டான்ஃபோர்ட் மருத்துவப் பள்ளியைச் சேர்ந்த நரம்பியல் உயிரியலாளர் டாக்டர் ஆன்ட்ரூ ஹூபெர்மன் இந்த உத்திகளை “தூக்கம் அல்லாத ஆழமான ஓய்வு” என அழைக்கிறார், இவை மூளைக்கு ஆற்றல் வழங்குவது அறிவியல் அடிப்படையில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

- வழக்கமான உடற்பயிற்சி - எல்லா வகை உடற்பயிற்சிகளும் நீண்ட நாள் நோக்கில் அழுத்தத்தை ஒழுங்குபடுத்த உதவும். இதைத் தொடர்ந்து செய்வது முக்கியம்.
- தொடர்ந்த, நல்ல தரமான தூக்கம்.. நல்ல மன நலன் மற்றும் அழுத்தத்தைக் கையாள்வதற்கு 7–8 மணிநேரம் நல்ல தரமான தூக்கம் முக்கியம்.
- உங்கள் அழுத்த மனநிலையை மாற்றுதல். அழுத்தத்தை வளர்ச்சிக்கான ஒரு வாய்ப்பாகப் பாருங்கள். அதைச் சவால் விடும் படிக்கல்லாகப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்.
- மேம்பட்ட சமூக இணைந்திருத்தல். வாழ்க்கையில் உங்களை ஆதரிக்கும் மற்ற மக்களுடன் நீங்கள் நல்ல இணைப்புகளைக் கொண்டிருந்தால், அழுத்தம் குறைகிறது, அதைக் கையாள்வது இன்னும் சாத்தியமாகிறது என்று ஆராய்ச்சி சொல்கிறது.

வாழ்க்கையில் அழுத்தம் எப்போதும் இருக்கும். ஆனால், அதன் உடனடித் தாக்கங்களுக்கும் நீண்ட நாள் விளைவுகளுக்கும் நீங்கள் எப்படி எதிர்வினையாற்றுகிறீர்கள் என்பது உங்கள் கையில் தான் உள்ளது. அழுத்தத்தின் உடனடி விளைவுகளைக் கட்டுப்படுத்த உங்கள் மூச்சைப் பயன்படுத்தினால், அழுத்த ஹார்மோன்களால் உருவாக்கப்படும் மகிழ்ச்சி இல்லாத அறிகுறிகளை வெல்லலாம். உடற்பயிற்சி, தியானம், மூச்சு விடல் மற்றும் தூக்கம் போன்ற அன்றாட ஒழுங்குகளை உண்டாக்கிக் கொள்வது, துணை-இரக்கமுள்ள நரம்பு அமைப்பைச் சிறப்பாக்க உதவும், அழுத்தத்துக்கு மேம்பட்ட எதிர்வினை ஆற்ற உதவும். ஆனால், அழுத்தத்தைக் கையாள்வதன் மிக முக்கியமான அம்சம், உங்கள் அழுத்த மனநிலைதான். அதனால் உண்மையில் அதிர்ச்சிக்குப் பிந்தைய வளர்ச்சியை உருவாக்க இயலும்.

கட்டுரையாளர் ஒரு
வாழ்க்கை முறை மருத்துவர்
sheela.nambiar@gmail.com
www.drsheelanambiar.com




## Rotary at a glance

| | |
|---|---|
| Rotary clubs : | 36,754 |
| Rotaract clubs : | 10,934 |
| Interact clubs : | 17,067 |
| RCCs : | 12,061 |
| Rotary members : | 1,191,822 |
| Rotaract members : | 239,329 |
| Interact members : | 392,541 |

*As on February 22, 2022*

## Membership Summary

As on February 1, 2022

| RI District | Rotary Clubs | No of Rotarians | Women Rotarians (%) | Rotaract Clubs | Interact Clubs | RCC |
|---|---|---|---|---|---|---|
| 2981 | 134 | 6,110 | 7.53 | 48 | 52 | 238 |
| 2982 | 76 | 3,447 | 7.19 | 47 | 98 | 73 |
| 3000 | 131 | 5,373 | 9.32 | 94 | 281 | 214 |
| 3011 | 116 | 4,489 | 26.38 | 73 | 118 | 36 |
| 3012 | 148 | 3,959 | 25.18 | 65 | 79 | 61 |
| 3020 | 78 | 4,735 | 7.29 | 32 | 166 | 350 |
| 3030 | 96 | 5,172 | 15.39 | 118 | 251 | 361 |
| 3040 | 99 | 2,427 | 13.76 | 55 | 81 | 196 |
| 3053 | 69 | 2,781 | 18.55 | 34 | 49 | 118 |
| 3054 | 166 | 6,938 | 20.60 | 104 | 179 | 563 |
| 3060 | 104 | 5,068 | 15.17 | 64 | 71 | 149 |
| 3070 | 119 | 3,196 | 15.24 | 47 | 37 | 59 |
| 3080 | 97 | 4,152 | 13.27 | 137 | 159 | 115 |
| 3090 | 90 | 2,273 | 5.63 | 42 | 73 | 123 |
| 3100 | 98 | 2,198 | 10.05 | 13 | 26 | 146 |
| 3110 | 139 | 3,771 | 11.93 | 14 | 17 | 106 |
| 3120 | 86 | 3,561 | 16.43 | 63 | 34 | 55 |
| 3131 | 139 | 5,493 | 23.79 | 111 | 235 | 140 |
| 3132 | 87 | 3,552 | 10.87 | 32 | 125 | 166 |
| 3141 | 113 | 6,263 | 27.06 | 141 | 186 | 102 |
| 3142 | 98 | 3,631 | 21.12 | 79 | 147 | 81 |
| 3150 | 110 | 4,145 | 13.15 | 82 | 143 | 118 |
| 3160 | 77 | 2,574 | 8.78 | 29 | 20 | 82 |
| 3170 | 139 | 6,292 | 15.02 | 85 | 243 | 169 |
| 3181 | 86 | 3,451 | 8.81 | 35 | 196 | 115 |
| 3182 | 85 | 3,444 | 9.64 | 42 | 127 | 104 |
| 3190 | 160 | 6,662 | 18.49 | 168 | 207 | 71 |
| 3201 | 154 | 6,044 | 9.53 | 116 | 96 | 71 |
| 3203 | 92 | 4,719 | 7.80 | 73 | 233 | 36 |
| 3204 | 61 | 2,078 | 6.64 | 21 | 27 | 13 |
| 3211 | 151 | 4,976 | 8.40 | 7 | 24 | 133 |
| 3212 | 130 | 4,855 | 11.51 | 76 | 204 | 153 |
| 3231 | 92 | 3,481 | 8.04 | 29 | 81 | 419 |
| 3232 | 162 | 7,803 | 18.58 | 120 | 215 | 100 |
| 3240 | 101 | 3,512 | 15.86 | 62 | 405 | 218 |
| 3250 | 104 | 3,900 | 20.41 | 63 | 73 | 185 |
| 3261 | 91 | 3,158 | 17.16 | 15 | 24 | 44 |
| 3262 | 124 | 4,105 | 14.30 | 71 | 82 | 118 |
| 3291 | 168 | 4,180 | 23.30 | 133 | 97 | 652 |
| **India Total** | **4,370** | **167,968** | | **2,640** | **4,961** | **6,253** |
| 3220 | 72 | 2,232 | 15.68 | 88 | 133 | 75 |
| 3271 | 114 | 2,246 | 17.94 | 97 | 185 | 25 |
| 3272 | 157 | 1,831 | 17.31 | 70 | 22 | 47 |
| 3281 | 303 | 7,301 | 17.60 | 273 | 150 | 209 |
| 3282 | 178 | 3,633 | 11.09 | 199 | 47 | 47 |
| 3292 | 152 | 5,962 | 17.28 | 171 | 132 | 128 |
| **S Asia Total** | **5,346** | **191,173** | | **3,538** | **5,630** | **6,784** |

*Source: RI South Asia Office*

# District Wise TRF Contributions as on January 2022

(in US Dollars)

| District Number | Annual Fund | PolioPlus | Endowment Fund | Other Funds | Total Contributions | EREY Donors (in numbers) | EREY % |
|---|---|---|---|---|---|---|---|
| **India** | | | | | | | |
| 2981 | 97,027 | 1,247 | 15,000 | 183,814 | 297,088 | 160 | 3.0 |
| 2982 | 33,195 | 5,633 | 1,500 | 3,449 | 43,777 | 149 | 4.6 |
| 3000 | 4,121 | 638 | 0 | 38,402 | 43,160 | 15 | 0.3 |
| 3011 | 9,452 | 6,428 | 0 | 151,796 | 167,676 | 22 | 0.5 |
| 3012 | 20,530 | 3,811 | 50,041 | 323,182 | 397,564 | 37 | 1.0 |
| 3020 | 63,102 | 8,868 | 30,596 | 4,620 | 107,186 | 177 | 4.2 |
| 3030 | 31,570 | 721 | 63,185 | 15,704 | 111,179 | 76 | 1.6 |
| 3040 | 34,258 | 270 | 0 | 21,361 | 55,890 | 8 | 0.3 |
| 3053 | 3,250 | 1,811 | 27 | 0 | 5,088 | 6 | 0.2 |
| 3054 | 4,814 | 2,766 | 0 | 205,254 | 212,834 | 17 | 0.2 |
| 3060 | 52,423 | 1,442 | 0 | 86,419 | 140,284 | 808 | 16.8 |
| 3070 | 20,665 | 27 | 0 | 27,601 | 48,293 | 92 | 3.0 |
| 3080 | 22,864 | 5,804 | 3,889 | 9,760 | 42,317 | 153 | 4.8 |
| 3090 | 25,347 | 0 | 29,000 | 0 | 54,347 | 129 | 6.2 |
| 3100 | 21,838 | 100 | 0 | 2,537 | 24,475 | 72 | 3.3 |
| 3110 | 20,551 | 355 | 1,014 | 0 | 21,919 | 85 | 2.4 |
| 3120 | 59,189 | 1,000 | 0 | 0 | 60,189 | 143 | 4.2 |
| 3131 | 337,264 | 31,471 | 27,000 | 398,882 | 794,617 | 1,689 | 36.0 |
| 3132 | 25,116 | 1,978 | 5,000 | 11,400 | 43,495 | 47 | 1.4 |
| 3141 | 271,999 | 4,700 | 89,865 | 630,764 | 997,328 | 512 | 8.7 |
| 3142 | 263,593 | 3,481 | 8,145 | 35,839 | 311,058 | 617 | 18.2 |
| 3150 | 64,621 | 9,411 | 91,000 | 88,588 | 253,621 | 577 | 14.6 |
| 3160 | 91,558 | 4,423 | 17,264 | 0 | 113,244 | 40 | 1.7 |
| 3170 | 46,518 | 10,926 | 1,710 | 31,901 | 91,055 | 242 | 4.1 |
| 3181 | 27,388 | 4,639 | 203 | 0 | 32,229 | 154 | 4.7 |
| 3182 | 32,285 | 8,469 | 0 | 15,274 | 56,028 | 104 | 3.3 |
| 3190 | 163,797 | 17,227 | 31,762 | 36,518 | 249,305 | 590 | 9.6 |
| 3201 | 72,934 | 58,672 | 0 | 239,093 | 370,699 | 348 | 6.1 |
| 3203 | 27,275 | 16,438 | 7,086 | 197,371 | 248,170 | 163 | 4.0 |
| 3204 | 20,967 | 4,623 | 0 | 1,036 | 26,626 | 28 | 1.4 |
| 3211 | 25,337 | 657 | 0 | 17,858 | 43,852 | 47 | 1.0 |
| 3212 | 25,565 | 1,899 | 1,036 | 4,561 | 33,061 | 54 | 1.1 |
| 3231 | 15,114 | 9,620 | 0 | 2,851 | 27,586 | 143 | 4.2 |
| 3232 | 59,748 | 61,931 | 99,155 | 470,201 | 691,035 | 115 | 1.6 |
| 3240 | 83,459 | 12,292 | 0 | 75,237 | 170,988 | 309 | 9.5 |
| 3250 | 15,018 | 2,992 | 1,036 | 19,842 | 38,888 | 210 | 5.8 |
| 3261 | 5,683 | 983 | 300 | 146,447 | 153,413 | 14 | 0.5 |
| 3262 | 6,667 | 1,954 | 0 | 0 | 8,621 | 23 | 0.6 |
| 3291 | 81,182 | 2,137 | 11,171 | 16,584 | 111,074 | 216 | 5.7 |
| **India Total** | **2,287,284** | **311,843** | **585,982** | **3,514,147** | **6,699,255** | **8,391** | **5.4** |
| 3220 **Sri Lanka** | 40,478 | 6,661 | 1,510 | 1,000 | 49,649 | 119 | 5.2 |
| 3271 **Pakistan** | 6,240 | 3,431 | 0 | 17,755 | 27,425 | 9 | 0.5 |
| 3272 **Pakistan** | 16,732 | 11,133 | 0 | 2,117 | 29,982 | 14 | 0.8 |
| 3281 **Bangladesh** | 37,161 | 6,150 | 17,000 | 207,392 | 267,703 | 110 | 1.4 |
| 3282 **Bangladesh** | 27,475 | 9,099 | 1,000 | 29,943 | 67,516 | 76 | 2.0 |
| 3292 **Nepal** | 88,094 | 10,424 | 0 | 100,611 | 199,129 | 616 | 10.6 |
| **South Asia Total** | **2,503,464** | **358,740** | **605,492** | **3,872,965** | **7,340,660** | **9,335** | **5.2** |

Annual Fund (AF) includes SHARE, Areas of Focus, World Fund and Disaster Response.

**Source:** RI South Asia Office

Wordsworld

# In the end, it's always love



**Sandhya Rao**

When more than half the boys in a PG Business Communication class choose the romance genre for a reading-related assignment, something's on the happen.

We relate to these stories, said one young man. I feel like he's telling my story, said another. Easy read, said a third. But there are also layers, clarified a fourth, it's not so simple. And it flows with feelings, said a young woman. Listen, I love romance, said my friend, my age. Unabashedly. And another friend, my age, a feminist and women's studies professor who has written several academic books that escape my comprehension entirely, has read practically every single Mills&Boon in Raviraj Lending Library, T Nagar, when we were in college. And recently, a highly erudite fellow book clubber confessed to having a soft-soft spot for romantic novels. In her words: 'Not many people can reconcile to the fact that people can read serious creative stuff along with historical romance brain candy.'




At my students' age I was more of an Edgar Wallace, Agatha Christie, Georgette Heyer, Zane Grey, Lobsang Rampa fan. Chicklit has never been my thing and I only read one Chetan Bhagat out of curiosity (although he's justifiably popular and has expanded his repertoire considerably). I find it hard to plough through lovey-dovey yarns despite poring over my mother's copies of *Women's Weekly*'s short stories at age 11–12. I have not felt the urge to dip into *Fifty Shades of Grey* by E L James, but in my defence, I have read, with interest in college, *Lolita* by Vladimir Nabokov as also *Lady Chatterley's Lover* by D H Lawrence.

Given all this, you will understand my surprise at my students' choices. However, what this communicated was that young people today feel a great need to be loved and to love, to feel wanted and needed and valued. It's another matter that for many, this was the first book in any language they were reading — and that, for a bookaholic like myself, is puzzling in itself. This month's booklist, then, is a tribute to my students, especially to those who may — hopefully just may — have come down with a case of readingitis, however mild.




Andaleeb Wajid was my first choice. I had been fascinated by the name, Andaleeb, when I first saw her short stories in the *Deccan Herald* many years ago. (The name means nightingale, apparently.) Then, a few years ago, I chanced upon *More Than Just Biryani*, and enjoyed it. This Bangalore-based writer has more than 25 books to her credit, covering many genres. Her favourite, she's said in an interview, is romance.

The two I picked were *Twenty-nine Going on Thirty* and *All Drama No Queen*, because they are connected — except that I read them in the wrong order because they were delivered that way! Priya stars in the first one, Fatima in the second. While they are primarily romances, there's some intrigue going on as well, apart from a weaving in of other complicated relationships, not all to do with love-shove. Andaleeb Wajid writes lucidly and is clearly in touch with the world as we know it today. Tragically, she lost her husband and mother-in-law to the corona virus last year. Writing for *Scroll.in* about how writing is helping her through these dark times, she

Young people today feel a great need to be loved and to love, to feel wanted and needed and valued.

concludes: 'As I scribble away in my notebook to plan the next book, I often look at my phone. The lock screen has a photo of my husband: a screenshot I took from a video of him driving, where he kept looking at me and making funny faces. I look at the photo a hundred times a day. Sometimes, I cry. Sometimes, I wonder why this happened. I rail at the unfairness of it all. And then, I get back to work.'

Readers may have seen the film, *The Zoya Factor*, featuring the delectable Dulquer Salman. Well, it's based on a book by Anuja Chauhan, widely regarded as being among the best writers of popular fiction in India today (move over, whoever!). Her books are well researched, racy, pacy, and her characters are, well, characters alright! In fact, it would seem that all her novels are movie material. She is often described as one of the best writers of chicklit, to which an entry in Wikipedia claims she responds with: 'Chicks are small, brainless, powerless creatures, bred to be eaten. I'm not a chick and I don't write for chicks.'




Among my favourite books is her *Battle for Bittora*, a novel that authentically explores the dynamics of elections. Not surprising, considering that the Congress leader of long standing, Margaret Alva, is her mother-in-law. Anuja Chauhan writes fearlessly and vigorously, all the drama, even melodrama, in her writing never pushing the romance into the shadows. For this month's column, I read *The Zoya Factor* (far more intriguing than the film) and *Baaz* (totally gripping). What made *Baaz* even more fascinating was that the main action is set against the backdrop of the creation of Bangladesh in 1971. Coincidentally, I've been watching *Jo Bicchar Gaye*, a Pakistani serial about what they refer to as 'the fall of Dhaka', told from the (West) Pakistani perspective. Seeing something from different points of view is an education, always interesting, always insightful.




My friend who loves romance unabashedly pushed me to read Sonali Dev. This writer is a Jane Austen fan, so her books kind of pay homage to that writer. Some time ago, there was something called the Austen Project in which some of Jane Austen's most famous novels were re-imagined by modern writers. These included *Sense and Sensibility* by Joanna Trollope, *Northanger Abbey* by Val McDermid and *Emma* by Alexander McCall Smith. I must admit I was not a fan of this project, and took my friend's recco with some reservation. Sonali Dev's list of published books is long, so I went with the first of a series about the Rajes, an immigrant family living in San Francisco: *Pride, Prejudice and Other Flavours.*

Once I started, I couldn't put it down! I loved it and can't wait to read the next books in the series, as well as some of her other books. The plot is engaging, the style is riveting, the characters are well put together, and best of all, the mileu is multicultural. The description on the back of the book says Sonali Dev 'writes Bollywood-style love stories that let her explore issues faced by women around the world while still indulging her faith in happily-ever-afters'. In PPOF, the mom character is a former Bollywood actor. For Austen fans, here are the names of the books in this series that follow: *Recipe for Persuasion*, *Incense and Sensibility*, *The Emma Project*… !

Of course, these are just three names in a long and growing list of serious writers of romance. Which only goes to prove that in the final analysis, it doesn't matter in whom we trust, or whether we cover our heads or not. We all want love. Romance, yes, but also the warm feeling that comes from feeling safe and secure and wanted. It comes from our world of family, friends and other animals, and all that we experience with them in all the things we do.

*The columnist is a children's writer and senior journalist*

## RC பாண்டிச்சேரி வொயிட் டவுன் — RID 2981



பூத்துரை பஞ்சாயத்து பள்ளியில் 130 மாணவர்களுக்கு நோட்டுப் புத்தகங்கள், எழுது பொருட்கள் வழங்கப்பட்டன.

## RC தில்லி சவுத் சென்ட்ரல் — RID 3011



பிறந்த குழந்தைகளுடைய இதயத் துடிப்பைச் பரிசோதிக்க 15 ஃபெடல் டாப்ளர் இயந்திரங்களை சஃப்தர்ஜங் மருத்துவமனைக்குக் அளித்தார் சங்கத் தலைவர் ரஜ்னீஷ் மிட்டல்.

## RC விழுப்புரம் சென்ட்ரல் — RID 2982



இந்தச் சங்கமும் RC விழுப்புரமும் இணைந்து போக்குவரத்து விழிப்புணர்வு பேரணியை நடத்தின. இது ஏழு RI மாவட்டங்களுக்கு 2,500 கிமீ சென்று செய்தி பரப்பியது.

## RC பில்குவா சிட்டி — RID 3012




மாற்றுத் திறனாளிகளுக்கு மூன்று சக்கர வண்டிகள் வழங்கப் பட்டன. பல ஆண்டுகளாக இந்தச் சங்கம் இதுபோன்ற கொடைகளை வழங்கி வருகிறது.

## RC மணவை க்வீன்ஸ் — RID 3000



Rtnகள் நீலாவதி கோபால கிருஷ்ணன், மீனா சுப்பையா சங்கத்தின் ஒரு தையல் பயிற்சி மையத்தைத் தொடங்கினர்.

## RC வைசாக் எலைட் — RID 3020



இந்தச் சங்கம் நடத்திய மிகப் பெரிய ரத்த தான முகாமில் ரோட்டரி ரத்த வங்கி 170 யூனிட் ரத்தத்தைத் திரட்டியது.

# செய்திகள்

## RC காஷ்மீர் — RID 3070



பண்டிபோரா ரோட்டரி ஆஷா கிரண் மையத்தில் உள்ள குழந்தைகளுக்குப் பள்ளிப் பைகள், எழுதுபொருட்கள் வழங்கப்பட்டன.

## RC குஷிநகர் — RID 3120

கண்காட்சிக்கு வந்த மக்களுக்கு இந்தச் சங்கம் 15,000 முகமூடிகளை வழங்கியது. காவல்துறை அலுவலர் பியுஷ்காந்த் ராய் இந்தத் திட்டத்தைத் தொடங்கிவைத்தார்.



## RC குருக்ஷேத்ரா — RID 3080



நலிந்த குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் பள்ளி சென்று வருவதற்கு மிதிவண்டிகள் வழங்கப்பட்டன.

## RC புணே கார்வேநகர் — RID 3131

தூரக் கிராமங்களைச் சேர்ந்த 52 ZP பள்ளிகளில் ரூ.14.56 லட்சம் மதிப்புள்ள CSR திட்டத்தின் வழியாக நீர்த்தூய்மைப் படுத்திகள் வழங்கப்பட்டன.



## RC மீரட் உமங் — RID 3100



RC மீரட் யுனீக் மற்றும் சந்திரமோகன் அறக்கட்டளை யுடன் இணைந்து, சங்கம் பள்ளியில் மழை நீர் திரட்டல் அமைப்பு நிறுவியது.

## RC நியூ பாம்பே சீசைட் — RID 3142

பெலாபூர் ஆச்சார்ய ஸ்ரீநானேஷ்வர் மருத்துவ மனைக்கு எட்டு ICU படுக்கைகள் (ரூ.10 லட்சம்) கொடையளிக் கப்பட்டன.



## RC குண்டூர் விகாஸ் — RID 3150



வாழும் ஆதரவற்ற பெண் ஒருவருக்கு இந்தச் சங்கம் 60 கிலோ அரிசியும் ஓர் ஆதரவற்றோர் பள்ளிக்கு 50 தட்டுகள் வழங்கியது.

## RC பலேஹொன்னூர் — RID 3182

ஒரு பன்னாட்டு நல்கை, கர்நாடக வங்கியின் நிதி வழியாக GHல் ஒரு டயாலிசிஸ் இயந்திரம் நிறுவப் பட்டது. DG ராமச்சந்திர மூர்த்தி, IPDG ராஜாராம் பட் பங்கேற்றார்கள்.



## RC குடூர் — RID 3160



ரூ.5 லட்சம் செலவில் புதுப்பிக்கப் பட்ட ஒரு பூங்காவை DG திருப்பதி நாயுடு தொடங்கி வைத்தார்.

## RC பெங்களூர் கன்டோன்மென்ட் — RID 3190

நலமான தாய், நலமான குழந்தை என்ற இந்தச் சங்கத்தின் இரண்டு ஆண்டுத் திட்டத்தின் கீழ், பால் கொடுக்கிற தாய்மார்கள், கர்ப்பிணிகள் 18 பேருக்கு மாதந்தோறும் ஊட்டச்சத்துப் பொதிகள் வழங்கப்படுகின்றன.



## RC ஹூப்ளி சென்ட்ரல் — RID 3170



ஹூப்ளியில் உள்ள ஒரு அரசுப் பள்ளியில் 450 மாணவர் களுக்குப் பல் மருத்துவ முகாமை நடத்தினார் Rtn Dr ஷ்ருதி படீல்.

## RC திருச்சூர் சிட்டி — RID 3201

இதய, நுரையீரல் நோய்களைப் பற்றிய விழிப் புணர்வை உண்டாக்க சங்கம் நடத்திய சைக்கிளத் தானில் 300 பேர் பங்கேற்றனர்.



# செய்திகள்

## RC காரமடை — RID 3203



அத்திக்கடவு கிராமத்துக்கு அருகில் சூராண்டி மலையில் பழங்குடியினருடன் சங்கம் பொங்கல் கொண்டாடியது ரூ.3.5 லட்சம் மதிப்பிற்கு மளிகைப் பொருட்கள், போர்வைகள் வழங்கியது.

## RC சிவகாசி — RID 3212

சங்கம் மாற்று திறனாளிகளுக்கு புத்தாடைகள், மளிகை பொருட்கள் பொங்களை முன்னிட்டு வழங்கியது.




## RC ஒடயாஞ்சல் — RID 3204




காசரகோடு மாவட்டம் அயரொடெ-ல் வசிக்கும் M K ஆதர்ஷூடைய க்ரோஹ்ன் நோய்ச் சிகிச்சைக்காக ரூ.20,000 அளவு நிதி உதவி வழங்கப்பட்டது.

## RC ரூர்கேலா க்வீன்ஸ் — RID 3261

பயிற்சிப் பயிலகங்களைத் தொடர்ந்து, RCC பிர்கேரா உறுப்பினர் களுக்குத் தையல் இயந்திரங்கள், அடுப்புகள் கொடையளிக்கப் பட்டன.




## RC ஆலப்பே கிரேட்டர் — RID 3211



தாத்தம்பள்ளி பிரிவில், நலிந்த பெண்களுக் கான பயிற்சி மையத்தைத் தொடங்கு வதற்காக ஆலப்பே நகராட்சிக்கு தையல் இயந் திரங்களை இந்தச் சங்கம் அளித்தது.

## RID 3291

என்டல்லி சப்தசிக்ஷா என்ற NGO ஆதரவுடன் ஒரு பரிசோதனை முகாம் நடத்தப் பட்டது. ரோட்டரியன் மருத்துவர்கள் 400 பேரைப் பல நோய்களுக்காகப் பரிசோதித்தனர்.



ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்

# திரைப்படம் பார்ப்பதில் பரிணாம வளர்ச்சி

LBW

TCA ஸ்ரீனிவாச ராகவன்

பல ஆண்டுகளுக்கு முன்னர் பெரும்பாலான மக்கள் திரைப் படங்களே ஆண்டுக்கு மூன்று அல்லது நான்கு பார்த்தனர். அப்போது படங்களின் எண்ணிக்கை குறைவாக இருந்ததே இதற்குக் காரணம். மக்கள் பெரும்பாலும் முன்னணி நட்சத்திரங்கள் நடிக்கும் திரைப்படங்களையே பார்ப்பார்கள். ஆனால், இதன் நன்மை என்ன என்றால், திரைப்படங்களுக்குச் செல்வது அதிக செலவு பிடிப்ப தாகவோ அல்லது அதிக நேரம் செலவழிக்கக்கூடியதாகவோ இல்லை. அதன் பிறகு, அதாவது 1990-களில் ஒரே வளாகத்தில் நான்கு அல்லது ஐந்து திரை யரங்குகள் வந்தன. இதற்கு முன்னோடியாக இருந்தது சென்னையில் 1960-களின் பிரபலமாக இருந்த சஃபையர் தியேட்டர். இங்கு மூன்று அரங்குகள் இருந்தன. ஒன்று தமிழ் திரைப்படத்துக்கானது. மிகப்பெரிய அரங்கு. மற்றொன்று ஆங்கிலப் படம் திரையிடப்படுவதற்கானது. மேலும் ஒன்று பல்வேறு மொழிப் படங்களுக்கு. இது மிகவும் சிறியது. நீங்கள் ஒரு டிக்கெட்டை வாங்கி, விரும்பினால் நாள் முழுவதும் படம் பார்க்கலாம். மெரினா கடற்கரையைவிட, மற்றவர்கள் கண்ணில் படாமல் இங்கு வந்து திரைப்படம் பார்ப்பது இளம் வயது காதலர்களுக்கு சௌகரியமாக இருந்தது.

மல்டிபிளக்ஸ் வருகைக்குப் பிறகு திரைப்படங்களுக்குச் செல்வது செலவு மிகுந்ததாக மாறிவிட்டது. ஒரு முறை நீங்கள் திரைப்படம் பார்க்க சென்று வந்தால், திரையரங்கில் நீங்கள் கொறிப்பது உள்பட குறைந்தது ரூ.1,000 அல்லது ரூ.1.500 வரை செலவாகிவிடும். அதனால், திரைப்படத்துக்குச் செல் வதே ஆடம்பரமாக இருந்தது. பல திரைப்படங்கள் திரைக்கு வந்தாலும், ஒரு குடும்பத்தினர், ஓர் ஆண்டுக்கு 6 படங்களுக்கு மேல் பார்ப்பதில்லை.

பின்னர் 2000ம் ஆண்டு வாக்கில் சாட்டிலைட் டி.வி. சகாப்தம் வந்தது. நீங்கள் வீட்டில் இருந்தபடியே எந்தசெலவும் இல்லாம் படம் பார்க்க முடிந்தது. ஆனால், சேனல்கள் மிகக் குறைவுதான். அதாவது மொத்தமே ஒரு டஜனுக்கு அதிகம் இல்லை. ஒரு வாரத்துக்கு மூன்று படம் என்று கணக்கிட்டால் கூட ஒரு வருடத்துக்கு 156 திரைப்படம் என்றாகிறது. சேனல்கள் தங்கள் வசம் இருந்த திரைப்படத்தை மட்டுமே ஒளிபரப்பின. எப்போதாவது தான் புதுப்படம் திரையிடப்படும். எனவே அடுத்த சில ஆண்டுகளில் சாட்டிலைட் டி.வி.யில் படம் பார்க்கும் மோகமும் குறைந்தது. திரைப்படங்கள் அதிக அளவில் வெளிவந்த போதிலும், பிராந்திய மொழி சேனல்களை அது ஈர்க்கவில்லை. 2000–2010ன் ஏற்றத்துக்குப் பிறகு, 2010 முதல் ஒரு தசாப்தத்திற்கு திரைப்படங் களுக்கான தேவை ஆயிரம் மடங்கு அதிகரித்ததால் நாம் மீண்டும் தொடங்கிய இடத்துக்கே சென்றோம். திரைப்படங்கள் இலவசம் என்றாலும் அதை பார்ப்பதற்கு ஒரு தொலைக்காட்சி பெட்டியும், சாட்டிலைட் டிஷ் இணைப்பும் தேவைப்பட்டது.

2015ம் ஆண்டிலிருந்து எல்லாமே மாறிவிட்டது. மலிவான விலையில் ஸ்மார்ட்போன்கள் மற்றும் டிஜிட்டல் உள்ளடக்கத் திற்கான இலவச அணுகல் 2020ல் நம்மை எங்கோ கொண்டு சென்று விட்டன. செலவுகள் குறைந்தன. நீங்கள் உலகில் எங்கிருந்தாலும் வசனத்துடன் படங்களைப் பார்க்க முடியும் என்ற நிலை உருவானது. நெட்பிளிக்ஸ், டிஸ்னி-ஹாட்ஸ்டார் மற்றும் அமெஸான் பிரைம் ஆகியவற்றின் மூலம் பொது முடக்க காலத்தில்கூட திரைப்படங்களை எளிதில் பார்க்க முடிந்தது. நீங்கள் விரும்பினால், உங்களுக்குத் தேவையான பகுதிகளை மட்டும் பார்க்கலாம். அதாவது 100 நிமிடம் ஓடும் படத்தை 'பாஸ்ட் பார்வேர்டு' மூலம் 60 நிமிடங்களாகக் குறைப்பதன் மூலம் ஒரு நாளைக்கு 10 திரைப்படங்களைக்கூட பார்க்கலாம்.

ஆனால், இப்போது புதிய சிக்கல் எழுந்துள்ளது. ஒரு மாதத்திற்குள் நான் பார்த்த திரைப்படங்களை மறந்துவிடுகிறேன். ஏனெனில், நான் அந்த படத்தை முழுமையாகப் பார்க்கவில்லை, வேறுசில வேலைகளுக்கு நடுவில் பார்த்தது, நடு நடுவே கிரிக்கெட் போட்டியை பார்த்தது, கட்டுரை எழுதுவது, தொலைபேசி அல்லது செல்லிடப்பேசியில் பேசுவது போன்றவை இதற்கு காரணமாக இருக்கலாம். வீட்டுவேலை செய்வது அரிதாகிவிட்டது. உங்கள் மனைவி என்ன செய்கிறார்? என்று நீங்கள் கேட்கலாம். நான் செய்வதைத்தான் அவளும் செய்கிறாள். திரைப் படத்தில் நான் பார்க்காத சில பகுதிகளை அவள் பார்க்கிறாள். நீங்களும் முயற்சி செய்யுங்கள்! தோனியும் ஜடேஜாவும் கிரீஸில் இருக்கும்போது விக்கெட்டுகளுக்கு இடையே ஓடுவதுபோல் இது இருக்கிறது.■

# செய்தித் துளிகள்



### ராகிங் எதிர்ப்பு செயலி

குர்கானில் உள்ள பாத்வேஸ் பள்ளியில் 8ம் வகுப்பு படிக்கும் 13 வயது மாணவி அனுஷ்கா ஜாலி, பள்ளியில் மாணவர்கள் மற்ற மாணவர்களால் கொடுமைப்படுத்துவதை நிறுத்த மொபைல் செயலி ஒன்றை உருவாக்கியுள்ளார். 2018ல் இந்த சமூக பாதுகாப்பு முயற்சியைத் தொடங்கியவர் கொடுமைப்படுத்துதல் எதிர்ப்புப் படை (ABS) செயலியை உருவாக்கினார். கல்வி நிறுவனங்கள், சமூக அமைப்புகள் மற்றும் நிபுணர்களின் உதவியுடன், 100க்கும் மேற்பட்ட பள்ளிகள் மற்றும் பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த 2,000க்கும் மேற்பட்ட மாணவர்கள் ABS மூலம் பயனடைந்துள்ளனர். மேலும் தொழில்முனைவோர் ரியாலிட்டி ஷோவான ஷார்க் டேங்க் இந்தியாவிடமிருந்து ரூ.50 லட்சம் நிதியுதவியையும் அச்செயலி பெற்றுள்ளது.



### வேகமாக உருகும் இமயமலை பனிப்பாறைகள்

2013ம் ஆண்டு முதல் மேற்கு இமயமலையில் உள்ள சந்திரா படுகையில் ஆறு பனிப்பாறைகளை கண்காணித்து வரும் துருவ மற்றும் பெருங்கடல் ஆராய்ச்சிக்கான தேசிய மையம் (NCPOR), கடந்த சில தசாப்தங்களாக இமயமலை பனிப்பாறைகள் 10 மடங்கு விரைவாக பனியை இழந்ததை உறுதிப்படுத்தி ஒரு ஆய்வை வெளியிட்டுள்ளது. கடந்த 400 முதல் 700 ஆண்டுகளில், பனிப்பாறைகள் சுமார் 40 சதவீத பரப்பளவை இழந்துள்ளன. 28,000 சதுர கிலோமீட்டரிலிருந்து சுமார் 19,600 சதுர கிலோமீட்டராக சுருங்கியுள்ளது. இதனால் விரைவில் ஆசியாவின் கோடிக்கணக்கான மக்களுக்கு கடுமையான நீர் தட்டுபாடு ஏற்பட வாய்ப்புகள் உள்ளன.



### பத்மஸ்ரீ விருது பெற்றவர் ஹெலிகாப்டர் நன்கொடை

சமீபத்தில் பத்மஸ்ரீ விருது பெற்ற ஹரி கிருஷ்ணா வைர நிறுவனத்தின் உரிமையாளர் சவ்ஜி தோலாக்கியா, தனது குடும்பத்தினர் பரிசாக வழங்கிய ரூ.50 கோடி மதிப்பிலான ஹெலிகாப்டரை நன்கொடையாக வழங்கினார். அந்த புதிய ஹெலிகாப்டர் சூரத் நகரில் மருத்துவம் மற்றும் பிற அவசரநிலைகளுக்கு பயன்படுத்தப்படும். லாயல்டி திட்டத்தின் ஒரு பகுதியாக தனது ஊழியர்களுக்கு கார்கள், தங்க நகைகள் மற்றும் இரண்டு படுக்கையறைகள் கொண்ட அடுக்குமாடி குடியிருப்புகளை வெகுமதியாக வழங்கியதற்காக அவர் முன்னதாக தலைப்புச் செய்திகளில் இடம்பெற்றிருந்தார்.



### பழிவாங்கும் குரங்குகள்

மகாராஷ்டிர மாநிலம் பீட் மாவட்டத்தில் ஆத்திரமடைந்த இரண்டு குரங்குகள் சுமார் 250 நாய்க்குட்டிகளைக் கொன்ற வினோதமான சம்பவம் ஒன்று வெளிச்சத்திற்கு வந்துள்ளது. அதே பகுதியில் ஒரு குட்டி குரங்கு கொல்லப்பட்டதை அடுத்து இந்த சம்பவங்கள் தொடங்கியதாக கூறப்படுகிறது. பழிவாங்குதல் அடிப்படையில் நாய்க்குட்டிகளை உயரமான கட்டிடங்களுக்கு எடுத்துச் சென்று கீழே வீசிய அந்த இரண்டு குரங்குகளை உள்ளூர் அதிகாரிகள் சிறைப்பிடித்தனர்.




### டெத் கஃபே விரிவடைகிறது

2011ல் லண்டனில் தொடங்கிய டெத் கஃபே இயக்கம் 70 நாடுகளில் பரவி 10,000 டெத் கஃபே சந்திப்புகளை நடத்தியுள்ளது. மரணத்தைப் பற்றி பேச விரும்பும் எவருக்கும் இந்த கஃபேக்களின் கதவுகள் இலவசமாக திறக்கப்படும். இக்கஃபேக்கள் ஒரு பாதுகாப்பான மற்றும் ஆதரவான சூழலில் மரணத்தைப் பற்றிய விவாதத்தை ஊக்குவித்து, அதனை பற்றி விழிப்புணர்வை அதிகரிக்கிறது. மேலும் மக்கள் தங்கள் இழப்பைச் சமாளிக்க ஆதரவாகவும் இருக்கின்றது. சந்திப்புகளில் டீ, காபி, கேக் ஆகியவையும் வழங்கப்படுகிறது.

ஒருங்கிணைப்பு: கிரண் ஜெஹரா; வடிவமைப்பு: S. கிருஷ்ணப்ரதீஷ்.

Registered No. TN/CCN/677/2022-2024 | Total number of pages in this monthly
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP-611/2022-2024 | issue, including cover, 84. Price: ₹35
Registered with Registrar of News Papers for India TNTAM/2018/76372 Rotary News Tamil Published on the first week of every month

# ரோட்டரி இதழுக்கு
# சந்தா செலுத்தாத சங்கங்கள் நீக்கப்படும்




*பல ஆண்டுகளாக ரோட்டரி சங்கங்கள் ரோட்டரி நியூஸ் இதழுக்கு சந்தா செலுத்தாமல் அல்லது நிலுவை கட்டணங்களை செலுத்தாமல் இருப்பது பிராந்திய இதழின் மேலாளர்களுக்கு விரக்தியை ஏற்படுத்தியுள்ளது. சந்தா செலுத்தாமல் இருப்பது, ரோட்டரியின் முக்கியமானச் செய்திகளைப் பகிர்ந்து கொள்வதில் நேரடியான தாக்கத்தை ஏற்படுத்துகிறது.*

*இணக்கமாக இல்லாத சங்கங்கள் பற்றி கடந்த நவம்பர் மாதம் நடந்த வாரியக் கூட்டத்தில் RI தொடர்புக் குழு விவாதித்தது. இதையடுத்து அவற்றுக்கான விதிமுறைகள் திருத்தியமைக்கப் பட்டுள்ளன. புதிய விதிகள்படி அத்தகைய சங்கங்கள் நீக்கப்படலாம் என்பதுதான்.*

| முந்தைய செயல்முறைகள் | புதிய செயல்முறை 2022 ஜுலை 1ல் தொடங்குகிறது |
|---|---|
| ரோட்டரி இதழ் அலுவலகம் இணக்கமாக இல்லாத சங்கங்கள் பற்றிய அறிக்கையை ரோட்டரி இன்டர்நேஷனல் அலுவலகத்துக்கு அனுப்பிவைக்கிறது. | **இணக்கமாக இல்லாத சங்கங்கள், பணம் நிலுவை வைத்துள்ளவா அல்லது சந்தா செலுத்தவில்லையா** என்று ரோட்டரி இதழ் அலுவலகம் ரோட்டரி தலைமைக்கு விளக்கம் அளிக்க வேண்டும். காலாண்டுக்கு ஒரு முறை அறிக்கை தர வேண்டும். |
| மாவட்ட செயலகத்திலிருந்து பெறப்படும் கடிதங்கள் ரோட்டரி இதழ் அலுவலகத்துடன் பகிர்ந்து கொள்ளப் படும். பின்னர் அவை சம்பந்தப்பட்ட சங்கங்களுக்கு அனுப்பிவைக்கப்படும். | இதழ் அலுவலகம் கடிதத்தை சங்கங்களுக்கு அனுப்பிவைக்கும். ரோட்டரி தனி கடிதம் மூலம் மாவட்ட ஆளுநருக்கு அறிவிக்கும். |
| சங்கத்தை இணங்கவைக்க அல்லது முடியாத பட்சத்தில் இடைநீக்கம் செய்ய 120 நாள் கால அவகாசம் உள்ளது. | சங்கத்தை இணங்க வைக்க அல்லது முடியாதபட்சத்தில் இடைநீக்கம் செய்ய **90 நாள்** கால அவகாசம் மட்டுமே உள்ளது. |
| சங்கம் இணக்கமாக இல்லை என்றால் ரோட்டரி இதழ் அலுவலகம் RIக்கு அறிக்கை அளிக்கும். அதன் பின் அந்த சங்கம் இடைநீக்கம் செய்யப்படும். | **90 நாள் சலுகை காலம் முடிவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்னதாக** ஒத்துழைக்காத சங்கங்களுக்கு நினைவூட்டல் கடிதம் அனுப்பப்படும். அப்போதும் அவை ஒத்துழைக்காவிட்டால் RIக்கு அறிக்கை அனுப்பப்படும். சங்கங்கள் இடைநீக்கம் செய்யப்படும். |
| செயல்முறைகள் இத்தோடு முடிகின்றன | இணக்கமாக இல்லாத **சங்கங்களின் இடைநீக்கம்** 180 **நாட்களுக்குப் பிறகும் தொடர்ந்தால், "அவற்றின் செயல்பாடுகளை நிறுத்துவது பற்றி வாரியமே முடிவு செய்யும்"** என்று மற்றொரு கடிதம் அனுப்பி வைக்கப்படும். சங்கம் கண்காணிக்கப்படும். |
| | **PETS & GETS** நிகழ்ச்சிகளில் கட்டாய சந்தாக்கள் பற்றிய தகவல்கள் இருக்கும். |
| | இணக்கமின்மையை வரையறுக்கும் வரம்பு சங்க உறுப்பினர்களில் 20 அல்லது 50 சதவீதமா என்பது தீர்மானிக்கப்படும். |

இந்த நடைமுறை இப்போது **ரோட்டரியின் நடத்தை விதிமுறைகளில்** சேர்க்கப்படும் என்பதால் அதிக இணக்கத்தை காண்போம் என்று எதிர்பார்க்கிறோம். வாரிய இயக்குநர்கள் தங்கள் பிராந்தியத்தில் ரோட்டரி இதழுக்கு ஆதரவு திரட்ட வேண்டும். **சங்கங்கள் இணக்கமாக இல்லாதது மற்றும் கட்டாய சந்தா நடைமுறை குறித்து மாவட்ட ஆளுநர்களும், சங்கத் தலைவர்களும் அறிந்திராதது குறித்து RI இயக்குநர்கள் ஆச்சர்யம் தெரிவித்தனர்.** அதாவது PETS மற்றும் GETS நிகழ்வுகளில் கட்டாய சந்தா நடைமுறைக்கு அதிக அளவில் எடுத்துரைக்க வேண்டும்.

**நமது மண்டலங்களில் உள்ள ரோட்டரி சங்கங்கள், தங்கள் சந்தா கட்டண நிலுவைகளை வைராக்கியத்துடன் செலுத்த முன்வர வேண்டும் என்று ரோட்டரி நியூஸ் (Rotary News) கேட்டுக்கொள்கிறது.**

ரோட்டரி இன்டர்நேஷனல்